
# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

டிசம்பர்-2015
பருவம் 2 புனல் 15

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

## குடி அழித்த அரசுகளை
## குடிஅரசால் வழிநடத்துவோம்!





# தோழர் பெரியார்
# 42 ஆவது நினைவுநாள்

மோட்சமும் சுவர்க்கமும்; இன்றயை கள்ளுச் சாராயக் கடைகளைவிட, தாசி வேசிகள் வீடுகளைவிட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். மோட்ச நரகம் என்பது, எப்படி திருடர்கள் பிரயாணிகளை வழிப்பறி செய்வதற்கு தனி வழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக்கொண்டு வந்து வழி மறித்து மண்டையை உடைக்க தடிக் கம்பையும், ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்லுகின்றார்களோ, அது போலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழிமறித்துப் பொருள் பறித்துப் போகச் செய்து கொண்ட ஆயுதங்களேயாகும். ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாக வேண்டும்.

இந்த உலக வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் மக்களுக்கு உதவி செய்வதையும், தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப் படாமலிருக்க வேண்டியதையே மோட்சம் என்று மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும், தேவைக்கும் மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்ளுவதையே மக்களை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையென்று நாம் கருதவேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படி தனது தேவைக்கும், அளவுக்கும் தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவரது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசை காட்டி இங்கு தட்டிப் பிடுங்கிக் கொள்ளுகின்றார்கள்.

சகோதரர்களே இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப் போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்படவேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அதுபோலவே நரக உணர்ச்சியும், அடிமைத்தனத்தினுடையவும், பயங்காளித் தனத்தினுடையவும், பிரதி பிம்பமாகும். நரகத்திற்கு பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகின்றான். தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான். இவைகளை யெல்லாம் விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால் சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும் விட மனிதனுக்கு விதி கர்மபலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதி கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால் இன்றைய தினம் இந்தியா அநேக விஷயங்களில் ருஷியர்களுக்கு - ஏன் இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும் சம இன்பத்தையும் இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து சர்வ சுதந்திரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

ஆகையால் இந்த கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச நரக நம்பிக்கைகள் மனிதத்தன்மைக்கு மிகவும் கேடான எதிரி என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள் தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்தியா சுயமரியாதை பெற்றுவிடும்; மனிதத் தன்மை அடைந்து விடும். ஆகையால் சகோதரர்களே நீங்கள் இந்திய நாட்டின் முற்போக்கிற்கும், விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபடவேண்டுமானால் மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோழர் பெரியார், பகுத்தறிவு - சனவரி 1937

www.periyarwritings.org

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**ஆசிரியர்**
சி. இராவணன் 97868 89325

**உரிமை & வெளியீடு**
சி.விஜயராகவன்

**சட்ட ஆலோசனைக்குழு**
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரத் தொடர்பு**
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

**விற்பனைத் தொடர்பு**
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

**சந்தா தொடர்பு**
அ. கிருட்டிணகுமார்
97882 97428

**வடிவமைப்பு**
Mukizh Media
97873 20044

**அச்சு**
செல்வக்குமார்
BS Graphics, Chennai

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு**
103/104, Nethaji Road,
M.C.Complex,Pollachi. 642 001
kaattaaru2014@gmail.com

**பெரியார் சரித்திரத்தில் ஒரு தொடர் நிகழ்வு; தொடர் செயல்.அதில் முற்றுப்புள்ளிகளுக்கே இடமில்லை!**



# கலகக்காரத் தோழர் பெரியார்

திராவிடர் சமுதாயத்தை திருத்தி உலகில் ஏனைய சமுதாய மக்களைப் போல மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக மாற்றிட 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் சதையும், எலும்பும், பற்களும் தேயத் தேய உழைத்த கலகக்காரத் தோழர் பெரியார் உடலால் மறைந்து 42 ஆண்டுகள் ஆகிறது.

பார்ப்பன எதிர்ப்புணர்வும் சீர்திருத்த உணர்வும் கொண்ட அறிஞர்களும் செயல்வீரர்களும் இந்தியாவில் பலமுறை தோன்றியுள்ளனர். புத்தர் தொடங்கி பூலே வரை இவர்களது எண்ணிக்கை ஏராளம் அவர்களில் யாரும் பெறாத வெற்றியைப் பெரியார் மட்டுமே பெற்றார் அதுவும் தம் வாழ்க்கையிலேயே பெற்றார் அவ் வெற்றிக்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்:-

1. கடவுள் மறுப்புச் சிந்தனையோடு, நாத்திகத்தோடு, பார்ப்பனிய எதிர்ப்பினை முன்வைத்தவர் வரலாறு முழுமைக்கும் பெரியார் ஒருவரே.

2. எதிரிகள் வீழ்த்தவும், ஏமாற்றவும் முடியாதபடி அவர் தன்னலமற்ற வராகவும், கறை படியாத கைகளோடும் வாழ்ந்தார்.

3. நீதி மன்றமாக இருந்தாலும், காங்கிரஸ் தலைவர் காந்தியாக இருந்தாலும் கொள்கைக்காக யாரையும் நேரடியாக எதிர்க்கும் நெஞ்சுரம் அவரிடம் இருந்தது.

4. தன்னை நாடி வந்த எல்லா அரசுப் பதவிகளையும் பெரியார் உதறித்தள்ளினார். பதவியால் வரும் அதிகாரமும், சுகமும் இந்தியச் சூழலில் நல்ல கொள்கைகளுக்கு எதிரியாய் முடியும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

5. கழத்தில் இருக்கும் ஒரு போராளியைப்போல ஒவ்வொரு நிமிடமும் பார்ப்பன ஆதிக்கச் சத்திகளை அளந்து அளந்து தன் எதிர் நடவடிக்கை களைத் தொடங்கினார் இத்தகைய விழிப்புணர்ச்சி அவரது வாழ்நாள் முழுவதும் அவருக்கு இருந்தது.

6. சிறுவயதிலிருந்தே நடைமுறை வாழ்நிலைக்குப் பயன்படாத பள்ளிப்படிப்பை நிராகரித்து இருந்த பெரியார் புத்தகப் படிப்பாலும் சுய சிந்தனையாலும் தன்னுடைய கல்வியையும் கொள்கையையும் செழுமைப் படுத்திக்கொண்டே இருந்தார். வருங்காலத்தில் ஆண் - பெண் உடலுறவு இல்லாமல் சோதனைக் குழாயில் குழந்தைகள் பிறக்கும் என்று 1938 இல் விஞ்ஞானத்தின் மீது வைத்த நம்பிக்கையால் எழுதினார். அவரே 1943 இல் வருங்காலத்தில் கம்பியில்லா தந்தி ஒவ்வொருவரின் சட்டைப் பையில் இருக்கும் என எழுதினார்.



பெரியார் நடத்திய போராட்டங்கள்

1. வைக்கம் போராட்டம் - 1924
2. சேரமா தேவி குருகுலப் போராட்டம் - 1924
3. கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்துப் போராட்டம் - 1937
4. இரயில் நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்குத் தனி இடம் ஒதுக்கும் முறையை எதிர்த்து இரயில் நிலையப் போராட்டம் - 1938
5. இந்தி எதிர்ப்புப் போராட்டம் - 1948
6. வடவர் சுரண்டல் தடுப்புப் போர் - 1950
7. வகுப்பு உரிமைப் போராட்டம் - 1951
8. இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம் - 1952
9. விநாயகர் சிலை உடைப்புப் போராட்டம் - 1953
10. தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகளில் குலக்கல்வித் திட்டம் நுழைக்கப்பட்டதை எதிர்த்து குலக்கல்வி ஒழிப்புப் போராட்டம் - 1954
11. இராமன் பட எரிப்புப் போராட்டம் - 1956
12. சாதி ஒழிய இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் - 1957
13. சாதி ஒழிப்பிற்கு அரசியல் சட்டமே வக்காலத்து வாங்குகிறது என்றும், சாதிகள் இன்னும் நீடிக்கும் என்றால் சுதந்திரத் தமிழ்நாடு பெற போராடுவது தவிர வேறுவழி இல்லையயன்றும், இதையோட்டி தமிழ்நாடு இல்லாத இந்திய தேசியப் படத்தை எரிக்கும் தேசப்பட எரிப்புப் போராட்டம் - 1973

1973 டிசம்பர் 8,9 தேதிகளில் தமிழர் சமுதாய இன இழிவு நீங்க சென்னையில் மாநாடு கூட்டி போராட்டங்களை அறிவித்து போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் சென்னை தியாகராய நகரில் சிந்தனையாளர் மன்றம் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையே அவர் வாழ்நாளில் ‘இறுதிச் சொற்பொழிவு’ - ‘மரண சாசனம்’ என்பதாக அமைந்து உடல் தளர்ந்து அவ்வப்போது நோயின் கடுமையால் வலியால் துடித்தபோதும் உடற்சுகங்களையோ, ஓய்வுகளையோ கருதாது 94 வயதுவரை சந்தித் திடல்களில் மக்களைச் சந்தித்து கொள்கைகளைப் பேசிக் கொண்டிருந்த பெரியார் 24.12.1973 அன்று திராவிடர் இன மக்களை பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு உடலால் கலகக் காரத் தோழர் பெரியார் மறைந்தார்.

இத்தகைய நீண்ட காலம் அதுவும் மரணத்திற்கு அருகில் நின்றவரை போர்க்குணத்தோடு உலாவிய தலைவர் இந்தியாவில் வேறு யாரும் இல்லை. தூங்காமை, கல்வி (பட்டறிவு) துணிவுடைமை அனைத்துக்கும் மேலாகத் தன்னலமின்மை ஆகியப் பண்புகள் நிறையப் பெற்ற பெரியார் மறைந்த போது இதழாளர் தோழர் சோலை அவர்களின் இரங்கல் உரை.

**மனிதத் தூதன் போகின்றான்..! அதோ!**
**மனித இனத்தின் தூதன் போகின்றான்!**

சமுதாயத்தைச் சீர்திருத்த வந்த சரித்திர நாயகர்கள் பலரை வரலாறு சந்தித்து இருக்கிறது சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண போதி மரத்திலிருந்து புறப்பட்ட புத்தன் வெற்றி பெறவில்லை அவனது சமுதாய மறுமலர்ச்சி சமயத்தின் ஒரு கிளையானது. தென்னகத்தே ஒரு இராமலிங்கன் தோன்றினான். முடை நாற்றம் வீசுகின்ற மூடப்பழக்கங்களைச் சுட்டெரிக்கப் புறப்பட்டான். கடைசியில், “கடைவிரித்தேன்; கொள்வாரில்லை” என்று கடையை மூடி நடையைக் கட்டினான். அவனது இயக்கமும் சமயத்தின் ஒரு வடிகாலானது.

ஆனால், இந்த நூற்றாண்டில் ஈரோட்டிலிருந்து ஒரு வெண்தாடி வேந்தன் ஊன்றிய தடியோடு ஊர் முழுக்கச் சுற்றுலாக் கிளம்பினான். அவன் தனது சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு சமயத்தை, கடவுளை, சாஸ்திரத்தை அடித்தளமாகக் கொள்ளவில்லை, அத்தனைத் தீமைகளுக்கும் அவைகளே ஊற்றுக்கண் என்பதை உணர்ந்தான்! எனவே சாதியைச் சாடினான்! சமயத்தைச் சாடினான்! கடவுளர்களை வாதுக்கு அழைத்தான்! அவன் தேவ தூதன் அல்ல; மனித இனத்தின் மங்காப்புகழ் கொண்ட தூதன். மனித இனத்தின் அந்தத் தூதன்தான் அதோ! போகின்றான்.

சாதிக்குள்ளே - சமயத்திற்குள்ளே குட்டிக்கரணம் போட்டவர்களையேல்லாம் - அவர்கள் எவ்வளவு பெரிய சமுதாயச் சீர்திருத்த வாதிகளாக இருந்தாலும் சாதி, சமயத்தின் காவலர்கள் முக்காடு போட்டு, விபூதிப் பொட்டலத்தைக் கொடுத்துக் கடவுளர்களாகவே ஞானிகளாகவோ ஆக்கி, அவர்களது கதையை “முற்றும்” என்று எழுதினர். ஆனால் அவர்களை வென்று, சாதிகளையும் வென்று இன்றைக்கு கலப்புமணம் செய்தால் அரசுப் பரிசு என்ற நிலையை உருவாக்கிய மனிதத் தூதன் அதோ! போகின்றான்.

தென்னகத்தின் தேசிய விடுதலை இயக்கமே அவனது வீட்டுத் தொட்டிலிலேதான் பிறந்து வளர்ந்தது. அதற்காக அவன் இழந்தது ஏராளம்! பொது நிலையங்களில் அவன் ஏற்றிருந்த 29 பதவிகளைத் தாராளமாகத் துறந்தான். வாணிபத்தில் வந்த ஆண்டுக்கு 20 ஆயிரம் வருமானத்தை இழந்தான்.

இந்தப் போரின் முடிவே ஈரோட்டு இராமசாமியின் மனைவி மற்றும் தங்கையின் கரங்களிலேதான் இருக்கிறது என்று காந்தியடிகளே கூறினார் ஆம்! அடிமையுண்ட இந்தியாவில் தென்னகத்தின் தளபதியாக அவன் பவனி வந்தான். சுதந்திரம் கேட்டு சொத்துக்களை இழந்த அந்த மனிதத் தூதன்தான் அதோ போகின்றான்.

தீண்டாமைப் பேயைத் தீர்த்துக்கட்டிட அவன் வைக்கத்தில் கொடி உயர்த்தினான். சமுதாயத்தின் நான்கில் ஒரு பகுதி மக்களுக்கு அடைத்துக்கிடக்கும் ஆலமரத்தின் கதவுகளைத் திறக்கக் கோரி சிங்கமென கர்ஜித்தான்! அதற்காக அவன் சிறையிலேயே பூட்டப்பட்டான்! இன்றைக்கு எல்லா ஆலயக் கதவுகளும் எல்லோருக்கும் திறந்தே கிடக்கின்றன. அந்தச் சாதனையின் சின்னமாகப் பவனி வந்த மனிதத் தூதன் அதோ! போகின்றான்!

சாதியை ஒழித்திட அவன் பட்டி தொட்டியெல்லாம் நடந்தான். அதற்காக அவன் கல்லடி பட்டான், சொல்லடி பட்டான். நிர்வாணமாக நின்ற தமிழ் சமுதாயத்திற்கு அவன் தன்மான ஆடை தரித்தான். அதற்காக அவன் நிர்வாண மாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் இன்றைக்கு எவர் கோட்டைக்குவரினும் அவரது பள்ளியில் படித்தபிள்ளைக ளே அவர்கள் என்ற நிலை உருவாகி இருக்கிறது....

தனது வாழ்நாளிளேயே இத்தகைய மகத்தான சாதனையை மணிமகுடமாக்கிக் கொண்ட அந்த மனிதத் தூதன் அதோ! போகின்றான்

தமிழகத்தில், முதன் முதலாக சமதர்ம இயக்கத்திற்கு வித்து ஊன்றிய வித்தகனும் அவனே, புரட்சியில் மலர்ந்த சோபிதமான சோவியத் யூனியனில் இங்கிருந்து சென்று உலவிய முதல் மகனும் அவனே. அவன்தான் எங்களுக்கு மாமேதை லெனினை அறிமுகம் செய்தான். அவன்தான் மார்க்ஸையும், ஏங்கல்ஸையும் "குடி அரசு" ஏட்டின் மூலம் ஊரெல்லாம் நாடெல்லாம் அழைத்துச் சென்றான் இன்றைக்கு உலகின் மூன்றில் ஒரு பகுதியில் ஆட்சிக்கொடிப் பறக்கின்ற செங்கொடியின் தத்துவப் பெரியார் - "கம்யூனிஸ்ட் அறிக்கையை" முதன் முதலாக தமிழகத்தில் வெளியிட்டவனும் அவனே. 1938 ஆம் ஆண்டு டாங்கே தலைமையில் சுயமரியாதை சமதர்ம வாதிகளின் மாநாடு கண்டவனும் அவனே . 40 ஆண்டு களுக்கு முன்னேயே பொதுவுடமைத் தத்துவங்களைப் புத்தங்களாக நடமாட விட்டவனும் அவனே.

தேசிய விடுதலை இயக்கமா? அவனே முதல்வன்! பொதுவுடமை இயக்கமா? அவனே முன்னவன்! சுயமரியாதை இயக்கமா? அவனே முதல்வன்! தன்மான இயக்கமா? அவனே முன்னவன்! மொழி காக்கும் இயக்கமா? அவனே முதல்வன்! ..மனித இனத்தின் தூதன்தான் அதோ போகின்றான்.

அவன் கண்ட போராட்டங்கள் எத்தனை? ஆனால் மனித இனம் உய்யத்தான் அத்தனைப் போராட்டங்களையும் கண்டான். அவன் ஒரு பிறவிப் போர்வீரன்! எங்கள் கட்டுகளை அறுக்க அவன் போராடிக்கொண்டோ இருந்தான். அவன் வயதில், அறிவில் முதியோன்! ஆனால் நாட்டின் வாய்மைப் போருக்கு என்றுமே அவன் இளைஞன்.

அதோ! மனித இனத்தின் அந்தத் தூதன் போகின்றான்! புகழ் சுமந்து போகின்றான்! எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்று நிறைவோ போகின்றான்! ஆம்; அவன் எங்கே போகின்றான்? வாழ்க்கைப் பயணம் முடிந்தது என்று போகின்றானா? அவன் சிந்திக்கத் தெரிந்த மனிதர்களின் இதயங்களில் எல்லாம் குடி கொள்ளப் போகின்றான். அறிவுக்கண் திறந்த உலகமெல்லாம் நீங்காது நிலை கொள்ளப் போகின்றான்! அதோ! மனித இனத்தின் அந்தத் தூதன் போகின்றான்!

கலகக்காரத் தோழர் பெரியாரும், அவரது இயக்கமும் உழைத்த உழைப்பின் பயன்தான் இந்து இந்திய தேசிய பார்ப்பன வல்லாதிக்க நாடான இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களைக் காட்டிலும் ( ஒப்பீட்டளவில் ) திராவிட நாட்டில் ( தமிழ் நாட்டில் ) சாதி, மதம், கடவுள், பெண்ணடிமை, பார்ப்பன ஆதிக்கம் தளர்ந்து சமூகநீதி மேல் ஓங்கிய மாநிலமாக உள்ளது.நாம் இன்னும் கடக்க வேண்டிய தூரம் வெகு தொலைவில் உள்ளது. எனவே, காட்டாறு வாசக இளைய தோழர்களே! கலகக்காரத் தோழர் பெரியாரின் பணிமுடிக்க குடி அரசுப் பள்ளிகளில் இணைவோம்! பெரியாரியலை முழுமையாகக் கற்போம் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியை வென்றெடுக்க கலகக்காரத் தோழர் பெரியாரின் நினைவு நாளில் உறுதியேற்போம்..!

**பொள்ளாச்சி விஜயராகவன்**
வெளியீட்டாளர்



# நீரின் தடம் அழிக்கப்பட்டது

**டி.எல்.சஞ்சீவிகுமார்**
தமிழ் இந்து நாளேடு

புவியியல் அமைப்பின்படி கடலூர் ஒரு வடிநிலம். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் தண்ணீரின் கணிசமான அளவு அந்த வடிநிலம் வழியாகத்தான் கடலை அடைகிறது.

மலைகளில் இருந்து கற்பனைக் கெட்டாத வேகத்தில் சமவெளியை நோக்கி வரும் காட்டாற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நமது முன்னோர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் குற்றாலம், ஸ்ரீவில்லிப்புத்தூர், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட ஏராளமான இடங்களில் நூற்றுக்கணக்கான சங்கிலித் தொடர் குளங்களையும் ஏரிகளையும் அமைத்தார்கள்.

அவை காட்டாற்றின் சீற்றத்தைத் தணித்தன. முதல் வேகத்தடை இது. பின்பு தமிழகம் முழுவதும் இருந்த சங்கிலித் தொடர்கள் ஏரிகள், குளங்கள் எல்லாம் அடுத்தடுத்த வெள்ளத் தடுப்புச் சாதனங்களாக ( Flood moderator ) செயல்பட்டன. இப்படியாக மலையடிவாரம் தொடங்கி வடிநிலம் வரையில் ஏரிகள், குளங்களை நிரப்பிய தண்ணீர், கடலூரில் யாருக்கும் தீங்கு விளைவிக்காமல் நல்லப் பிள்ளையாகக் கடலைச் சென்று அடைந்தது.

ஆனால், நாம் அடிவாரம் தொடங்கி வடிநிலப் பகுதி வரை ஏராளமான ஏரிகளை, குளங்களை அழித்துவிட்டோம். தனது இருப்பிடங்களை எல்லாம் இழந்த வெள்ளத்துக்கு வேறுவழியில்லை, அது வேகமாக கடலூரை நோக்கிச் சீறிப்பாய்கிறது. நொந்து சாகிறார்கள் அந்த மக்கள்.

கடலூரில் இறந்தவர்கள் அனைவரும் ஏழைகள், வீடற்றவர்கள், நிலையான வாழ்வாதாரம் இல்லாதவர்கள். குழந்தைகள்கூட வெள்ளத்துக்கு இரையாகி விட்டதுதான் கொடுமை. அசந்து உறங்கிக்கொண்டிருந்த அந்தப் பிஞ்சுகளை வெள்ளம் அடித்துச் சென்றபோது அவர்கள் எப்படிக் கதறியிருப்பார்கள். யார் மீது தவறு?

அந்தக் குழந்தைகளின் குடும்பம் வசித்த இடம் பெரியக்காட்டுப்பாளையம் நீர் வழி புறம்போக்கு. உளுந்தூர் பேட்டை, சேந்தநாடு, திருவெண்ணை நல்லூர், கள்ளக்குறிச்சி, கல்வராயன் மலை ஆகியப் பகுதிகளின் வனங்களில் பெய்யும் மொத்த மழை நீரும் சில்லோடை உள்ளிட்ட காட்டு ஓடைகளாக அந்த நீர்வழி புறம்போக்கு வழியாகதான் பண்ருட்டியில் இருக்கும் கெடிலம் ஆற்றுக்கு செல்லும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தண்ணீர் பயணித்த மரபு வழித்தடம் அது. ஆனால், அந்த வழித்தடம் முழுக்க ஆக்கிரமிக்கப் பட்டிருந்தது.

# இன ஈர்ப்பு ஃபெயிலியரா ?

இன்று ... என் அலுவலகத்தில் நடந்த ஒரு நிகழ்வு ... எனக்கு அடுத்த கணினியில் அமரும் ஒரு பெண் நன்பருக்கும் எனக்குமான பேச்சு ...

*நண்பர் :* தமிழ்வாணன் நீங்க ஏன் உர்ருன்னு இருக்கீங்க எப்பமே ?? லவ் ஃபெய்லியரா ??

*நான் :* எனக்கு லவ் லாம் பிடிக்காதுங்க ...

இன ஈர்ப்பு வரும் அவ்ளோ தான்

*நண்பர் :* சரி இன ஈர்ப்பு ஃபெய்லியரா ??

*நான் :* இன ஈர்ப்பு ஃபெய்லியர்லாம் இல்லைங்க ..

நான் எப்பமே இப்டி தான்

*நண்பர் :* சரி உங்க பாஸ்ட் இன ஈர்ப்பாளர் என்ன பன்றாங்க??

*நான் :* இன்னேரம் தூங்கிட்ருப்பாங்க ...

*நண்பர் :* ஏன் பிறிஞ்சுட்டீங்க ??

*நான் :* அவங்களுக்கு பிறிஞ்சு போகனும் னு தோனுச்சு .. அதான் பிறிஞ்சு போய்டாங்க..

*நண்பர் :* அதெப்படி ?? காதல்னு ஒன்னு சேர்ந்தா கடைசி வரைக்கும் ஒன்னா இருக்கனும் ...

தப்பில்லையா அவங்க பன்னது ??

*நான் :* இல்லைங்க!!

அவங்க விருப்பத்திற்காக இணைஞ்சாங்க ...

அவங்க விருப்பத்திற்காக பிறிந்து போறது அவங்க உரிம

*நண்பர் :* என்னங்க இப்டி சொல்றீங்க...

உங்களுக்கு கஷ்டமா இல்லையா ??

எவ்ளோ நம்பி இருப்பீங்க .... ஏமாத்திட்டாங்களே !!!

*நான் :* இல்லைங்க .. நான் யாரையும் நம்பல , கஷ்டப்படவும் இல்ல பெருசா ... ஆனா அப்போ அப்போ நம்ம கஷ்டத்த, சந்தோஷத்த, காமத்த பகிர்ந்திக்க அவங்க இல்லையே னு தோணும் ...

*நண்பர் :* அதாங்க லவ்

*நான் :* இல்லைங்க லவ்னா அவங்க எனக்காகத்தான் னு நெனச்சுட்டு இருக்கறது ... எனக்கு கடினமான ஃபீலிங்க விட அவங்களோட தனி மனித உரிமைய தான் மதிக்கனும்னு தோணுது ..

*நண்பர் :* இப்படியே எல்லாரும் இருந்துட்டா எந்த பிரச்சனையும் இல்ல போல

*நான் :* ஆமாங்க... அதுக்கு முன்னாடி நம்மள நாம சைக்காலஜிக்கலா பலப்படுத்திகனும் ..

*நண்பர் :* எனக்கு அதுலாம் தெர்யாது பா ...

சரி அவங்க கிட்ட எது உங்களுக்கு ரொம்பப் பிடிச்சது ??

*நான் :* அவங்க தண்ணி அடிப்பாங்க ...

அத என் கிட்ட ஒப்பனா சொன்னாங்க ...

அவங்க தைரியமும் ஆட்டிட்யூடும் தான்ங்க பிடிச்சது !!!

என்ன தைரியமா நீ எனக்கு வேணாம் னு சொன்னாங்களே

அப்போ தான் எனக்கு ரெண்டாவது முறை புடுச்சது ..

*நண்பர் :* அய்யயோ !! தண்ணி அடிப்பாங்களா ??

*நான் :* ஆமாங்க ... தப்பில்ல....

எல்லா விசயத்திலும் சுயமரியாதையா, தான் னு இருப்பாங்க

*நண்பர் :* அப்போ பொண்ணுங்க குடிக்கலாமா ??

*நான் :* யார் வேணாலும் எத வேணாலும் குடிக்கலாம் ...

ஃபினாயில கூட ... அது அவங்க உரிமை

*நண்பர் :* அய்யோ விடுங்க ... இதுலாம் ஓவர்

*நான் :* வெளிநாட்டு காரங்களப் பாருங்க..

அவங்களும் குடிக்கிறாங்க...

எங்கயாவுது ப்ரச்சனை பண்றாங்களா..

*நண்பர் :* அதுவும் கரக்ட் தான்

*நான் :* அதுக்காக குடிக்கணும் னு சொல்லல ..

என் எக்ஸ் குடிக்றாங்கனா அது அவங்களுக்குப்புடிச்சுருக்கு பண்றாங்க ... விடுங்க ...

எனக்கு அது தேவையில்லாதது

*நண்பர் :* அவங்க ஃபோட்டோ காட்டுங்க

*நான் :* இவங்க தான்

*நண்பர் :* உங்க சைஸ்லயே இருக்காங்க


*நான் :* ஆமாங்க அதுவும் ஈர்ப்புக்கு ஒரு காரணம்

*நண்பர் :* இப்படி பேசுறீங்க.. அப்றோம் ஏன் போனாங்க ??

*நான் :* ஏங்க இருந்து தான் ஆகனும்னு சொல்ல இது அடிமை முறை இல்லைங்க

*நண்பர் :* சூப்பர்... வெரி குட் !!!

*மனதுக்குள் ஒருவரின் மதியைக்கொஞ்சம் சிந்திக்கத் தூண்டிவிட்டோம் என்கிற ஆனந்தம் .. ????*



**-தமிழ்வாணன்**
பெரியாரியப் பெண்விடுதலை இயக்கம்

– வாலாசா வல்லவன்

# நீதிக்கட்சியின் சமூகப்புரட்சி

ஆதிதிராவிடர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏராளமான தொகை கடன் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 31.10.1931 இல் சட்டமன்றத்தில் ரங்கநாத முதலியார் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ஆதிதிராவிடர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எவ்வளவு கடனாக தரப்பட்டது. அதில் எவ்வளவு தொகை திரும்பப் பெறப்பட்டது என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு அரசு தெரிவித்த பதில் வருமாறு:

| கடன் கொடுத்த ஆண்டுகள் | கடன் கொடுத்த | கடன் வசூலான |
|---|---|---|
| 1921-22 | 1,04,543 | 73,728 |
| 1922-23 | 1,40,340 | 87,886 |
| 1923-24 | 93,005 | 63,413 |
| 1924-25 | 4,29,465 | 1,89,732 |
| 1925-26 | 2,07,542 | 76,748 |
| 1926-27 | 5,53,283 | 1,30,098 |
| 1927-28 | 51,252 | 60,180 |
| 1928-29 | 49,377 | 1,12,897 |

(ஆதாரம் சென்னை சட்டமேலவை விவாதக் குறிப்புகள் தொகுதி LVIII பக் 268)

அனைவருக்கும் கட்டாயக் கல்விச் சட்டம் G.O.No.376 சட்டம் (கல்வி) நாள் 9.3.1923 தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தனர். நீதிக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கல்வித்துறையில் உயர்கல்விக்கே அதிகமாக செலவழித்து வந்தனர். இதனால் பெரிதும் பயனடைந்தவர்கள் பார்ப்பனர்களே. அதை மாற்றிப் பெருமளவு நிதி தொடக்கக் கல்விக்குச் செலவழிக்க வேண்டுமென நீதிக்கட்சியின் மாநாடுகளில் வலியுறுத்தப் பட்டது. அதனை ஆட்சிக்கு வந்தவுடன் செயல் முறையிலும் நடைமுறைப்படுத்தினர். தொடக்கக் கல்விக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்து வந்த மானியம் விவரம்:

| ஆண்டு | தொகை |
|---|---|
| 1920-21 | 34,79,134 |
| 1921-22 | 30,37,641 |
| 1922-23 | 41,72,787 |
| 1923-24 | 44,51,359 |
| 1924-25 | 49,43,065 |
| 1925-26 | 55,37,396 |

(ஆதாரம் சட்டமன்ற விவாத குறிப்புகள் பக் 407 நாள் 27.8.1927.)

அந்தக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தான் தொடக்கக் கல்வியை - பள்ளிகளை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. 28.7.1929 இல் K.V.A சாமி என்பவர் சட்டமன்றத்தில் 1921 முதல் 1928 வரை புதிதாகத் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள் எத்தனை என்று கேள்வி கேட்டார். அரசு தரப்பில் 19, 095 பள்ளிகள் என்று பதில் அளிக்கப்பட்டது. 1925 – 26 இல் அரசு ஊழியர் வகுப்பு வாரி விவரத்தைச் சென்னை அரசின் நிர்வாக ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரம்.

| வ.எண் | வகுப்பு | கெசட்டதுளி | கெசட் அல்லாத பணி மாத வருமானம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 100ரூபாய்க் மேல் | 35ரூபாய்க் மேல் | 35ரூபாய்க் கீழ் |
| 1. | பார்ப்பனர் | 402 | 3, 403 | 8, 197 | 923 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 215 | 1,901 | 5, 238 | 29, 357 |
| 3. | ஆதி திராவிடர் | – | 2 | 51 | 1, 175 |
| 4. | முகமதியர்கள் | 53 | 323 | 1, 139 | 9, 445 |
| 5. | ஆங்கிலோ இந்தியர் | 408 | 458 | 706 | 38 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 102 | 456 | 643 | 1, 663 |
| 7 | மற்றவர்கள் | 16 | 2 | 17 | 412 |

ஆதாரம்: 1925 – 26 ஆம் சென்னை மாகாண அரசின் ஆண்டறிக்கையின் பக்க எண் 201

| வ.எண் | வகுப்பு | கெசட்டட் பணி | கெசட் அல்லாத பணி | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூ100க்கு மேல் | ரூ35க்கு மேல் | ரூ35க்கு கீழ் |
| 1. | பார்ப்பனர் | 656 | 3, 935 | 9, 827 | 1,400 |
| 2. | பார்ப்பனரல்லாதார் | 351 | 2, 506 | 8, 433 | 35, 769 |
| 3. | ஆதி திராவிடர் | 6 | 27 | 111 | 1, 870 |
| 4 | முகமதியர்கள் | 101 | 404 | 1, 821 | 10, 556 |
| 5. | ஆங்கிலோ இந்தியர் | 392 | 474 | 522 | 22 |
| 6. | இந்தியக் கிறித்தவர் | 11 | 750 | 1, 551 | 2, 648 |
| 7. | மற்றவர்கள் | – | 9 | 25 | 154 |

(1.04.1935 இல் வெளியிடப்பட்ட அரசு ஆண்டறிக்கை பக் 207)

இந்த இரண்டு புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆதி திராவிடர்கள், மற்றும் பார்ப்பனரல்லாதார் அரசு வேலைகளில் சற்று அதிகரித்திருப்பதைக் காணலாம்.

முத்தையா முதலியார் பிறப்பித்த உத்தரவில் வகுப்புவாரி சுழற்சி முறை 1928 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 5 | 44 % |
| 2. பார்ப்பனர்கள் | 2 | 16% |
| 3. முகமதியர்கள் | 2 | 16% |
| 4. ஐரோப்பியர் ஆங்கிலோ இந்தியர் | 2 | 16% |
| 5. ஆதி திராவிடர்கள் | 1 | 8% |
| மொத்தம் | 12 | 100 |

இந்த பனிரெண்டு இடங்களும் சுழற்சி அடிப்படையில் நிரப்பப்பட்டன.

1. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
2. முகமதியர்கள்
3. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
4. ஆங்கிலோ இந்தியர் இந்திய கிறித்தவர்
5. பார்ப்பனர்
6. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
7. ஆதி திராவிடர்
8. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
9. முகமதியர்
10. பார்ப்பனரல்லாத இந்துக்கள்
11. ஆங்கிலே இந்தியர் இந்தியக் கிறித்தவர்
12. பார்ப்பனர்கள்

இந்த வரிசை அடிப்படையில் தான் பதவிகள் நிரப்பப்பட்டன. ஆதி திராவிடர்களில் படித்தவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் தான் அவர்களுக்குக் குறைந்த அளவு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் உயர்கல்வியில் பார்ப்பனர் ஆதிக்கத்தைக் குறைக்க முயற்சி செய்தது. 'கல்லூரிமாணவர் சேர்க்கைக் குழுவைக்' கலை அறிவியல் கல்லூரி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் ஏற்படுத்தியது.

அந்தக் குழுவில் கல்லூரியின் முதல்வர், நீதிக்கட்சியைச் சார்ந்த துறைரீதியான அறிவுப் பெற்ற அறிஞர் ஒருவர் அந்தத் துறையின் இயக்குநர் (அ) செயலாளர் கல்லூரி முதல்வர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். 50% இடங்களுக்கு மேல் பார்ப்பனர் மாணவர்களை சேர்க்கக் கூடாது என்று அக்குழுவிற்கு அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (அரசு ஆணை எண் 536 கல்வி நாள் 20.05.1922)

1922 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் அக் கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவில் டாக்டர் நடேச முதலியார் இடம் பெற்றிருந்தார். மொத்தம் இடங்கள் 242. பார்ப்பன மாணவர்கள் 167 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். 50% அடிப்படையில் 121 பார்ப்பன மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர் மீதம் 46 பார்ப்பன மாணவர்களை சேர்க்க மறுத்தனர் (Madras mail 21.07.1922) கடந்த இரண்டாயிரம் ஆண்டு இந்திய வரலாற்றில் முதல் முறையாகப் பார்ப்பன மாணவர்களுக்கு இடமில்லை என்று சேர்க்க மறுத்த சமூகப் புரட்சி நீதிக்கட்சி ஆட்சியில் தான் நடைபெற்றது.

7.12.21 இல் சி. நடேச முதலியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்பு அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார். 18.9.22. எஸ். சீனிவாச அய்யங்கார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையை வகுப்பு அடிப்படையில் தெரிவிக்க வேண்டும் என்றார். இவர்கள் இருவர் கேள்விக்கும் அவரவர்கள் கேட்ட தேதியிலேயே சட்ட மன்றத்தில் பதில் அளிக்கப்பட்டது. ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இரண்டையும் இணைத்துக் கொடுத்துள்ளேன்.

| வ.எண் | | 1921 | 1922 |
|---|---|---|---|
| | மருத்துவர் படிப்பில் சேர்ந்த மொத்த மாணவர் எண்ணிக்கை | 90 | 91 |
| 1. | பார்ப்பனர் | 58 | 33 |
| 2. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 15 | 36 |
| 3. | இந்தியக் கிறித்தவர் | 9 | 15 |
| 4. | ஆங்கிலோ இந்தியர் | 5 | 2 |
| | | 88 | 91 |

மருத்துவக் கல்லூரிச் சேர்க்கையில் 1921க்கும் 1922க்கும் இடைப்பட்ட ஒரு ஆண்டுக் காலத்தில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.1921 இல் 58 ஆக இருந்த பார்ப்பன மாணவர் எண்ணிக்கை 1922 இல் 33 ஆகக் குறைந்தது. 1921 இல் 15 ஆக இருந்த பார்ப்பனரல்லாத மாணவர் எண்ணிக்கை 36 உயர்ந்துள்ளதைக் (இரண்டு மடங்கு) காணலாம். இது கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவால் ஏற்பட்ட நன்மையாகும்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தாங்கள் ஆட்சியில் பணி புரிய உயர் கல்வி படித்த இந்தியர்களை உருவாக்குவதற்காக 1857 இல் சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. அவை இந்தியப் பல்கலைக் கழகச் சட்டத்தின் படி இயங்கி வந்தன.

1920 இல் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு 1921 முதலே வகுப்பு அடிப்படையில் மாணவர் சேர்க்கை முதலானவற்றுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் இணங்க மறுத்து வந்தது. எனவே நீதிக்கட்சி அரசு 1923 இல் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டமசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி மாகாண அரசின் கட்டுப்பாட்டில் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்தது. சட்டப்படி கல்வி அமைச்சர் துணை வேந்தருக்கும் மேலாக இணைவேந்தராக்கப்பட்டார்.

பல்கலைக் கழகச் செனட் அவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தினார். நீதிக்கட்சியினர் பலர் நடேச முதலியார் உட்பட செனட் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அதன் பிறகு தான் அதில் பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது.

உயர்கல்வியில் பார்ப்பனர்கள் மட்டுமே படிக்க வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகப் படிக்காமல் தமிழ் உள்ளிட்ட எந்த மொழியிலும் பட்டம் வாங்க முடியாத நிலை இருந்தது. 1924 இல் கல்வி அமைச்சராக இருந்த பரசுராம பாத்ரோவ் சட்டமன்றத்திலேயே இது திராவிட அரசு, இந்த அரசின் பணம் திராவிட மொழிகளுக்கு மட்டுமே செலவிடப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல் அரசாணையும் பிறப்பித்தார். (அரசாணை எண் 2123 சட்டம் (கல்வி) நாள் 08.12.1925.)

அதன் பிறகு தான் 1925 இல் சென்னை பல்கலைக் கழகச் செனட் கூட்டத்தில் சமஸ்கிருதம் படிக்காமலேயே தமிழைப் படித்து புலவர் பட்டம் பெறலாம் என்ற நிலை உருவாயிற்று. 1926 முதல் தமிழை மட்டுமே படித்துத் தமிழ் பண்டிட் பிற்காலத்தில் புலவர் படிப்புப் படிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. 1927 முதல் சமஸ்கிருதம் படிக்காமல் பிலிட் படிக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழ் மொழிக்கே சமஸ்கிருதத்திலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தது நீதிக்கட்சி ஆட்சி தான். இங்கிலாந்தில் I.C.S. படித்துவிட்டுத் தமிழகத்தில் வேலைக்கு வருபவர்களுக்குத் தமிழறிவு இருக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ் லெக்சிகன் தொகுக்கும் பணிக்கு 1906ல் பணம் ஒதுக்கியது ஆங்கில அரசு. பணம் செலவானாதேதவிர ஒரு வேலையும் நடக்கவில்லை. 1921 க்குப் பிறகு பனகல் அரசர் திட்டமிட்டுப் பணம் ஒதுக்கி 1922 இல் தமிழ் லெக்சின் முதல் தொகுதி வெளிவந்தது. நீதிக் கட்சி ஆட்சி முடிவதற்குள் 1936 இல் தமிழ் லெக்சின் ஏழாம் தொகுதி வெளியிடப்பட்டது. அவர்கள் தெலுங்கு மொழிக்கு இப்படி ஒரு லெக்சிகன் உருவாக்கிக் கொள்ளவில்லை. தமிழ் மொழிக்கு மட்டும் தான் செய்தார்கள்.

நீதிக் கட்சி தொடங்கிய காலத்தில் அரசியலில் காங்கிரசின் பேரால் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். கவர்னர் கவுன்சிலுக்கும், கவர்னர் ஜெனரல் கவுன்சிலுக்கும் பெரும்பாலும் பார்ப்பனர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் தேர்தல் நடைபெற்றால் பார்ப்பனர்கள் மட்டுமே வெற்றி பெறுவார்கள் பார்ப்பனரல்லாதார்கள் முன்னேறுவது கடினம் என்று கருதிய நீதிக்கட்சியினர் அதன் செயல் தலைவர் டாக்டர் டி.எம். நாயரை இரண்டு முறை

இலண்டனுக்கு அனுப்பிப் பார்ப்பனரல்லாதாருக்குத் தேர்தலில் நிற்கத் தனித்தொகுதியைப் பெற்றனர். Non. Brahmin Reserved Seat என்ற பெயரில் தான் முதல் அரசாணை வெளிவந்தது.(MRO Public (Retorms) G.O.335 A May 25 - 1920)

பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் இருக்கக் கூடாது என்று கூறிப் பார்ப்பனர்கள் ஆங்கிலேயே அரசிடம் கோரிக்கைவைத்து ஒரே மாதத்தில் 'முகமதியர் அல்லாத தொகுதி' என்று பெயர் மாற்றம் செய்து விட்டனர். முகமதியர்களுக்கு மிண்டோ மார்லி சீர்திருத்தப்படி 1909 முதலே அரசு வேலைகளில் 25% இட ஒதுக்கீடு, அதே அடிப்படையில் தேர்தல்களில் ரிசர்வ் தொகுதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

நீதிக் கட்சியை சார்ந்த கிருஷ்ணன் நாயர் 4.7.1921 இல் பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்று சென்னை சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 44 பேர் ஆதரித்தனர் 13 பேர் எதிர்த்து வாக்களித்தனர். அதை உடனடியாகச் சட்டமாக்க ஆளுநர் மறுத்தார். 1926 முதல் தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. அதனால் தான் 1927 இல் முத்துலட்சுமிரெட்டி சட்டசபைக்கு நியமனம் செய்யப்பட்டார். அவைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட முத்து லட்சுமி ரெட்டி தேவதாசி ஒழிப்பு மசோதாவை முன்மொழிந்தார்.

அவர் நீதிக்கட்சியினரை நம்பாமல் சர். சி.பி. ராமசாமி அய்யரிடம் கொடுத்து மசோதாவை தயார் செய்திருந்தார். 1.12.1929 இல் அது சட்டமன்றத்தில் நிறைவேறிச் சட்டமானது. ஆனால் 18 வயது நிரம்பிய பெண்கள் தாமாக விரும்பினால் தேவதாசியாக ஆகலாம் என்று அந்தச் சட்டத்தில் ஒரு ஓட்டை இருந்தது.

9.10.1947 இல் ஓமந்தூரார் ஆட்சியில் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கொண்டு வந்து தேவதாசியாக மாறும்படி வற்புறுத்துவோருக்கு 500 ரூபாய் அபராதம் ஆறுமாதம் சிறை என்று சட்டம் கொண்டு வந்து அந்த முறையை முற்றிலுமாக ஒழித்தார்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகச் சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் ஆற்றிய பங்களிப்புகள் ஏராளம். பெண்கள் கல்விக்காகப் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கினர். இந்தியாவில் பெண்கள் முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது என்பதை ஆராய்வதற்காக 'அண்டர்' தலைமையில் 1928 இல் ஒரு குழுவை இந்தியா முழுவதும் அனுப்பியது அன்றைய இந்திய அரசு. அக்குழுவின் அறிக்கையில் சென்னை மாகாணத்தில் பெண்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததைப் பாராட்டியுள்ளது.

பெண்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வரை கட்டணமில்லாமல் இலவசக் கல்வி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்படிச் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டாக்கவும் பாடுபட்டது. நீதிக்கட்சி ஆட்சி இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் அன்று இல்லை என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது.

### இந்துமத பரிபாலன போர்டு:

தென்னகத்தில் ஆட்சிபுரிந்த அரசர்கள் பெரிய பெரிய கோவில்களைக் கட்டி அவற்றிற்கு ஏராளமான சொத்துக்களையும் வைத்துச் சென்றனர். இவற்றைப் பார்ப்பனர்கள் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தனர். இந்தப் பார்ப்பனக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த பனகல் முயன்றார். இந்துமத பரிபாலனைச் சட்ட மசோதா 18.12.1922இல் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். கோவில்களின் வருமானத்தை அரசு ஊழியர்களைக் கொண்டு பராமரித்தல், உபரிநிதியைக் கல்வி, மருத்துவம் போன்றவற்றிற்குப் பயன்படுத்துதல் முதலானவை இச்சட்டத்தின் நோக்கமாகும். நீண்ட விவாதத்திற்குப் பிறகு, சுமார் பலத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு 1923 நவம்பரில் இது சட்டமாக்கப்பட்டது. இதை நடைமுறைப் படுத்துவதற்குள் 1923 நவம்பர் மாதத்தில் முதல் அமைச்சரவையின் பதவிக் காலம் முடிவுற்றது.

இரண்டாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் 19.11.1923இல் பனகல் அரசரே முதல்வராகப் பொறுப்பேற்றார். இம்முறை ஒரு தமிழர் சிவஞானம் பிள்ளை அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்துமத பரிபாலனைச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காவண்ணம் பார்ப்பனர்கள் சதி செய்து, ஆளுநரும் ஒப்புதல் அளிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்.

பனகல் அரசர் சளைக்கவில்லை. எப்படியாவது இதை நிறைவேற்றியே தீருவது என்று முடிவுசெய்து, மீண்டும் ஒரு மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இம்முறை சத்தியமூர்த்தி அய்யர் சென்னைப் பல்கலைக்கழக பட்டதாரித் தொகுதி மூலமாகச் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். அவர் இதை எதிர்த்து ஓயாமல் சட்டமன்றத்தில் பேசினார்; திட்டினார். 475 திருத்தங்களை அவர் ஒருவர் மட்டுமே கொண்டு வந்தார். மொத்தம் 800 சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. திருப்பதி கோவிலுக்கு மட்டும் விலக்கு அளித்தால் ரூ. 5 இலட்சம் கையூட்டு தருவதாக பனகலிடம் பேசிப்பார்த்தனர். எதற்கும் பனகல் மசியவில்லை. 1925 நவம்பரில் வெற்றிகரமாகச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்தினார்.

பனகல் அரசுமீது மடாதிபதிகளும் கோவில் நிர்வாகிகளும் 50க்கும் மேற்பட்ட வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தனர். இதனால் காங்கிரசில் இருந்த பெரியாருக்கு, பனகல் அரசர் மீது நேசம் ஏற்பட்டது. காங்கிரசை விட்டுப் பெரியார் வெளியேறிய காலகட்டமும் அதுதான்.

பனகல் அரசர் காலத்தில்தான் 1924இல் சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் சமஸ்தான அரசுக்கும், இடையே காவிரி நீர்ப் பங்கீடு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் பயனாக மேட்டூர் அணைகட்டத் திட்டம் உருவாக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று 1924 முதல் 1933க்குள் 10 ஆண்டுகளில் 5,91,38,000ரூ. செலவில் கட்டி முடிக்கத்திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு 3,10,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுத் தமிழகம் பஞ்சமில்லாமல் இருக்க வழிவகை செய்தார்.

ஆதிதிராவிடர்களின் நலனுக்காகச் செயல்பட்ட நீதிக் கட்சியைத் தலித்துக்கள் 'மேல்சாதியினருக்கானக் கட்சி' என்று கூறுவதும், சமஸ்கிருதப் பார்ப்பன மேலான்மைக்கு எதிராகப் போராடி தமிழ் மொழிக்கு சமஸ்கிருதத்திலிருந்து விடுதலைப் பெற்றுத் தந்த நீதிக் கட்சியை 'தெலுங்கர்கள் கட்சி' என்று தமிழ்த் தேசியர்கள் கூறுவதும், உழைக்கும் மக்களின் முனனேற்றத்திற்காகப் பாடுபட்ட நீதிக்கட்சியைப் பொதுவுடைமை வாதிகள் 'நிலக்கிழாரிய கட்சி' என்று கூறுவதும் ஏற்கத்தக்கதல்ல. ஆயிரம் ஆண்டுகளாகச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை மற்றச் சாதிமக்களோடு இரண்டறக்கலந்து பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததே நீதிக்கட்சி ஆட்சி தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

- முற்றும்



– முனைவர் பூ.மணிமாறன்

2

# வாசிப்பை வசப்படுத்துவோம்

**வாசித்தல்இலக்கு**

ஒருநாளில் எவ்வளவு நேரம் வாசிப்பதற்கு ஒதுக்குவது என்பது மட்டுமன்றி குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு நூல்களை வாசிப்பது என்பது தொடர்பான இலக்கு ஒன்றையும் அமைத்துக்கொள்ளுவது வாசிப்பைத் தூண்டக்கூடியது. இந்த இலக்கானது ஒருநாளில் ஒருமணி நேரம் வாசிப்புக்கு ஒதுக்குதல் என்பதாகவோ, மாதத்துக்கு ஒரு நூல் என்பதாகவோ அல்லது வாரம் ஒருநூல் என்பதாகவோ இருக்கலாம். இலக்கை அமைக்கும் வரையில் கடும் சிரமமாகவே இருக்கும். இலக்கை உருவாக்கிவிட்டால் வாசிக்காமல் விடுவது வாழ்க்கையையே தொலைத்துவிடுவது என்பதாகவே மாறிவிடும் அபாயமும் உண்டு. வாசிப்பை மேம்படுத்துவதற்கான முதலாவது படிநிலை இதுவே. வாசித்த நூல்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயார் செய்து கொள்வது இதில் முக்கியமானது. பதிவை மேற்கொள்ளும் செயற்பாட்டில் சிலருக்கு நாட்குறிப்பேடு, சிலருக்குக் குறிப்பெழுதும் நோட் பேடு, இன்னும் சிலருக்குப் படிப்பு மேசைக்கு எதிரே இருக்கும் சுவர், இன்னும் சிலருக்கு குளிர்சாதனப்பெட்டி.பதிவை எங்கே சேமிப்பது என்பது முக்கியமன்று. பதிவைத் தயாரிக்கும் உணர்வே முக்கியமானது.

இனி வாசிக்கப் போகும் நூல்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயார் செய்து கொள்ளுதல். நல்ல நண்பர்கள், சக அலுவலர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் போன்றோர் நல்ல நூல்களின் தெரிவுக்கு எப்போதும் உதவுவார்கள், பத்திரிகைகளில், செய்தித்தாள்களில் வெளிவரும் நூல் விமரிசனங்கள், நூல் வெளியீட்டு விழாவின் மதிப்புரைகள் போன்றன நல்ல நூலைத் தெரிவு செய்ய உதவும்.

வாசிப்பு ஒரு மனிதனை அப்படியே நிறுத்தி வைக்கின்றது. அந்தச் சக்தி நல்ல கருத்தை வலியுறுத்தும் ஒரு புத்தகத்துக்கே உண்டு என்று தான் சொல்லவேண்டும். வாசிக்காத நேரங்களில் நிறைவு, மகிழ்ச்சி,சுவாரஸ்யம் அனைத்தும் குறைந்தது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. சோம்பல் உணர்வு ஏற்படுகின்றது. வேகமாக செயற்பட முடியாத ஒரு சோர்வும் இடையிடையே தெரிகின்ற மாதிரி ஒர் உணர்வு. ஏதோ இழந்து விட்டோம் என்பது மாதிரியும், நல்ல நட்பை இழந்து விட்டது போலவும் கூடச் சில சமயம் உணர முடிகின்றது. எதையாவது வாசித்துக் கொண்டிருப்பது மனதுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தவல்லது என்பதை வாசிக்கப் புத்தகம் இல்லாத நேரங்களில் தான் அதிகம் உணர முடிகின்றது. வாசிக்க இன்னும் புத்தகங்கள் இருக்கின்றன என்னும் போது தான் வாழ்க்கையில் பிடிப்பும் மகிழ்ச்சியும் கூடுதலாக இருப்பதை உணர முடிகின்றது. அனைத்து வேலைகளையும் ஆர்வத்துடனும் வேகமுடனும் செய்ய மனம் வருகின்றது. எப்படியும் ஏதோ ஒரு விதத்திலாவது நமக்கு நல்ல புத்தகங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

**வாசிக்கும் இடம்**

வாசிக்கும் இடத்தைத் திட்டமிடுதலும் வாசிப்பைத் தூண்டும் முக்கிய காரணியாகும். சிலருக்குப் படுக்கையில் பலருக்குக் காலைப் பொழுதில் காப்பி அருந்தும் நேரத்தில், இன்னும் சிலருக்கு மதியம் சாப்பிடுகையில். மேலைநாடுகளில் பெரும்பாலான மக்களுக்கு பேரூந்துகள், புகைவண்டிகள், போன்றவையே வாசிக்கும் இடங்கள். வேலைக்குப் போகும் அவசரத்திலும் கூட கைப்பையில் புத்தகம் எடுத்துவைக்க அவர்கள் மறப்பதே கிடையாது.

வாசிப்பைத் தூண்டக் கூடிய மிகப் பொருத்தமான இடம் நூலகங்களே. நூலகங்கள் அறிவுப் பதிவேடுகளின் சுரங்கம் எனப்படுகிறது. கடலைப் போன்றது நூலகம். மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம், சிப்பி, சங்கு, சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம், குளிப்போர் குளிக்கலாம், காற்று வாங்க விரும்புவோர் காற்று வாங்கலாம். மீனினங்களைப் பிடிக்க விரும்புவோர் அவற்றைப் பிடிக்கலாம், வெறுமனே கரையில் இருந்து கடல் அலையைப் பார்த்து மகிழ விரும்புவோர் அவ்வாறு செய்யலாம், முத்தெடுக்க விரும்புவோர் முத்தெடுக்கலாம், செல்கின்றவரது நோக்கம் எதுவோ அதனை அவர் நிறைவேற்றிக் கொள்ளலாம். அதற்கு நூலகங்கள் பேருதவி செய்யும் இடம். வாசகர் வட்டங்களுடன் இணைந்து கொள்வது

வாசிப்பைத் தூண்டக்கூடியதொன்று. வாசகர் வட்டம் என்னும்போது பொதுவான அறிவுத் துறைகளில் ஆர்வமுள்ளோரை ஒன்று சேர்த்து அவர்களுக் கென வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல் ஆகும். வாசிப்பு வட்டங்களுக்குத் தேவையான நூல்களையும் வாசிப்பு வட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான இடத்தையும் தேர்ந் தெடுத்து வாசிப்பு வட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற வழி வகுக்கலாம். வாராந்திர மாதாந்திர ரீதியில் நடைபெறும் இத்தகைய கருத்தூட்டல்களுக்கு உதவுமுகமாக நூலகங்கள் செயல்படுகின்றன. தமக்கென சிறிய அளவிலான வாசிப்பு வட்டம் நடைபெறுவதற்கு ஒரு மாதத்துக்கு ஒரு முறை பெரும்பாலான அரசு பொது நூலகங்கள் வாசகர் வட்டங்களை சிறப்பாக நடத்தி வருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

**வாசிக்கும் நேரம்**

ஒவ்வொரு நாளும் ஒரு ஒழுங்கில் குறித்த நேரத்தை அமைதியாக வாசிப்பதற்கு ஒதுக்குவது அவசியமாகும். வாசிக்கும் காலமானது தினமும் 30 முதல் 60 நிமிடங்களாக இருக்கலாம். தேர்ந்த எழுத்தாளர்களிடம் கேட்டால் குறைந்தது நான்கு மணி நேரம் வாசிப்பில் செலவிடுவதாகக் கூறுகிறார்கள். அதேசமயம் புத்தகத்துக்குள் நுழையாமலேயே 24 மணி நேரமும் புத்தகமும் கையுமாகத் திரிபவர்களும் நம்மிடையே உண்டு. பள்ளிகளில் மாணவர்களைத் தாமாகவே தமக்கு விரும்பியவற்றை தெரிவு செய்து தத்தமது விருப்பப்படி வாசிக்க அனுமதிக்க வேண்டும். வாசிப்பதற்கு போதிய புத்தகங்கள் இல்லாத பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேறுபட்ட வகுப்புகளிற்கு வெவ்வேறு நேரத்தில் வாசிப்பதற்குரிய நேரத்தை ஒதுக்கலாம்;.

சுதந்திரமாக வாசிப்பதற்கான நேரத்தை நாம் தேடிக்கொள்ளாதுவிடின் அல்லது பள்ளிகள் அளவில் வாசிப்பதற்கான நேரத்தை ஒதுக்குதலை ஒரு முக்கிய விசயமாகக் நாம் செய்யாவிடில் வாழ்நாள் முழுவதும் வாசிக்கும் பழக்கத்தை நாம் இழந்து விடுவோம். பெற்றோரைப் பொறுத்து இருவருமே வேலைக்குச் செல்பவர்களெனில் பிள்ளைகளின் வாசித்தலை மேற்பார்வை செய்வதற்கான நேரம் அரிதாகவே இருக்கும். இன்னொரு வகையில் மாணவர்களின் பெரும்பாலான நேரம் தனியார் வகுப்புகளிலும் பள்ளிகளில் கொடுக்கப்படும் வீட்டு பாடங்களிலும் செலவழிக்கப் படுவதனால் மாணவர்களிற்கு மனச் சந்தோசத்திற்காக வாசிக்கக் கிடைக்கும் நேரம் அற்றுப் போகிறது.

**வளமான வாசிப்பு**

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான காரணி எதை வாசிப்பது என்பது தான். நூல்கள் வணிகமயப்படுத்தப் பட்டிருப்பதும், நம்மில் பலரும் வீண் செலவு செய்வோம். ஆனால் புத்தகத்தை விலை கொடுத்து வாங்க யோசனை செய்வோம். புத்தகம் வாங்குவதற்கு என ஒரு தொகையை ஒதுக்க வேண்டும் அல்லது புத்தகத்திற்கும் சேர்த்து பொருளீட்ட வேண்டும். ஏனைய பொருட்களை விடவும் இன்றைய தலைமுறையினருக்குக் 'கண்டதும் கற்கப் பண்டிதனாவான்' என்ற பழமொழி பொருத்தமற்றதொன்று. கருத்துக் கொவ்வாத கதைப்புத்தகங்களே கதியென்று கிடப்பவர்கள் கூட வாசிப்பில் முழு நாளையே தாம் செலவிடுவதாகத் தான் வாதிடுகின்றனர். இங்குதான் வளமான வாசிப்பு என்பதன் முழுமையான அர்த்தம் உள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் இணைந்த முயற்சியினால் மட்டுமே தரமான நூல்களைப் படிக்கக்கூடிய வாய்ப்பை இளைய தலைமுறையினர் பெற்றுக்கொள்ளமுடியும். சமூகங்களை வடிவமைத்த சிற்பிகள், சமூகத்தை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் சென்ற வழிகாட்டிகள், சமூகத்தில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்திய சமூகச் சிந்தனையாளர்கள் ஆகியோரின் அனுபவ வரலாறுகள் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும். இந்த இடத்தில் தோழர் பெரியாரின் வாசிப்பு பழக்கத்தை நாம் கவனப்படுத்திக் கொள்வது சிறப்பாக அமையும்.

தோழர் பெரியாரின் பள்ளிப் படிப்பு என்பது குறிப்பிடத் தகுந்ததாக ஒன்றும் கிடையாது. தன் பள்ளிப் படிப்பைப் பற்றி அவர் என்ன சொல்கிறார்?

“நான் பள்ளியில் படித்த காலம் மிகச் சொற்ப காலமே யாகும். திண்ணைப் பள்ளிக் கூடத்தில் 3 வருஷம். ஸ்கூல் பள்ளிக் கூடம் என்னும் ஆங்கில முறைப் பள்ளிக் கூடத்தில் 2 வருஷமும் தான் படித்தவன். எனக்குப் படிப்பே வராது என்று எனது பெற்றோர் முடிவுகட்டி விட்டதாகவும், நான் மிகவும் துடுக்கான பிள்ளையாயிருந்ததாகவும், ஆதலால் என்னை பகலெல்லாம் பிடித்து வைத்திருந்து இரவில் வீட்டிற்கனுப்பினால் போதுமென்று கருதியதாகவும் சொன்னார்கள். நான் படித்த நாலு வார்த்தையும் பிழையறக்கூட எழுத முடியாது என்பதுதான்.

1884-85லேயே தரகு மண்டி ஆரம்பித்தாகி விட்டது. அப்போது நான் சிறிய பையன். என் சிறிய பாட்டியார் வீட்டில் தத்தாகக் கொடுத்து வளர்ந்து வந்தேன். அடிக்கடி தந்தையார் கடைக்குப் போய்விடுவேன். அப்பொழுது திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். மூட்டைகள் ஏராளமாக வந்திறங்கும். அப்போதே நான் சிறு பையனாக இருந்தாலும் கடைக்குப் போகிறபோது ஏலம் கூறுவேன். சமர்த்தாகப் பேசுவேன். வியாபாரி களிடமெல்லாம் நன்றாகப் பழகுவேன். சாதுர்யமாகப் பேசி அவர்களை என் வசத்துக்குக் கொண்டு வருவேன். எனக்காக சில வியாபாரிகள் ஏலத்தில் விலை கேட்பார்கள்.

இதனால் நான் சரியாகக்கூடப் பள்ளிக்கூடம் போக மாட்டேன். அதனால் என்னைப் பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்திவிட்டு, என் தந்தையார் என்னை எட்டாம் வயதிலேயே கடையில் போட்டுவிட்டார். ஓர் ஆண்டு வரை கடையிலேயே இருந்து கொண்டு வியாபாரத்தில் கவனம் செலுத்தி வந்தேன். நான் சுறுசுறுப்பாகவும், வியாபாரத்தில் அதிக அக்கறையும் ஆசையும் காட்டி வந்ததனால் என் தகப்பனார் மகிழ்ச்சி அடைவார். ஆனால், ஊரில் உள்ள என் தகப்பனாரின் நண்பர்களும் மற்றும் பெரிய மனிதர்களும், இந்தச் சிறிய பையனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் வீணாகக் கடையில் போட்டுக் கெடுக்கிறீர்களே! இது நியாயமல்ல, எப்படி யாவது அவனை நல்ல வார்த்தைகள் சொல்லி படிக்க அனுப்புங்கள் என்று வற்புறுத்தி வந்தார்கள்.

அதன்பேரில் மீண்டும் ஸ்கூலுக்கு அதாவது பிரைமரி பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டேன். அதற்கு முன் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தேன். பிரைமரி வகுப்பில் நான்காம் வகுப்புப் படித்தேன். நான் பாஸ் செய்ததும் படிப்பை விட்டு விட்டேன். உடனே 1890ஆம் ஆண்டில் கடைக்கு மீண்டும் வந்து விட்டேன்” என்கிறார் பெரியார்.

இப்படி படிப்பு என்பது வெறும் நான்காம் வகுப்பே என்றாலும், இவரின் பேச்சுகளும், எழுத்துகளும் மிகப்பெரிய அளவில் வாசிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியதுதான் வியப்பான விசயம். பள்ளிப் புத்தகங்கள் வாசிப்பு என்பது குறைவானதாக இருந்த போதிலும், ஆய்வு நோக்கில் தோழர் பெரியார் கடைசிவரையில் படித்துக் கொண்டேதானிருந்தார். தோழர் பெரியாரின் நண்பர்கள் என்று பொதுவாகச் சொல்லப்படுவது ஆ.சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி என்னும் புராண அகராதியும், மதுரைத் தமிழ்ப் பேரகராதிகளும் ஆகும். எப்பொழுதும் தோழர் பெரியார் அவர்களின் அருகிலேயே அவை இருக்கும்; வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம், அவற்றைத் துருவிக்கொண்டே இருப்பார் பெரியார். முக்கிய குறிப்பு என்று தாம் கருதுவதை, புத்தகத்தின் கடைசிப் பக்கங்களில் அதன் பக்க எண்களைக் கைப்பட எழுதி வைத்துக் கொள்வார். எந்தப் பொருளைக் குறிக்கும் சொல்லாக இருந்தாலும் அதன் வேர்ச் சொல் என்ன? அதன் பொருள் என்ன? எப்படி மருவியது என்கிற அளவுக்கு அதன் மூல வேருக்கே செல்வதுதான் தோழர் பெரியாரின் வாசிப்பு என்பது ஒரு ஆய்வு முறையாகும். பெரியாரைப் பற்றி தோழர் அண்ணா அவர்கள் அழகான வார்த்தைகளால் படம் பிடித்தார் - மூல பலத்தோடு போர் புரிவதுதான் பெரியார் அவர்களின் போர்முறை என்பார் அண்ணா. எதை விமர்சித்தாலும், எதிர்த்தாலும் அதன் மூலபலத்தில் கைவைக்கக் கூடிய நுண்மாண் நுழைபுலத்தின் காதலர் அவர்.

> ''நான் சாதாரணமாக ஒரு வெறும் பேச்சாளியல்ல, அல்லது விசயங்களை எல்லாம் படித்து அறிந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லும் படியான அறிவாளி அல்ல; நான் ஒரு கருத்தாளி. உலகத்தைப் பார்த்து எப்படி நடந்தால் அவர்களுக்கும் நல்லது - நாட்டுக்கும் நல்லது என்று தான் சொந்தமாகக் கொண்ட கருத்தினைக் கூறி வருபவன் என்று இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார். கீழைநாடுகளைப் பற்றி பெட்ரண்ட் ரசல் ஒரு நூலில் எழுதும்போது, இங்குள்ளவர்கள் எதை எழுதினாலும் பேசினாலும் மேற்கோள் காட்டிப் பேசுவதுதான் வழக்கம்; தங்கள் கருத்து என்று வெளியிட மிகவும் தயங்குவார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார். நான் அறிந்தவரையில், மேற்கோள் காட்டிப் பேசாமல், தன்னறிவையே முன்னிறுத்திப் பேசும் தனித்த சிந்தனையாளர் பெரியார் ஒருவர்தான். திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றிப் பேசும் போதுகூட நான் சொன்ன கருத்தை திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார் என்று சொல்லுவாரே தவிர, திருவள்ளுவர் சொன்னதைத் தான் நானும் சொல்லுகிறேன் என்று ஒருபோதும் சொன்னதில்லை. அந்தத் திருக்குறளுக்காக - மக்கள் மத்தியில் அதைக் கொண்டு செல்லுவதற்காக முதன் முதலில் திருக்குறள் மாநாடு நடத்தியவர் தந்தை பெரியார்தான்! திராவிடம் என்பது எப்படி வந்தது? பலரும் ஆய்வு செய்துள்ளனர். ஆனால், நான்காம் வகுப்பே படித்த தந்தை பெரியார் அவர்களோ எல்லோருக்கும் புரியும்படியாக பளிச் சென்று சொல்லுகிறார். திரு இடம் என்பதுதான் திருவிடமாகி திராவிடம் என்பதாகி விட்டது'' என்று கூறுகிறார்.

### இராமாயணத்தின் அஸ்திவாரத்தைத் தகர்த்த பெரியார்

இராமாயணத்தை எத்தனையோ ஆண்டுக் காலமாக எண்ணற்றோர் வாசித்துக் கொண்டு தானிருக்கின்றனர். தோழர் பெரியாரும் வாசித்தார். பெரியார் போல் பல்வேறு இராமாயணங்களையும் வாசித்தவர்கள் அரிதினும் அரிது. அவர் வாசிப்பு என்பது அவரைச் சார்ந்ததல்ல - மக்களைச் சார்ந்தது. மக்களின் அறிவுப்புலத்தில் ஆழமான சிந்தனைப் பொறியைத் தட்டி எழுப்பக் கூடியது. இராமாயணத்தின் மீது பெரியார் மேற்கொண்ட வாசிப்பின் பலன் இராமாயணப் பாத்திரங்கள் என்றும், இராமாயணக் குறிப்புகள் என்றும் இரு நூல்களாக வெளிவந்துள்ளன. இராமாயணப் பாத்திரங்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளிவந்துள்ளன. இராமாயணத்தை வாசித்த பெரியார் அடிப்படையில் ஒரு வினாவை எழுப்புகிறார். அது ஆணிவேரையே வீழ்த்தக் கூடியதாகவும், அஸ்திவாரத்தையே பிளக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. திரேதாயுகத்துக்கு உண்டான வருஷம் 12,96,000 தான். ஆனால் அந்த யுகத்தில் இராவணன் 50 லட்சம் வருடங்கள் ஆண்டிருக்கிறான் என்பது இராமாயணக் கதையின்படி உள்ள சேதியாகும். 13 லட்சம் வருடத்திற்கு உள்பட்ட ஒரு யுகத்தில் நடந்த செய்கை 50 லட்சம் வருடம் நடந்ததாக இருக்க முடியுமா? என்ற வினாவை எழுப்பினார் - அந்த வெண்தாடி வேந்தர். பல்வேறு இராமாயணங்களைப் படித்துத் திளைத்த பெரியார், பொதுக் கூட்டங்களில் சில பகுதி களைப் படித்துக் காட்டி பொதுமக்கள் மத்தியில் தம் விமர்சனத்தை வைப்பார். அதன் விளைவு என்னாயிற்று? அவர் எடுத்துக்காட்டிப் பொதுக்கூட்டங்களில் படித்துக் காட்டிய பகுதிகளை அடுத்த பதிப்பில் எடுத்துவிட்டனர் என்பதுதான்.

தோழர் பெரியாரின் புத்தக வாசிப்பு என்பது மக்கள் மத்தியிலே மாபெரும் மாற்றத்தை - மறுமலர்ச்சியை மலரச் செய்வதற்கான காரணிகளாக அமைந்தது என்பது தனிச் சிறப்பாகும். கல்விக்கூடப் படிப்பு குறைவாக இருந்தாலும் அவர் குடி அரசு, பகுத்தறிவு, புரட்சி, முதலிய ஏடுகளுக்கு ஆசிரியராகவும் இருந்தார். விடுதலை ஏட்டைத் தொடங்கி நடத்தினார். கோடிக்கணக்கான மக்களின் மூளையில் குடிபுகுந்து புரட்சி விதைகளை விதைத்தது.

எண்ணற்ற படித்தவர்களையும், பாமரர்களையும்கூடச் சுண்டி இழுத்தது. வயது மிக ஆன நிலையில் படிப்பதற்குச் சிரமமான அந்த நிலையில்கூட, எழுத்துகளைப் பெரிதுபடுத்திக் காட்டும் லென்சை வைத்துப் புத்தகங்களை வாசித்தார். தமிழ், ஆங்கிலச் செய்தி ஏடுகளை விடாமல் படித்துவிடுவார். படித்த பல பகுதிகளில் கோடிடுவதுண்டு. சிலவற்றைக் கத்தரித்து தனி நாட்குறிப்பில் வைத்துக் கொள்வார் - பொதுக் கூட்டங்களில் தேவைப்படும்பொழுது அதனை எடுத்துக்காட்டியும் விளக்குவார்.

எந்தப் புத்தகங்களை வாசிப்பது என்பது குறித்தும் அவர் கூறியுள்ளவை: நீங்கள் எந்தப் புத்தகத்தைப் படித்தால்தான் என்ன பயன்? பெரியார் கூறுகிறார் - படிப்பது என்பது அறிவு உண்டாவதற்கு. ஆனால் நீங்கள் படிக்கும் புத்தகம் எல்லாம் மடமை வளர்ச்சிக்கும் மூட நம்பிக்கை ஏற்படவும் பயன்படுகிறது. அதனால்தான் இன்றும் நம்மக்கள் பகுத்தறிவற்றிருக்கிறார்கள். நீங்கள் குடி அரசு பகுத்தறிவுப் பதிப்பகப் புத்தகங்கள் வாங்கிப் படித்தால், கட்டாயம் பகுத்தறிவுவாதிகளாவீர்கள் என்று குறிப்பிடுகிறார் தோழர் பெரியார்.

தான் வாழுகின்ற சமூகத்துக்குப் பொருத்தமான புதுப்புது ஆய்வு முயற்சிகளைத் தூண்டும் நூல்களை வாசிப்பது சிறப்பு. இத்தகையதொரு வாசிப்புத் தான் 'நான்' என்ற உணர்வை ஒழித்து 'நாம்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். நாம் என்ற உணர்வு தோன்றிவிட்டால் சமூக மாற்றம் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமேயிருக்காது.

- முற்றும்

# "இந்தியா இந்து மதத்தால் அழிந்து விடும்"



**புரட்சியாளர் அம்பேத்கரின் 59 ஆவது நினைவுநாளில் உங்கள் பார்வைக்கும், சிந்தனைக்கும்...**

பொருளாதார நலன்களை விட, சுயமரியாதை என்பது முக்கியமானது. சுயமரியாதையை நோக்கித்தான் நமது போராட்டாமே தவிர வெறும் பொருளியல் முன்னேற்றத்திற்காக மட்டுமல்ல. கவுரவமான வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது, ஒவ்வொரு மனிதனின் பிறப்புரிமையாகும். மானமுள்ள வாழ்க்கையை வாழ, நாம் மிகப்பெறும் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்கிறோம். இந்துக்கள் நமக்கு மறுத்து வரும் மனித மாண்பைப் பெற நாம் போராடுகிறோம்.

நாம் சுதந்திரமாக விளங்க, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் பாடுபட வேண்டும். இதற்காக நான் என் வாழ்நாள் முழுவதும் போராடி வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல; மனித இனம் பொருளியல் ரீதியாக வலுப்பெற வேண்டும் என்பதே என் விருப்பம்.

சமத்துவமின்மை, சமூக அநீதி ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள இந்து மதம், மனித சமூக வளர்ச்சிக்கு வழி வகுக்கவில்லை. தீண்டத்தகாத மக்கள், இந்து மதத்தில் அடிமைகளாக இருக்கும் வரை, அவர்களுக்கு எந்தவித தன்னம்பிக்கையும், புத்துணர்வும் வரவே வராது. இந்து மதத்தில் இருக்கும் வரை சில நூறு 'கிளார்க்குகள்' உருவாக முடியும்.

இந்த ஏழை 'கிளார்க்குகள்' தங்களின் வயிரை நிரப்பிக் கொள்ளுவதைத் தவிர, வேறு என்ன செய்து விட முடியும்? இவர்களை அநீதிகளிலிருந்தும் பல வகைப்பட்ட வன்கொடுமையிலிருந்து காப்பாற்ற மேலும் சில பெரிய 'கிளார்க்குகள்' தேவைப்படலாம். ஆனால், படிப்பறிவில்லாத தாழ்த்தப்பட்ட மக்கள், இதனால் பயனடையப் போவதில்லை.

இந்து மதமும் அதன் சமூகப் படிநிலைத் தன்மையும் நம்மை அழித்து விட்டது. ஆனால், இத்துடன் இது நின்றுவிடப் போவதில்லை. இது, இந்துக்களையும் இறுதியாக இந்தியாவையும் அழித்துவிடும். இந்து மதம் யாரையுமே காப்பாற்றாது. இந்து மதத்தில் இருக்கும் எவருக்கும் விடுதலை கிடையாது. இந்து மதத்தின் கொள்கைகள், உயர்சாதியினர் என்று அழைக்கப்படுகிறவர்களுக்குத்தான் பயனுள்ளதாக இருக்கின்றது. இது, மிகைப்படுத்தப்பட்ட கூற்று அல்ல. சூத்திரர்களும், தீண்டத்தகாதவர்களும் இதனால் பெற்ற நன்மைகள் தான் என்ன?

ஒரு பார்ப்பனப் பெண், கர்ப்பமானவுடன் தன் குழந்தை எதிர்காலத்தில் வேலையில் சேர, உயர்நீதி மன்றத்தில் ஏதாவது நீதிபதியின் பதவி காலியாகுமா என்று நினைக்கிறாள். ஆனால் , நம் சமுதாயத்துப் பெண் கர்ப்பமானவுடன், ஒரு நகராட்சியில் உள்ள துப்பரவுப் பணியாளர் பதவி காலியாகுமா என்பதற்கு மேல் அவளால் எண்ணிப்பார்க்க முடிவதில்லை.

இதுபோன்று, ஒரு பார்ப்பனப் பெண்ணும் நம் சமுதாயத்துப் பெண்ணும் வெவ்வேறாக நினைத்துப் பார்க்கும் அவல நிலை நீடிக்க காரணம், இந்து மதமே ஆகும். நாம் இந்து மதத்தின் அடிமைகளாக இருக்கும் வரை, இந்நிலையில் மாற்றம் ஏதும் ஏற்படப் போவதில்லை.

நமக்கு நம்பிக்கை வரவேண்டும் எனில், நாம் இந்துமதத்தைவிட்டு வெளியேறி புத்தரின் வழியைப் பின்பற்றியாக வேண்டும். பவுத்தத்தில் சமத்துவம் தான் அடிப்படைக் கொள்கை. கூர்ந்து பார்த்தால், பவுத்தத்தின் அடிப்படை – பகுத்தறிவு என்பது விளங்கும். மற்ற எந்த மதத்திலும் இல்லாத உயரிய தன்மையை பவுத்தம் உள்ளடங்கியுள்ளது. உலகில் பிற மதங்களுக்கும் பவுத்ததிற்கும் மிகப்பெரும் வேறுபாடு உள்ளது.

பிற மதங்களில் "கடவுள்தான் உலகத்தை உருவாக்கினார்; முதலில் பூமியையும் பிறகு சொர்க்கத்தையும், காற்று, நிலா மற்றும் பல கிரகணங்களை ஏற்படுத்தினார்" என்று உள்ளது. அதாவது, சிறுநீரகப்பையில் உள்ள கல்லைக்கூட அவர்தான் உருவாக்கினார் என்றாகிறது! நமக்குத் தேவையானவற்றை எல்லாம் கடவுள் உருவாக்கினார்; எனவே நாம் செய்வதற்கென்று மீதி எதுவுமில்லை. நாம் செய்ய வேண்டியது எல்லாம், இதையெல்லாம் உருவாக்கிய கடவுளைப் புகழ்ந்து பாடுவதுதான் என்று பொருள்படுகிறது. இன்று பகுத்தறிவுள்ள மனிதன் இதை ஏற்க மாட்டான்.

கடவுள், ஆத்மா இரண்டையும் பவுத்தம் மறுக்கின்றது. பவுத்தத்தின் உண்மையான அடிப்படை– துன்பத்தை அறிவு அடிப்படையில் ஒழிப்பது. துன்புறும் மனிதர்களை அதிலிருந்து விடுவிப்பதுதான், பவுத்தத்தின் முக்கிய நோக்கம். நான் அமைதிக்கு எதிரானவன் என்று கூறப்படுகிறது. இது சரியல்ல. நான் அமைதியை விரும்புகின்றவன். நான் விரும்பும் அமைதி நீதியை அடிப்படையாகக் கொண்டது; சுடுகாட்டில் உள்ள அமைதியை அல்ல. உலகில் நீதி மதிக்கப்படாதவரை எங்குமே அமைதி நிலவ வாய்ப்பில்லை. பவுத்தம் மட்டுமே உலகைக் காக்கும்.

நாக்பூரில் 15.10.1956 ல் தோழர் அம்பேத்கர் ஆற்றிய உரையைப் பகிர்ந்து கொள்பவர்: தி.செ.கோபால்,
மாநில கொள்கைப் பரப்புச்செயலாளர். ஆதித்தமிழர் பேரவை.

# மடத்துக்குளம் மோகன் நினைவுகளிலிருந்து

காஞ்சி சங்கராச்சாரியின் சனாதன தீண்டாமையை எதிர்த்து முழக்கம் இட்டோம். அப்போது மீண்டும் பரபரப்பு கூடுதலாக உண்டானது. அவைகளைத் தாண்டி கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்று அடைந்தோம்.

செய்தியாளர்: காஞ்சி சங்கராச்சாரியின்-சனாதனக் கொள்கைக்கு எதிராக நீங்கள் முழக்கம் செய்தபின் - பெதப்பம்பட்டி கிராமத்தில் கூட்டம் எப்படி நடை பெற்றது?

நாங்கள் வழக்கம் போல் வழிநடைப் பிரச்சாரம் நடைபெற்ற ஊர்களில் பெதப்பம்பட்டியில் நடைபெற்ற கூட்டம் எங்களுக்குக்கூடுதல் உற்சாகம்தந்தது. காரணம்,வழக்கம் போல் கூட்டத்தில் பொள்ளாச்சி விஜயராகவன், இரா.மனோகரன், கி.பாரதி ஆகியோர் பார்ப்பனர் நம் இனத்திற்குக் காலம், காலமாகச் செய்த சூழ்ச்சி, வஞ்சகம் அதில் நம் தமிழ்நாட்டு ‘தலைவர்கள்’ தங்கள் சுயநலனுக்காகப் பதவி ஆசைக்காக, தாங்களே பார்ப்பன நயவஞ்சகத்தைத் தலைமீது தூக்கி வைத்துப் பார்ப்பன சுயநலனை எப்படி எல்லாம் பிரச்சாரம் செய்தனர் என மிகத் தெளிவாக மக்களிடம் விளக்கிப் பேசினார். மக்களும் மிகுந்த உற்சாகத்தோடு கேட்டுக் கை தட்டி ஆரவாரம் செய்தனர். நாங்களும் மிகுந்த உற்சாகம் அடைந்தோம். இப்படியாகக் கூட்டம் மிகச்சிறப்பாக நடந்து கொண்டு இருந்தது. பேச்சாளர்கள் பேசி முடித்தப்பின் இயக்கத்தின் மூத்ததோழர் புலவர் கடவுள் இல்லை, அவர்களும் நானும் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியைத் துவங்கினோம். ஆங்காங்கே நின்று வேடிக்கை பார்த்தவர்கள் மேடை அருகே வரத்துவங்கினார்கள்

செய்தியாளர்: மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி எப்படி செய்கின்றீர்கள் உண்மையில் மந்திரம் செய்வீர்களா? சற்று விளக்கவும்.

நம் மக்கள் ‘சாமியார்கள்’ தங்களின் ‘தெய்வீக’ சக்தி என்ற பெயரால், வெறும் கையில் திருநீர், குங்குமம் வரவைப்பது போன்ற நிகழ்ச்சியைச் செய்து ஏமாற்றுவார்கள். அதுபோல நாங்களும் செய்தோம். அதற்கு பக்தி எதுவும் தேவையில்லை. சில நுட்பங்கள் தெரிந்தால் போதும் என்பதை விளக்கினோம். கூட்டத்தில் வியப்பு, ஒரே சலசலப்பு உண்டானது. அந்தப் பொருட்களை கையில் வாங்கிக் கூட்டத்தில் இருந்தவர்கள், ஆண்கள், பெண்கள் அதை மிக பவ்யமாக நெற்றியில் வைத்தனர். அப்படி வைத்தவர்களின் அறியாமையைப் பார்த்து கூட்டத்திலிருந்த பலர் சிரித்து அவர்களுக்கு புரியவைத்தனர்.

மேலும் எலுமிச்சம் பழத்தை மக்கள் முன் அறுத்து காட்டிய போது அதில் இருந்து இரத்தம் (சிவப்புநிற திரவம்) வருவதாக நினைத்து பொதுமக்கள் மத்தியில் மிகவும் மயான அமைதி நிலவியது கூட்டத்தில் ஒரு விதமான பரபரப்பு நிலவியது. பொதுவாக பக்தியின் பெயரால் புத்தியை அடமானம் வைக்கும் நம் மக்கள், திருநீர், குங்குமம், எலுமிச்சம் பழத்தில் இரத்தம் என உணர்ச்சிப்பூர்வமான நிகழ்ச்சியைப் பார்த்துத் தங்களையே மறந்த நிலையில் இருந்தனர் என்றுகூடச் சொல்லலாம்.

இந்த நிலையில் தோழர் விஜயராகவன் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், இது போன்ற நேரத்தில் கூட்டத்தில் துண்டு ஏந்தி கூட்டச்செலவைச் சரிசெய்ய மக்களிடம் செல்வது அவரின் வழக்கமான செயல். மக்களிடம் நல்ல வரவேற்பு அன்றே சுமார் ரூ.600 க்கு மேல் வசூல் ஆனது. அப்போது தான் நினைத்தேன் ‘கடவுள் இல்லை’ ‘இல்லவே இல்லை’ கற்பித்தவன் முட்டாள் என அய்யாவின் இந்த தீர்க்கமான கொள்கைளை, பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பார்ப்பனியச் சதியை மக்கள் புரிந்து கொண்டனர் என்பதின் அடையாளம் தான் மக்கள் தந்த வசூல் என எனது எண்ணத்தில் ஒட்டிக் கொண்டு இருந்தது.

மக்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட தோழர் புலவர் கடவுள் இல்லை, கூட்டத்தில் போலிச்சாமியார்களுக்கு சவால்விட்டு நகைச்சுவையுடன் பேசினார்.மக்களின் கைதட்டல், விசில் மிகுந்த உற்சாகத்தை தந்தது. நிகழ்ச்சியின் தொடராக அந்தப்பகுதியின் பெட்டிக்கடையில் வாங்கிய தேங்காய், முட்டை எனக் கூறி கையில் எடுத்து மக்களிடம் காட்டிய போது மேடையின் அருகே இருந்த அந்த கடைக்காரர், கடையின் முன்னே இருந்தவர்களிடம் “ஆமாப்பா இப்பதான் இதோ இவர்தான் (நான்) வாங்கினார்” எனக்கூறிக் கொண்டு இருந்தார். இதைக்கேட்ட நான் ஒலிப்பெருக்கியில் அதை அப்படியே கடைக்காரரைப் பார்த்து சொன்னேன். கூட்டம் கடைக்காரைப் பார்த்தது அவர் முகம் பிரகாசமாக இருந்தது* அவரும் ஆமோதித்தது போல் இருந்தார்.

தேங்காய் உடைத்ததும் தண்ணீர் வரும் என அனைவரும் எதிர்பார்த்த போது மல்லிகைப் பூ கொட்டியதைக் கண்ட மக்கள் பயங்கரமான விசில், கைதட்டல், கூட்டத்தில் முட்டையை என்ன பண்ணுவீர்கள் என ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு தோழர் புலவர் கடவுள் இல்லை - இதுபோல் எலுமிச்சம்பழம், தேங்காய், முடடை இவைகள் எல்லா வீடுகளிலும் பெரும்பாலும் கிடைக்கும் இதைத்தான் போலிச் சாமியார்கள் அல்லது மந்திரவாதிகள், குட்டிச்சாத்தான் வைத்துள்ளேன் எனக் கூறி மக்களை எப்படி பயமுறுத்தி பக்தியின் பெயரால் ஏமாற்றுகின்றனர் என்பதை விரிவாக தெளிவாக நகைச்சுவையுடன் விளக்கினார். பயம் தான் காரணம் எனவே, பக்தி வந்தால் புத்தி போய்விடும் என கூறினார்.

இப்படிச் சிறப்பாகக் கூட்டம் நடந்து கொண்டு இருந்தபோது கூட்டத்தில் ஒருவர் மிகச்சத்தமாக அதை எல்லாம் செய்கிறீர்களே கூடுவிட்டுக்கூடு பாய முடியுமா? என ஆவேசமாகக் கூச்சல் போட்டார். கூட்டத்தில் சற்று சலசலப்புகள் உண்டானது. நமது தோழர்கள் ஆவேசத்துடன் பரபரப்பாகினர். உடனே தோழர் புலவர் கடவுள் இல்லை ஒலி பெருக்கியில் அமைதி, அமைதி - இதுவரையில் கதைகளில், சினிமாவில் புராணக்கதைகளில்தான் கூடுவிட்டுக்கூடு பாய்வதை பார்த்து இருப்பீர்கள் ஆனால் ஒரு மனிதனின் உடலில் இருந்து நீங்கள் நினைக்கும் ‘உயிர்’ தனியே பிரித்து அடுத்தவர் உடலில் புகுந்து விடுவது, ஏன் சினிமாவில், புராணக் கட்டுக்கதைகள் போல் மனிதர்கள் அல்லது பிற பிராணிகளின் உடலில் புகுந்துவிட முடியாது என அறிவியல் செய்தியை விரிவாக சொன்னார்.

இருப்பினும், அதோ அந்த என் இன சகோதரன் பக்தியின், மதத்தின், கடவுளின் மீது கொண்ட நம்பிகையால் நம்மைப் பார்த்துக் கேட்ட அந்தக் கேள்வியை சாமியார், மந்திரவாதி என கூறிக்கொள்ளும் அந்த புரட்டுக்காரர்களிடம் கேட்கும் தைரியம் வருமா? என கேள்வியும் கேட்டு விட்டுக் கூட்டத்தைப் பார்த்து நண்பா.. தோழரே... கூடு விட்டுக் கூடு பாய்வது போல் ஒரு நிகழ்ச்சியாக - இதோ நிற்கிறாரே எங்கள் தோழர் மோகன் அவரை நான் உங்கள் கண்முன்னே மறைத்துக் காட்டுகிறேன் என கூறினார். கூட்டம் மிகுந்த ஆரவாரம் செய்தது. என்னை மறைய வைக்கும் நிகழ்வுக்கான வேலை தொடங்கியது.

- தொடரும்..

நவம்பர் 26 ஆம் தேதியன்று கொல்கத்தாவில், கர்கரே நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிராவின் முன்னாள் காவல்துறை அய்.ஜி எஸ்.எம்.முஷ்ரிப் (S.M.Mushrif) அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். அவ்வுரையில்,

# 'ஆர்.எஸ்.எஸ்' இந்தியாவின் நம்பர் 1 பயங்கரவாதக் கும்பல்



தமிழில்:
**யாழ்மொழி**

"பா.ஜ.க வின் சித்தாந்த வழிகாட்டியாகத் திகழும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இந்தியாவின் நம்பர் 1 பயங்கரவாதக் கும்பல்" எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர்கூறியதாவது:-

➢ ஆர்.டி.எக்ஸ் (RDX) பயன்படுத்தப்பட்ட 13 பயங்கரவாத வழக்குகளில், ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பஜ்ரங்தள் (Bajrang Dal) போன்ற அமைப்புகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டோமேயானால், அவ்வாறான வழக்குகளின் எண்ணிக்கை 17 வரை செல்லும்.

➢ 2007 ல் ஹைதராபாதில் உள்ள மெக்கா மசூதி குண்டுவீச்சு, 2006 மற்றும் 2008 ல் மகாராஷ்டிராவில் நடந்த மாலேகான் குண்டுவெடிப்பு, 2007 ல் நடந்த சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பு ஆகியற்றை வைத்துப் பார்த்தால், "ஆர்.எஸ்.எஸ். இந்தியாவின் நம்பர் 1 பயங்கரவாதக் கும்பல்தான்" என்பதில் எவ்வித அய்யமும் இராது.

➢ "காவிபயங்கரவாதம்" எந்தக்கட்சி அதிகாரத்தில் உள்ளது என்பதைப் பொறுத்ததன்று. ஒரு பயங்கர வாத அமைப்பாக ஆர்.எஸ்.எஸிற்கு எந்தக்கட்சி அதிகாரத்தில் இருக்கிறது என்பது முக்கியமல்ல.

➢ "காவிபயங்கரவாதம்" என்பது எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் "பார்ப்பனிய அமைப்பாகும்".

➢ நான் "பார்ப்பனிய" என்று சொல்வது பார்ப்பனர்களைஅல்ல. மாறாக ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றும் மற்றவர்களை ஒடுக்க வேண்டும் என்றும் நினைக்கும் மனநிலையைத் தான் அவ்வாறு குறிப்பிடுகிறேன்.

➢ சகிப்பின்மை நீண்டகாலமாகவே இருந்துவருகிறது. கடுமையான சம்பவங்கள் இதற்கு முன்பே நிகழ்ந்துள்ளன. ஆனால் இப்போது மட்டும் ஏன் சகிப்பின்மை முன்னிலைப்படுத்தப்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை.

➢ 2008 ஆம் ஆண்டு மும்பை பயங்கரவாதத் தாக்குதலின்போது, பயங்கரவாதச் செயல்களில் இந்துமதத் தீவிரவாதிகளின் ஈடுபாடும் உள்ளது, என்பது குறித்து ஆய்வு மேற்கொண்ட மும்பை பயங்கரவாத எதிர்ப்புஅணியின் தலைவர் ஹேமந்த் கர்கரேவின் கொலையில், உளவுத்துறைக்கு இருக்கும் தொடர்பை வெளிக்கொணரவேண்டும் என வலியுறுத்தினார்.

➢ அக்கொலையின் பின்னணியில் உள்ள உண்மைகளை நிறுவ ஒரு வெகுமக்கள் இயக்கம் அமைக்கப்பட வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

➢ அக்கொலையில் உளவுத்துறைக்குள்ள தொடர்பு குறித்து ஆணித்தரமான ஆதாரம் இருக்கிறது. எனினும், அவற்றை நிறுவ மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. சுதந்திரமான விசாரணையை நடத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும் ஒடுக்கப்பட்டன. எனவே, ஒரு வெகுமக்கள் இயக்கத்தின் துணையின்றி, இவ்வுண்மைகளை நிறுவமுடியாது.

( முஷ்ரிப் அவர்கள் "கார்க்கரேவைக் கொன்றது யார்?" என்ற புத்தகத்தின் மூலம் அக்கொலை குறித்த பல பரபரப்பான கருத்துகளைத் தெரிவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது)

– ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா 27.11.2015

ஆட்டோகிராப் தொடங்கி பிரேமம் வரை நாயகனின் காதல் அத்தியாயங்களை உருகி ரசித்துத் தீர்த்தது நம் சமூகம். தான் கடந்து போன காதலிகளைப் பட்டியலிட்டபோது மெய்சிலிர்த்துப் பார்த்தது. அந்த ஒவ்வோர் அத்தியாயத்திலும் தன் காதலைப் பொருத்திப் பார்த்தது. தனக்குப் பிடித்த ரக காதலியைத் தேடிப் பிடித்தது. அந்தப் புரொட்டாகனிஸ்டைப் போலவே அந்தக் காதலிகளைப் பிரிந்த தருணங்களில் தானும் கலங்கியது சமூகம். இறுதியில், அந்த ஆதர்ச நாயகன் அம்சமான ஃபிகரின் கரம் பற்றிய பின்னர் ஆனந்தமாய் தியேட்டரை விட்டுத் திரும்பி, சிலாகித்து ஸ்டேட்டஸ் பகிர்ந்தது.

இந்தப் பாராவில் நான் பர்ப்பஸாக ஓர் எழுத்துப் பிழையை நுழைத்துவிட்டேன். சமூகம் சமூகம் என்று நான் குறிப்பிட்டது தவறு. அது சண்முகம். ஆம், ஆண்களின் காதல் அத்தியாங்களை இப்படித் தனியாகக் கொண்டாடி லயித்ததும், பெண்களைத் தியேட்டருக்கு அழைத்துக் கொண்டுபோய் அந்தப் படங்களைப் பார்த்து மகிழ்ந்ததும் ஆண் சமூகம்தான். அந்தப் படைப்புகளுக்குச் சொந்தமும் சண்முகங்கள்தான்.

# நயன்தாரா...



இப்போது ரீசன்ட்டாக வந்த புரட்சிப் படமான X: Past Is Present கூட ஆட்டோகிராப் வகையறாதான் எனக் கேள்விப்பட்டேன். தென்னிந்திய சினிமாவில் ஒரு பெண்ணின் பார்வையில் காதல் சொல்லப்படுவதே அரிது. சமீபகாலத்தை எடுத்துக்கொண்டால் ‘பூ’, ‘ஓம் ஷாந்தி ஓஷணா’ என லிஸ்ட் ஒரு மெல்லிசான கோடுதான். பூவில் அவளது காதல் நசுக்கப்பட்டது. அவளது அடுத்த அத்தியாயம் என்ன என்பது அவளுக்கே தெரியாது. ஓம் ஷாந்தி ஓஷணாவில் பல பருவங்களில் பெண்ணின் காதல் உணர்வு யதார்த்தமாகக் காட்டப்பட்டது – ஒருவனையே பல காலக்கட்டத்தில் காதலிக்கிறாள் என்ற கலாச்சாரம் மீறாமல்.

ஒரு பெண்ணின் பார்வையில் காதலைத் திரையில் காட்டுவதே அபூர்வம் எனும்போது, ஒரு பெண் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு ஆண்களைக் காதலித்தாள், நெருக்கமாக இருந்தாள் என்பது போல் திரைக்கதை அமைப்பதை எல்லாம் தமிழகத்தில் திமுக, அதிமுக அல்லாத வேறு கட்சிகள் ஆட்சியைப் பிடிப்பதைக் காட்டிலும் அரிதினும் அரிதான நிகழ்வாகவே பார்க்கலாம்.

உண்மையில், நம் சமூகத்தை சற்றே ஆழமாக உற்று நோக்கிப் பார்த்தோமானால், நெருங்கிய தோழிகளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தோமானால், அட... ஒயிஃபிடம் ஜாலியாகக் கேட்டோமானால், பெண்கள் தங்கள் வாழ்க்கையில் ‘கடந்து போன’, ‘வந்து போன’ ஆண்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கக் கூடும்.

எல்லாத் துறைகளையும் விட சினிமாவில் சண்முகத்தின் ஆதிக்கம் அதிகம் இருப்பதால், ஒரு பெண் என்பவள் ஒருத்தனுக்கு மட்டுமே ஃப்ரெஷ்ஷாக கிடைக்கப்படுகிறாள் என்பது போன்ற கலாச்சாரப் போலி ஒரிஜனலாக்கப்படுகிறது.

நம் சமூகத்தில் வாழும் நார்மலான ஒரு பெண்ணின் வாழ்க்கையில் காதல், நெருக்க அத்தியாயங்கள் எத்தனை இருந்தாலும் அது பெரும்பாலும் வெளியே தெரிவதும் பேசப்படுவதும் இல்லை. அதை இயல்பாக அல்லாமல், இயல்பு மீறியதாக சண்முகங்கள் அணுகும் அச்சுறுத்தல் இருப்பதும் அதற்கு முக்கியக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், ஒரு பெண் நட்சத்திர நிலை பெற்ற திரைப் பிரபலம் என்று வரும்போது, அவர் வாழ்க்கையில் கடந்து, நுழைந்து போகும் ஆண்களின் எண்ணிக்கை சண்முகங்களால் கருத்தில் கொள்ளப்படுகிறது. பொறாமையில் கலாய்க்கப்படுகிறது. அந்த நிலைதான் தோழர் நயன்தாராவுக்கும்.

நிஜ வாழ்வில் ஒரு நார்மல் உமன் பல்வேறு காலகட்டத்தில் சந்திக்கும் ஆண்களின் எண்ணிக்கையைவிட நயன்தாராவுக்கு மிகவும் குறைவாகவே இருக்கக் கூடும். சூழ்நிலை, அறியாமை, ஆர்வக்கோளாறு, துரோகம்... இப்படி எதுவேண்டுமானாலும் பிரிவுகளுக்குக் காரணமாக இருக்கலாம். இறுதியில், பிரேமம் புரொட்டாகனிஸ்ட்டுக்கு ஒரு செலின் கிடைத்தது போல நயன்தாராக்களுக்கு விக்டர்கள் கிடைக்கலாம். இவை இரண்டையும் கொண்டாடுகிறோமோ இல்லையோ, குதர்க்கமாகப் பார்க்காமல் இருந்தால் போதுமே!

ம்... சொல்ல மறந்துட்டேன். தமிழ் சினிமாவிலும் எனக்குத் தெரிந்து ஒரு படத்தில் ஒரு பெண் புரொட்டாகனிஸ்ட் பார்வையில் காதல், நெருக்க அத்தியாயங்கள் நேர்மையாகச் சொல்லப்பட்டது. அரிதான அந்தத் தமிழ்ப் படத்தின் பெயர் 'அவள் அப்படித்தான்.' ஆம், நயன்தாரா... அவள் அப்படித்தான்!

- Saraa Subramaniam

# 'அவள் அப்படித்தான்'!

### சரா சுப்ரமணியத்தின் – 'நயன்தாரா – அவள் அப்படித்தான்'– என்கிற பதிவை ஒட்டி .

ஒரு கொடுமையான, கொடூரமான தனிமையை HBO, Star movies சேனல்களுக்குள் புதைத்துக் கொண்டிருந்த காலத்தில் காணக்கிடைத்த Sex and Philosophy திரைப்படத்தைப் பற்றிய பகிர்தல் இது. மொஹ்சன் மக்மல்பாஃப் இயக்கி, தலேர் நசரோவ் கதாநாயனாக நடித்து 2005–ல் வெளிவந்த ஃப்ரெஞ்சு–இரானிய–தஜகிஸ்தானிய படம். தனது நாற்பதாவது வயதை எட்டும் ஒரு நடன ஆசிரியன் தான் இதுவரை காதலித்த நான்கு பெண்களை ஒரே இடத்தில் சந்தித்து தனது காதல்களைப்பற்றிச் சிலாகித்துக்கொள்வதுதான் கதை.

அந்த நால்வரிடமும் அவர்களை முதன்முதலில் சந்தித்ததை, காதலில் விழுந்த தருணங்களை, இனிக்க இனிக்கக் காதலித்த நாட்களை, பிரிய நேர்ந்த நியாயத்தை மிகுந்த அழகியலுடன் பரிமாறிக் கொள்கிறான். நால்வரும் அமைதியாகக் கேட்டுக் கொள்கின்றனர். இறுதியில் நால்வருக்கும் ஆளுக்கொரு ஸ்டாப்வாட்சைப் பரிசளித்து விட்டு நிஜமாகவே காதலில் இருக்கிற நொடிகளை அளக்கச் சொல்லிவிட்டு விடை பெறுகிறான்.

படத்தின் இறுதிக் காட்சியில் இருக்கிறது சுவாரசியம். அவனது நான்காவது காதலி அவனை தனது வீட்டிற்கு அழைக்கிறாள். அங்கே அவளது மூன்று முன்னாள் காதலர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவளும் தனது காதல்கள் பற்றிப் பேசப்போவதாக அறிவிக்கும்போது ஒவ்வொருவராக வெளியேறுகிறார்கள். ஒரு பெண்ணிற்கு, தான் 'நான்காவது காதலன்' என்று அறிய வரும்போது சற்றே ஆடிப்போகிற கதாநாயகனும் அவளுடன் வாதிட்டுவிட்டு ஓங்கி ஒரு அறைவிட்டு அங்கிருந்து கிளம்புகிறான். மீண்டும் தனிமையில் விடப்படுகிற அவன், எரியும் மெழுகுவர்த்திகளை டேஷ் போர்டில் வைத்துக்கொண்டு அடுத்த காதலைத் தேடிக் கிளம்புகிற குறியீட்டுடன் படம் முடிவடையும்.

தஜகிஸ்தான் ஆட்டோகிராப் இது. மொழி புரியாவிட்டாலும் கதை சொல்லப்படுகிற விதம், காட்சிகள் அனைத்தும் அழகானவை. அதுவும் தன்னிடம் நடனம் கற்கவரும் அல்லது தன்னுடன் நடனமாட வரும் ஒரு பெண்ணுடனான தனது காதலை நடனத்தின் மூலமே சொல்லியிருக்கும் விதம் 'அட்ரா சக்கை' வகை.

இந்தப் படத்தைப் பார்த்தபிறகுதான் ''எனக்கென்ன ராசாத்திக்கு?'' என்று அந்தத் தனிமைக் காலத்தைக் கடந்து வர முடிந்தது. மேற்சொன்ன படத்தின் இறுதிக் காட்சியைப் போல எத்தனை முகரடிகள் விழுந்தால் என்ன? இந்த வாழ்வு அழகானது. வாழும் வரை வந்து போகும் வசந்தங்களைக் கொண்டாடவேண்டியதுதான். Hats off Nayan

Swathi Sa Muhil

# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

அரசூர் அ.ப.சிவா

15

அடுத்த வாரம் வீடு திறப்பு விழா கொஞ்சம் ஞாயித்துக் கிழமையும் வேலை பாத்து சீக்கிரமாய் வேலையை முடிக்கனும், அப்படின்னு சொல்லி முடிக்கலை மேஸ்திரி முருகன் அதெல்லாம் முடியாது நான் என்ன Private School Teacher ன்னு நினைச்சீங்களா? ஞாயித்துக் கிழமையெல்லாம் வேலை செய்ய என்றார்.

அட! ஆமாம், முருகா போன வாரம் நான் என் மாமன் பையன் வீட்டுக்குப் போனப்ப, நாமக்கலில் படிச்சுட்டு இருக்கற பையனை பார்க்க போனோம், ஞாயித்துக்கிழமை நாளும் அதுவுமா 10, 12 ம் வகுப்புகளுக்கு பாடம் நடத்திட்டு இருந்தாங்க, கொடுமை என்றேன்.

எது? கொடுமை அப்படியெல்லாம் படிச்சாத்தான் BE, MBBS எல்லாம் படிக்க முடியும், சரிங்க இந்தவாரம் கொஞ்சம் முன்பணம் வேண்டும், பையனுக்கு Fees கட்டனும்.

எதுக்கு School Fees கட்டிட்டு கடன் வாங்கி கஸ்டப்படுகிறாய், அரசாங்கப் பள்ளிக்கூடம் இருக்குல

அய்யோ அரசாங்கப் பள்ளிக்கூடமா?? எதோ ஒவ்வாமை வந்த மாதிரி சொன்னார் முருகன், அப்புறம் என் பையன் எப்படி இங்கிலீசு, இந்தியெல்லாம் படிக்கறது.

அரசாங்கப் பள்ளிக்கூடத்துல கூட இங்கிலீசு, இந்தியெல்லாம் சொல்லித் தர்றாங்களே, முருகா? முடிக்கும் முன் பதில் வந்தது, சும்மா சொல்லித் தந்தா எந்த லட்சணத்துல சொல்லி தருவாங்க தெரியாதா?

சும்மா எல்லாம் இல்லை அரசாங்கம் உன்னுடைய பையனுக்கு நீ என்ன செலவு பண்ணுவியோ அதே அளவு செலவு செய்யுது முருகா. உடன் பதில் வந்தது "நான் அதை இல்லை என சொல்லவில்லை ஆனா அது பிரயோசனப் படுவதில்லை, அரசுப் பள்ளி வாத்தியார் யார் ஒழுங்கா சொல்லிக் கொடுக்கறாங்க?"

சரி, நான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுங்க? நாளைக்கு நீங்க வீடு கட்டினா யாரு இஞ்சினியர்? அட இதென்ன கேள்வி நான் தான்,

தெருமுனையில ஓட்டல் வச்சிருக்கிற அண்ணாச்சி எந்தக் கடையில் சாப்பிடுவார்? என்ன முருகா இது முட்டாள்தனமா கேள்வி கேட்டுட்டு, அவரு கடையை வெச்சுட்டு எதிர் கடையில சாப்பிட்டா, அவரு கடைக்கு யாரு போவாங்க?

இப்ப சொல்லுங்க நம்மூரு பள்ளிக்கூடத்து Head master அவுரு பையனை என் பையன் படிக்கிற அதே பள்ளிக் கூடத்துல தான் படிக்க வைக்கிறாரு. சரி எனக்கு வேலை இருக்கு முன்பணத்தை மறுபடி ஒருமுறை நினைவு படுத்தி விட்டு கிளம்பிவிட்டார் மேஸ்திரி முருகன்.

எது சேவைத் துறை என அரசு வைத்திருக்க வேண்டுமோ, அதையெல்லாம் தனியாருக்கு கொடுத்துவிட்டு, தனியார் செய்யும் வேலைகளை அரசு செய்ய ஆரம்பித்தன் விளைவு, இதில் ஆசிரியரை மட்டும் குற்றம் சொல்லிப் பயனில்லை ஆனால் முருகனின் கேள்வியிலும் நியாயம் உள்ளது. இன்னைக்கு நிலையில் Education- Commodity , Students-consumer, என ஆகி விட்டது,




அப்போது மேசை மேலிருந்து கைப்பேசி சினுங்கியது, திருப்பூரிலிருந்து தோழர் குமாரின் அழைப்பு, வழக்கமான அழைப்புத்தான் சிறப்பு செய்தியெல்லாம் ஒன்னுமில்லை என்றபடி பேச ஆரம்பித்தார், வீட்டில் இருப்பவர்களை விசாரித்தபோது, அந்தக் கொடுமையை எதுக்கு கேட்கறீங்க தோழர், பெரிய பாப்பா இந்த வருடம் 10 ம் வகுப்பு காலையில் 7 மணிக்கு போனா மாலை 6 ஆகுது, சரியா சோறுகூடத் திங்கறதில்லை, சில நேரங்களில் ஞாயிறு கூட வரச்சொல்வாங்க போல இருக்கு புலம்பித் தள்ளினார், என்ன செய்வது தெரியாம சேர்த்தியாச்சு

உங்களுக்கு காலம் கடந்து யோசனை வந்துள்ளது என்ன செய்ய நம் பிள்ளைகள் சமூகத்தை நேசிக்க வேண்டும், எல்லா தரப்பு மனிதர்களிடத்தும் எளிமையாக பழக வேண்டும் அழுத்தமில்லாத கல்விமுறையில் பயில வேண்டும், உயர் கல்வியில் போட்டி போடத் தகுதி உள்ள பிள்ளையை 6, 7 வகுப்புகளிலேயே கண்டுபிடிக்க முடியும் பத்தில் 2 பேர் நன்றாகத் தயராவர்கள் என்றால் அவர்களைப் போட்டித் தேர்வுக்குத் தயார்படுத்தலாம்.. மற்ற இருவர் விளையாட்டு, அடுத்தவர் கலை இப்படி இருப்பதுதானே இயல்பு அதைவிட்டுட்டு குழந்தைகளை அழுத்தினால் விளைவு சரியாக இருக்காது.

நம்ம நாட்டு கல்வி முறை பற்றிய தோழர் பெரியாரின் கருத்தைக் கேளுங்கள் என படிக்க ஆரம்பித்தேன் .

“பொதுவாக, நம் நாட்டு மாணவர்கள் கல்விப் படிப்பினால் எந்தவிதமான பகுத்தறிவையும்– எதையும் ஆராய்ந்து அறியும்படியான தன்மையையும் அடையமுடிவதில்லை;அவர்கள் படிக்கிறப்படிப்பினால் பிற்கால வாழ்க்கையைத் தரித்திரமின்றி நடத்த வேண்டும். அதற்காக, ஏதாவது உத்தியோக துறையிலோ, வேறு பணம் சம்பாதிக்கின்ற வழியிலோ பயன்பட வேண்டும் என்பதற்காக படிக்கிறார்கள்.

பெற்றோர்களும், தங்களுடைய குழந்தைகளுக்கு அறிவு வளரவேண்டும் என்ற காரணத்திற்காகப் பள்ளிக்கு அனுப்புவதில்லை; படித்துப் பட்டம் பெற்று வந்ததும் ஜீவனத்துக்கு வேண்டிய முறையில் எங்காவது உத்தியோகம் கிடைக்குமா என்ற நோக்கத்தோடேயே




பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள். இவர்களும் இதற்குத் தான் முயற்சிக்கிறார்கள் என்றால் மாணவர்களும் அந்த நோக்கத்தைதான் எதிர்பார்த்துத் தம்முடைய பள்ளி படிப்பைக் கற்றுப் பட்டம் பெறவேண்டும் என்ற ஒரே எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், அவர்கள் பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் கூறுகின்ற ஒவ்வொன்றையும் அப்படியே மனப்பாடம் செய்து, அதையே பிறகு அவர்கள் கேட்கும்பொழுது சொல்லுவதாலும், எழுதுவதாலும் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். இந்த முறையில் ஒரு மாணவன் எவ்வித உயர்ந்த பட்டத்தை அடைந்த படிப்பாளி என்று கூறப்பட்டாலும், அவனுக்கு போதிய அறிவும், உலகியலில் தகுந்த ஞானமும் அடைந்த வனாக கருதப்பட மாட்டான்.

ஏனெனில் , அம் மாணவன் தனது புத்தகத்தை படித்து, அதில் உண்டாகும் சந்தேகங்களையும், மற்றும் அறிவுக்குப் பொருத்தமற்றதான செய்திகளையும், தனது ஆசிரியர்களிடம், ஏன்? என்ன? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை கேட்டு தெரிந்து கொள்வதில்லை. அப்படிக் கேட்டாலும் அம் மாணவன் வகுப்பில் ஃமிகவும் அதிகப் பிரசிங்கியாக நடந்துக்கொள்கிறான் என்பதாக ஆகிவிடும். ஆகவே, ஆசிரியர் சொல்லு வதைத்தான் கேட்கவேண்டும்; புத்தகத்திலுள்ளதைத் தான் மனப்பாடம் செய்து திரும்பவும் ஒப்பிக்க வேண்டும் என்பது நம்நாட்டுக் கல்விமுறை. இக்கல்வி முறையினால் மாணவர்களுக்கு அறிவு புகட்டப் படுவதால் அவர்கள் பிற்காலப் பழக்கவழக்கங் களுக்கும், நல்லொழுக்கத்திற்கும் தகுதி உடையவர் களாக ஆக மாட்டார்கள்.”

திருச்சி சொற்பொழிவு 7.11.1954, விடுதலை 12.11.1954

61 ஆண்டுகள் கழித்தும் அதே நிலைதான் சொல்லப்போனால் அதைவிட மோசமான நிலை, ஏனென்றால் 1950 களில் கல்வி தனியார் வசம் இல்லை, இப்ப மாணவர்களை பிழிந்து எடுத்து 490 மேல் இத்தனை பேர் 475 மேல் இத்தனை பேர், என விளம்பரம் செய்து தங்கள் பள்ளிக்கு விளம்பரம் தேடிக்கொள்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் தமிழகப் பள்ளிக்கல்வி அகராதிப்படிப் பார்த்தால் 8,10,12 அதாவது 9, 11 வகுப்புகள் காணாமல் போய்விட்டன, இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் இங்கு மாநில அளவில் சிறப்பான இடம் பிடிக்கும் மாணவன்கூடப் போட்டி போட முடியவில்லை, காரணம் 9, 11 வகுப்பு சார்ந்த எதுவுமே அவர்களுக்குக் சேர்வதில்லை.

பள்ளிக்கல்வி நிலைதான் இம்மாதிரி என்றால் உயர்கல்வி நிலை கவலைக்குறியதாக உள்ளது, மத்திய பா.ஜ.க அரசு உலக வர்த்தக அமைப்பின் Gats ( General Aggrement For Trade In Service) அதாவது சேவைத்துறை என அறியப்படும் 16 துறைகளில் இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த உள்ளது டிசம்பர் 15 – 18 தேதிகளில் கென்யா தலைநகர் நைரோபியில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது, GATS அமுலுக்கு வந்தால் இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை இதெல்லாம் காணாமல் போய்விடும்.


சாதி ஒழிப்பிற்காகவும், பார்ப்பனப் பன்னாட்டுக் கொள்ளையை எதிர்த்தும், தமிழ்நாட்டின் உரிமைக்காகவும், உயர்கல்வி, வேலைவாய்ப்பு இடஒதுக்கீடுக்காகவும், தொடர்ந்து போராடி வரும் திராவிடர் இயக்கங்கள் கல்வியாளர்களுடன் ஆலோசித்து 'திராவிடர் கல்விக்கொள்கை'யை உருவாக்க வேண்டும். அக்கொள்கையை திராவிட இயக்கங்களின் ஆட்சிகளின் வழியே செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்.

பகுத்தறிவாளர் கழகங்கள், கோடை விடுமுறையில் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி போன்றவற்றை நம் அமைப்புகள் இன்னும் வலுவாய் நடைமுறைப்படுத்த வேண்டும், நம் தோழர்கள் குடும்ப விழாக்கள் நடத்தி குழந்தைகளையும் பங்குபெறச் செய்து கல்வி குறித்து ஆழமான விவாதங்கள் நடத்த வேண்டும்.

பகுத்தறிவுடனான கல்வி இல்லாத சமுதாயத்திடம் முன் வைக்கும் நம் போராட்டங்கள் எப்படி இருக்கு என்றால்... அட படக்குன்னு சொல்லுங்க எப்படின்னு என்றார் குமார், வேறேப்படி மோடி போட்டோவுக்கு போஸ் குடுக்கற மாதிரிதான் .

அதி அசுரன்

# குடி அழித்த அரசுகளை குடிஅரசால் வழிநடத்துவோம்!









இயற்கைக்கும் உலக உயிர்களுக்கும் இடையே பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும் கடுமையான போரில் இப்போது இயற்கை தனது இருப்பையும் திறனையும் உறுதிப்படுத்திவிட்டது. சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் கடந்த ஒரு மாதமாக வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இலட்சக்கணக்கான மக்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். வடதமிழ்நாட்டில் உண்டான இந்தப் பேரிடர் தமிழர்களிடம் இருக்கும் மனிதநேயம், ஆந்திர, கர்நாடக, கேரள மக்களுக்கு தமிழர்கள் மீதுள்ள நேசம், அனைத்து தேசிய இன, மதக்காரர் களுக்கும் தமிழ்நாட்டின் மீதுள்ள அக்கறை அனைத்தையும் வெளிக்கொண்டு வந்தது.

அதேசமயம் நாடோடி பட நமோ நாராயணனின் ஃப்ளக்ஸ் நகைச்சுவைக் காட்சிகளை மிஞ்சிவிட்ட பல அமைப்புகளின் விளம்பரம், "எழவு வீடா இருந்தாலும் நான் தான் பொணமா இருக்கணும்" என்ற எண்ணத்தில் செயல்பட்ட மிக முக்கிய அரசியல்கட்சிகளின் போக்கு, நிவாரணப் பணிகளில் நடந்த ஜாதித்தீண்டாமை, அணுகாமை போன்ற மறுபக்கங்களையும் வெளிப்படுத்தியது.

வெள்ளப் பாதிப்புகளுக்குக் காரணம் அ.தி.மு.க வா? தி.மு.க வா? என பரபரப்பான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஏரிகள், குளங்கள், ஆறுகளை ஆக்கிரமித்து விட்டோம். இயற்கையை அதன் போக்கில் விடவேண்டும். அதைச் சீண்டியதால் வந்த விளைவு என சுற்றுச் சூழல் ஆர்வலர்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஏரிகள், குளங்கள், ஆறுகளின் இயல்பான போக்கைத் தடுத்தது தான் கடலூர், சென்னையின் வெள்ளச் சீரழிவுகளுக்குக் காரணம் என்பது உண்மை.

ஆனால், இயற்கையை அதன் போக்கிலேயே விட்டுவிட வேண்டும் என்பதில் கடுமையாக முரண்பட வேண்டியுள்ளது. மனிதன் மட்டு மல்லாமல், உலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் நல்வாழ்வுக்காக இயற்கையை நம் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இயற்கை அப்படியே அதன் இயல்பிலேயே இருந்திருக்குமானால் பரிணாம வளர்ச்சிகள் நடைபெற்றிருக்காது. மனிதன் என்ற உயிரினம் இப்போது நாம் பார்க்கும் மனிதனைப் போல இருந்திருக்க வாய்ப்பே இல்லை.

இயற்கையின் போக்கை அறிந்து, புரிந்து - அதனோடு போராடிப் போராடித்தான் அனைத்து உயிரினங்களும் தற்போது நாம் காணும் நிலையை அடைந்திருக்கின்றன. மனித இனம் மட்டுமல்ல; தாவரங்கள், விலங்குகள், பறவைகள் அனைத்துமே இயற்கையோடு போரிட்டுத்தான் வளர்ந்துள்ளன அல்லது மாறியுள்ளன. தோழர் பெரியார் இயற்கை குறித்துப் பேசுகையில்,

### இயற்கை காட்டும் நியாயம்

"மனித சம்பந்தமில்லாது தானாக நிகழும் காரியங்கள் எல்லாம், நியாயமானவை யென்றால், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நியாய விரோதமானதாகு மல்லவா? பிறந்த மேனியை மறைத்து வேட்டி கட்டிக் கொள்வது மயிரைச் சிரைத்துக் கொள்வது உணவைச் சமைத்து உண்பது முதலான ஒவ்வொரு காரியமும் இயற்கைக்கு விரோதமாகின்றது. இயற்கை காட்டும் வழியைப் பின்பற்றுபவன், உணவைப் பச்சையாகவே தின்ன வேண்டும்; குளிருக்கும், மழைக்கும் ஒதுங்குவதற்கு வீடு கட்டிக் கொள்ளக்கூடாது; சட்டை போட்டுக் கொள்ளக் கூடாது. ஆனால் மனிதன் இவற்றைச் செய்வதிலிருந்து இந்த அளவில், இயற்கையைத் தன் போக்கில் போக விடாமல் கட்டுப் படுத்துகிறான் அல்லவா? ஆகையால், தானாக இயங்கும் இயற்கையின் போக்கு நியாயமானதல்ல என்பதை இந்த அளவுக்கு ஒப்புக் கொண்டாக வேண்டும். இயற்கையின் சக்திகள் தானாக இயங்கும் நிலையில், மனிதனுக்குச் சகாயம் செய்வதில்லை.

### இயற்கையின் கொடுமை

நமக்கு இன்றியமையாது வேண்டிய மழைத் தண்ணீரை ஆறுகள் அடித்துக் கொண்டு போய் சாகுபடிக்கு உபயோகமில்லாதபடி சமுத்திரத்தில் சேர்க்கிறது. ஆற்று வெள்ளத்தை அணை கட்டித் தேக்கிக் கால்வாய் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சிக் கொள்ளும் முயற்சி இயற்கையின் போக்குக்கு விரோதமாயினும் சிறப்புக்குரியதல்லவா? பெருங் காடுகளில் தானாகத் தோன்றுங் காட்டுத் தீ பரந்த பிரதேசங் களை நாசப்படுத்துவதுடன் அப்பிரதேசத்தில் வாழும் அனேக ஜீவப் பிராணிகளையும் உடன்கட்டை ஏறச் செய்கிறது. யாருக்கும் முன் எச்சரிக்கை செய்யாமல் எல்லா ஜோஸ்யர்களையும் ஏமாற்றித் திடீரென்று தோன்றும் பூகம்பங்களால் ஏற்படும் துன்பங்கள் அளவிடக் கூடியதா? தானாக உற்பத்தியாகி மனிதனுடைய அடக்குமுறைக்கு மீறி பெருகி வரும் விஷப் பூச்சிகளும், வியாதிக்கிருமிகளும் துஷ்ட ஐந்துக்களும் மனிதனுக்குச் செய்யும் துன்பங்கள் கொஞ்சமா? மேற்கூறிய கொடுமைகளை ஒரு தனி மனிதன் செய்தால், அச்செய்கையை நியாயமான தென்றோ, காருண்யமான தென்றோ, யாராவது சொல்லத்துணிவார்களா? ஆனால் ஆஸ்திகர்களையும், நாஸ்திகர்களையும், நல்லவர்களையும், கெட்டவர்களையும், அறிஞர்களையும், மூடர்களையும் வித்தியாசமின்றி ஒரே நிலையில் வைத்துத் தன்னுடைய யதேச்சாதிகார ஆட்சி புரியும் இயற்கை நெறியை உயர் நெறியென்றும் நீதிநெறியென்றும் நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? இந்த இயற்கைப் போக்கைத் தழுவி நாம் நடந்து கொள்ள முடியுமா? அப்படியன்றித் தன் போக்கில் இயங்கும் இயற்கை மனிதனால் அடக்கி ஆளப்படத் தகுதியுள்ளதேயன்றிப் பின்பற்றத் தகுதியுடையதல்ல என்று சொல்வதில் என்ன குற்றம்?"

தோழர் பெரியார் – பகுத்தறிவு இதழ் – மே 1936

1936 ல் தனது பகுத்தறிவு ஏட்டில், இயற்கையைக் கட்டுப்படுத்தி மனித இனம் வளர்ந்த முறையை ஒரு ஆய்வுக்கட்டுரை போல தோழர் பெரியார் விளக்கியுள்ளார். அக்கட்டுரையை முழுவதுமாக இந்த இதழில் வேறு இடத்தில் வெளியிட்டுள்ளோம்.

கடலூரில் பெண்ணையாற்றில் தொடர்ச்சியாக மணல் கொள்ளை நடந்துவருகிறது. பெண்ணையாற்றில் தண்ணீர் வந்தால் மணல் கொள்ளைக்குத் தடையாக இருக்கும் என யோசித்து, ஆற்றின் போக்கை மாற்றி கெடிலம் ஆற்றில் திருப்பிவிட்டிருக்கிறார்கள். அதுவும் வெள்ளப் பாதிப்பு களுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

ஒரு கன அடி மணல் உருவாவதற்கு சுமார் 100 ஆண்டுகள் ஆகும். அப்படி மிகவும் அரிதான மணல்வளத்தை நாம் அனைவரும் சேர்ந்தே அழித்துக் கொண்டிருக்கிறோம். அதனால் ஒரு மனிதப்பேரழிவு வரும்போதுதான் அதைப்பற்றி நாமும், நமது செய்தித்தாள்களும், தொலைக்காட்சிகளும் பரபரப்பாக விவாதிப்போம். அப்போதும் நமது அரசும், அரசியல்வாதிகளும் ஓட்டுக்கணக்கை அடிப்படையாக வைத்து அறிக்கை விட்டுக்கொண்டிருப்பார்கள்.

தமிழ்நாடு முழுவதும் மணல் கொள்ளை நடந்துவருகிறது. அந்தக் கனிமவளக் கொள்ளையை எதிர்ப்பவர்களும்கூட, தான் வீடு கட்டும்போது மணலைத்தான் பயன்படுத்துகிறார்கள். வீடு கட்டுவதற்கு மணலுக்கு மாற்றாக வேறு எதையும் ஆராயவோ. யோசிக்கவோ மாட்டார்கள். இப்படி மணல் கொள்ளையை நடத்துபவரும் சரி, அதை எதிர்ப்பவரும் சரி அதற்கு மாற்று வழியை யோசிப்பதே இல்லை.

தமிழ் இந்து நாளிதழில் சென்னை, கடலூரில் நீர்நிலைகள் மீதான மனிதர்களின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாகத் தொடர்ச்சியாக செய்தியாளர் டி.எல்.சஞ்சீவிகுமார் எழுதி வருகிறார். அவரது கருத்து ஒன்றையும் வெளியிட்டுள்ளோம். நீர்நிலைகளின் மீதான ஆக்கிரமிப்புகள் வெள்ளப் பாதிப்புக்கு முக்கியக்காரணம் என்பதை நாமும் மறுக்கவில்லை. ஆக்கிரமிப்புக்கு அனுமதித்த அரசுகள் நீரின் போக்கினைப் புரிந்து, ஆறுகளின் இயல்பினைப் புரிந்து அவற்றுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும். மாற்று வழிகளை நன்கு ஆராய்ந்து, திட்டமிட்டு செயல்படுத்தி விட்டு அதன் பிறகு அந்த இடங்களை மனிதர்களின் பயன்பாட்டுக்கு அனுமதித்திருக்க வேண்டும்.

### ஜப்பான் அரசின் வெள்ளத்தடுப்புத்திட்டம்

எடுத்துக்காட்டாக ஜப்பான் அரசின் வெள்ளத் தடுப்புத் திட்டம் ஒன்றைப் பார்க்கலாம். சென்னை அண்ணா பல்கலைக்கழகச் சுற்றுச்சூழல் துறை முதுநிலைப் பொறியியல் மாணவரான தோழர் வீ.பிரபாகரன் அத்திட்டம் பற்றி விரிவாக விளக்கினார்.

ஜப்பானின் டோக்கியோவில் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெள்ளம் வரும். அங்குள்ள நாகா ஆற்றின் கரைகளில் வழிந்து அருகே இருக்கும் விலை மதிப்பு மிக்க வயல் வெளிகளை மூழ்கடிப்பதுடன், ஒட்டுமொத்த நகரையே பாழ்படுத்தி வந்திருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட டோக்கியோ நிர்வாகம் யோசித்தது. ஆற்றின் உபரிநீரையும், வெள்ளக்காலங்களில் சாலைகளில், நகரங்களில் சேரும் வெள்ள நீரையும் பூமிக்கடியில் சேமித்து, வெள்ளம் வடிந்ததும் அருகிலிருக்கும் ஈடோ ஆற்றில் கொண்டுபோய் சேர்த்துவிடும் திட்டம். 1992 ல் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் 2009 ல் முடிவுற்றது. சுமார் 19 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

பூமிக்கு அடியில் 50 மீட்டர் ஆழத்தில், 30 மீட்டர் உயரமும், 70 மீட்டர் அகலமும் கொண்ட பெரும் நீர் சேமிப்புக் கிடங்குகள் உருவாக்கப்பட்டன. ஒரு கிலோ மீட்டருக்கு ஒன்று என மொத்தம் 6 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டன. ஒவ்வொரு கிடங்கும் ஒரு ஏரிக்குச் சமமானதாகும். மழை பெய்தாலோ, ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டாலோ அந்த நீர் இந்த சேமிப்புக் கிடங்குகளில் வந்து சேரும்வண்ணம் சாலைகளில் நீர் சேகரிப்பு வழிகளை உருவாக்கியிருந்தனர்.

நீர் சேகரிப்பு வழிகள் வழியாக சாலைகளில் வழியும் நீர் – பூமிக்கடியில் கிடங்குகளுக்கு வருகிறது. ஒரு கிடங்கு நிரம்பியதும் அடுத்த கிடங்கிற்குத் தண்ணீர் போகும். ஆறு தொட்டிகளும் மொத்தமாக நிரம்பிவிட்டால், அந்த நீர் நகரத்திற்கு வெளியே 6.3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஈடோ நதியில் வெளியேற்றப்பட்டு எளிதாகக் கடலில் கலக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு நொடியில் 200 கன மீட்டர் வெள்ள நீரை ஈடோ நதியில் வெளியேற்றும் திறன் கொண்டது இத்திட்டம். ஈடோ நதி கடல்மட்டத்தைவிட நல்ல உயர்வாக இருப்பதால், எளிதாக தாழ்வான கடல் பகுதியில் வெள்ளநீர் கலந்துவிடுகிறது.

**சிங்கப்பூரின் PUB**

உலகின் மிகமுக்கியத் துறைமுக நகரம், சுற்றுலா நகரம், கேளிக்கைகளுக்கான நகரம், நுகர்வுவெறிக்கான நகரம் எனப் பல அடையாளங்களைக் கொண்டிருக்கும் மாநகரம் சிங்கப்பூர். சிங்கப்பூர் நாட்டின் வடிகால் அமைப்பு உலகப்புகழ் பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் புதிது புதிதாக வானுயர்ந்த கட்டிடங் களும், பெரும் அளவிலான வணிக வளாகங்களும் கட்டப் பட்டுக்கொண்டே இருக்கும் நாடு சிங்கப்பூர். PUB என்ற அரசின் நிறுவனம் சிங்கப்பூரின் நீர் நிர்வாகத்தை மேற்கொள்கிறது.

இங்கு kallang, Geylang என்ற இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. கிழக்கு நீர்பிடிப்புப்பகுதி, மேற்கு நீர்பிடிப்புப் பகுதி, மைய நீர்பிடிப்புப் பகுதி என சிங்கப்பூரை மூன்று மண்டலங்களாகப் பிரித்து – ஒவ்வொரு மண்டலத்திலும் பல கால்வாய்களை அமைத்து எவ்வளவு வெள்ளம் வந்தாலும் நேரடியாக விரைவாகக் கடலில் கலக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் நிலத்திற்கு அடியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் முறையாகக் கட்டப்பட்டிருக்கும். அவை சிறு சிறு வாய்க்கால்கள் வழியாக மழைநீரும், வெள்ளநீரும், நீர் சேகரிப்புக் கால்வாய்களுக்குச் செல்லும். நான்கு வழிச்சாலைகள், ஆறுவழிச்சாலைகள் எவையாக இருந்தாலும் அவற்றுக்கு நடுவே வெள்ளநீர் செல்ல கால்வாய்கள் அமைக்கப்பட்டிருக்கும். இந்தக் கால்வாய்களிலிருந்து சிறு சிறு இயற்கை மற்றும் செயற்கைக் குளங்களுக்கு வெள்ளநீர் செல்லும். அவையும் நிரம்பினால் குளங்களின் நீரும் கால்வாய்கள் வழியாக கடலுக்குச் செல்லும்.

வீடுகளிலும் சாலைகளிலும் இருக்கும் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள், அதன் சிறு வாய்க்கால்கள், அவை இணையும் கால்வாய்கள், குளங்கள் அனைத்தையும் பி.யு.பி நிறுவனம் கண்காணிக்கும். பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு அடைப்புகளைச் சரிசெய்யும். பயிற்சி பெற்ற ஊழியர்கள் மட்டுமல்லாமல் 200 க்கும் மேற்பட்ட சென்சார்களைக் கொண்டும் கணினி மயமாக்கப்பட்ட கண்காணிப்பும் இருக்கிறது.

ஜப்பான், சிங்கப்பூர் மட்டுமல்லாமல் உலகில் முன்னேறிய பல நாடுகளில் சிறப்பான வெள்ளநீர் நிர்வாகமுறைகள் இருக்கின்றன. குடிக்கும் நீரைக்கூட அமெரிக்க நிறுவனத்திலிருந்து பெற்றுவரும் நாம், அந்த நாடுகளின் நீர் நிர்வாகத் திட்டங்களைப் பற்றி அறிந்துகொள்வதில்லை. லாஸ் ஏஞ்சல்சின் கழிவுநீர் நிர்வாகத்தைப் பற்றி அறிந்துகொள்வதில்லை. நமக்குத்தான் மலம் அள்ளவும், கழிவுநீர்ப்பாதைகளின் அடைப்புகளைச் சரிசெய்யவும் சக்கிலியர்கள் இருக்கிறார்களே என்ற ஜாதித்திமிர் எதைப் பற்றியும் கவலைகொள்ள விடுவதில்லை.

**இயற்கையின் சீற்றங்களை வெல்லும் திட்டங்கள்**

தன் போக்கில் இயங்கும் இயற்கை, மனிதனால் அடக்கி ஆளப்படத் தகுதியுள்ளதேயன்றிப் பின்பற்றத் தகுதியுடைய தல்ல என்று சொல்வதில் என்ன குற்றம்? என்று கேட்ட தோழர் பெரியாரின் கணிப்பை – உலகின் முன்னேறிய நாடுகள் தமது வெள்ளநீர், மழைநீர், கழிவுநீர் நிர்வாகத் திட்டங்களால் உறுதிப்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டில், இயற்கையின் போக்கைக் கணிக்காமல், ஆராயாமல் ஆக்கிரமிப்புகளைத் தொடுத்து விட்டோம். வடிகால் அமைப்புகளைப் பற்றித் திட்டமிடாமல் இயற்கையை இடறிவிட்டோம். அதற்குரிய எதிர்வினையையும் பார்த்துவிட்டோம். இனிமேலாவது முன்னேறிய நாடுகளின் அனுபவங்கள், திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து, நம்நாட்டுச் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப நகர அமைப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளைத் தொடங்க வேண்டும்.

நகரங்களை உருவாக்குவதோ, நகரங்கள் புதுப்பிக்கப் படுவதோ சிக்கல் அல்ல. அப்படி உருவாக்கப்படும்போது புயல், வெள்ளம், மழை, நிலநடுக்கம் போன்ற இயற்கைச்சீற்றங்களையும் – மழை, வெள்ளநீர் சேகரிப்பு அமைப்பு, கழிவுநீர் வடிகால் அமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற எதிர்காலத் தேவைக்கானவற்றையும் மனதில் கொண்டு திட்டங்களைத் தயாரித்து, அவற்றை நேர்மையாகச் செயல்படுத்த வேண்டும். இதுவரை இந்தத் துறையில் அப்படி அறிவுப்பூர்வமாகத் திட்டமிட்டு, அதை நேர்மையாகச் செயல்படுத்த எந்த ஒரு அரசாங்கமும் நமக்கு வாய்க்கவில்லை என்பதே உண்மை.

இனியும் இவை போன்ற பேரிடர்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள நாமே திட்டங்களை உருவாக்குவோம். இன்று உலகின் வளர்ந்த நாடுகள் எல்லாவற்றிலும் தமிழ்நாட்டுக்காரர்கள் நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அமெரிக்காவில், பிரிட்டனில், ஜப்பானில், பிரான்சில், ஜெர்மனியில், சுவிட்சர்லாந்தில் கழிவுநீர் வடிகால் அமைப்புகள் எப்படி உள்ளன? வெள்ளநீர் நிர்வாகம் எந்த முறையில் உள்ளது? மனிதக் கழிவுகளைச் சேகரித்து அகற்றும் முறை எவ்வாறு உள்ளது? என்பதைப் பற்றியெல்லாம் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நேரடியாக அறிய முயற்சி செய்ய வேண்டும்.

அங்கெல்லாம் வெற்றி பெற்ற திட்டங்களை முன்மாதிரி யாக வைத்து, தமிழ்நாட்டில் உள்ள பொறியாளர்கள், தேர்தல் அரசியலில் பங்கேற்காத அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர், மாணவர்கள், நேர்மையான அரசு அதிகாரிகள் இணைந்து தமிழ்நாட்டுக்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். பொதுவெளியில் அவை பற்றி கருத்துக்களைக் கேட்டு

விவாதிக்க வேண்டும். அப்படி மக்களால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை அரசாங்கங்களின் வழியே செயல்படுத்த முயற்சிக்க வேண்டும். அரசும் மக்களும் இணைந்தோ - அரசுகளை மீறியோ திட்டங்களை நாமே செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சகாயம் I.A.S. அவர்களை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்க ஒரு முயற்சி நடந்துவருகிறது. அரசியலில் இறக்கி அவரையும் வீணடித்து விடாமல் இதுபோன்ற திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்கு அவரைப் பயன்படுத்த வேண்டும். அவரைப் போன்ற இன்னும் பல நல்ல அதிகாரிகளின் துணையோடு மக்கள் நலத்திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் எவ்விதச் சுயநலமுமின்றி ஒன்றுகூடித் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தத் தொடங்கினால் அரசுகள் நம் பின்னே ஓடிவரவே செய்யும். நிவாரணப் பணிகளில் நாம் காட்டிய அர்ப்பணிப்பு உணர்வும், அக்கறையும் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும். சமுதாய நலன் குறித்த பொறுப்பு, அக்கறை முதலில் நமக்கு வர வேண்டும். சாமானிய மக்களுக்கு வரவேண்டும். அந்தச் சாமானிய மக்களுக்குப் பாடுபடுவதற்காகக் களத்தில் நிற்கும் அனைத்து வகை இயக்கங்களுக்குப் சமூகப் பொறுப்பு வரவேண்டும். அந்தச் சமூகப் பொறுப்பு நமக்கு அடையாளம் காட்டப்படவே இல்லை.

**நேர்மையற்ற சமுதாயம்**

சில ஆண்டுகளுக்கு முன்பு, புதிய வீடுகள் கட்டும் போது, அந்த வீடுகளில் மழைநீர் சேகரிப்பு வசதிகள் - தொட்டிகள் அமைத்தால்தான் கட்டிட அனுமதி கிடைக்கும் என்று அரசு உத்தரவிட்டது. ஆனால் மக்களில் 99 சதவிகிதப் பேர், உள்ளாட்சி நிர்வாகத்திடம் சென்று மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்யப்பட்டதாகப் போலிச் சான்றிதழை வாங்குவதில் தான் குறியாக இருந்தார்கள்.

மக்களுக்காகப் போராடும் அமைப்புகளின் நிலையோ மேலும் பொறுப்பற்றதாகவே இருக்கிறது. மணற்கொள்ளையை எதிர்ப்போம். நம் வீட்டுக்குக் காவிரியிலிருந்து மணல் தேடுவோம். வன வளத்தைக் காப்போம், மரங்களை வெட்டக் கூடாது என்போம். நம் வீட்டுக்கு தேக்குமரத்தில் இராஜநிலை வேண்டு மென்போம். தோதகத்தியில் (Rose Wood) கட்டில் செய்வோம். சுற்றுச்சூழலைக் கெடுக்கும் கருவேல மரங்களைக் கொண்டு இராஜ நிலையையோ, சிறு ஜன்னலையோகூடச் செய்ய மாட்டோம். மாற்றிச் சிந்திக்கவே மாட்டோம்.

அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்த இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்போம். அதைவிட அதிகமான செல்வம் தங்க இறக்குமதி வழியாக வெளிநாட்டுக்குச் செல்கிறது. அதைப் புரிந்துகொள்ளாமல் நம்வீட்டுப் பெண்களை தங்க நகைகளால் அலங்கரிப்போம். டாஸ்மாக்கே கூடாது என்போம். டாஸ்மாக்குக்கு சரக்கு சப்ளை செய்பவரை ஆதரவு சக்தி என்போம்.

புகை உயிருக்குப் பகை என்போம். தீபாவளிப் பட்டாசுகளால் 3000 டன் புகை வெளிவரும் நேரத்தில் தீபாவளிப் பலகாரங்கள் செரிப்பதற்கு விகடனில் கட்டுரை எழுதுவோம்.. காதலர் தினம் நுகர்வுக் கலாச்சாரத்தை வளர்க்கிறது என்போம். பல்லாயிரங்கோடி வர்த்தகம் நடக்கும் தீபாவளிக்குச் சிறப்புமலர் வெளியிடுவோம். மிஞ்சிப் போனால் இணையதளத்தோடு புரட்சியை நிறுத்திக்கொள்வோம்.

இந்துமதப் பண்டிகைகளைக் கொண்டாடக்கூடாது என்று பரப்புரை செய்வோம். நம் வீட்டுப் பிள்ளைகள் கொண்டாடும் போது பாசத்தில் விட்டுவிடுவோம். முல்லைப் பெரியாற்றில் தண்ணீர் தராத கேரளாவுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப் போராடுவோம். அடுத்த மாதமே அய்யப்பனுக்கு மாலை போட்டு அரிசி பருப்பையும், நெய், தேங்காயையும் தலையில் சுமந்துபோய்க் கொட்டிவிட்டு வருவோம்.

பெரியார், அம்பேத்கர், சேகுவேரா, மார்க்ஸ், ஏங்கெல்ஸ் எல்லாம் பேசுவோம். ஜாதி, தீண்டாமையை ஒழித்தே தீருவோம் என்போம். திருமணம் என்று வரும்போது ஜாதிக்குள், பெண் தேடுவோம். முகநூலில் பெண்விடுதலை குறித்துத் தெறிக்க விடுவோம். வீட்டில் துணைவியாருக்கு முகநூலில் கணக்கே இல்லாமல் பார்த்துக்கொள்வோம். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்போம். நம் வணிக நிறுவனங்களில் 12 மணி நேரம் தொழிலாளியைக் கசக்கிப் பிழிவோம்.


இதுபோன்ற இன்னும் பலவாறான பண்புகளை நேரடியாகக் கண்டுள்ளோம். அப்படிப்பட்டவர்களோடு பழகிப் பழகி இதுதான் யதார்த்தம் என்ற நிலைக்கு மாறிவிட்டோம். "அது கொள்கை இலக்கு - இது செயல் திட்டம்" எனப் பேசிப் பழகி விட்டோம். அரசியல்வாதிகளே திகைக்கும் அளவுக்குச் சமரசமாகிப் போய்விட்டோம்.

உயிர்களைக் குறித்தோ, மனிதர்களைக் குறித்தோ, சுற்றுச்சூழலைக் குறித்தோ, உயிர் தோன்றிய வரலாறு, உலகம் தோன்றிய வரலாறு, பரிணாம வளர்ச்சி, உயிரினங்கள் வளர்ந்த வரலாறு போன்றவை குறித்தோ அடிப்படை அறிவே இல்லாத - தான் மட்டும் வாழவேண்டும் என்ற எண்ணத்தை மட்டுமே உடைய - தனக்குப் பிறகு மனித இனத்தைச் சேர்ந்த தனது சந்ததிகள் வாழ்வது பற்றிக்கூட சரியான அறிவு இல்லாத சமுதாயத்தில் தான் நாம் தற்போது வாழ்ந்து வருகிறோம்.

இந்தச் சமுதாயத்திலிருந்து உருவாகும் அரசாங்கங்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், வணிகர்கள், வழக்கறிஞர்கள், அறிவியலாளர்களிடம் மேற்கண்ட பண்புகள்தான் இருக்கும். வெள்ளப்பேரிடருக்குக் காரணமானவர்கள், அவர் யாராக இருந்தாலும் இந்தச் சமுதாயத்தின் பண்புகளைத்தான் பிரதிபலிக்கிறார்கள்.

யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டு வதற்காக இதை எழுதவில்லை. அப்படி யாராவது புரிந்து கொண்டால் அதற்காக வருந்துகிறேன். நாம் முதலில் மாறவேண்டும். நாம் பேசும் தத்துவங்களை - நாம் பிரச்சாரம் செய்யும் நல்ல கருத்துக்களை நாம் முதலில் செயலில் காட்டவேண்டும். அதைப்பார்த்து மக்களும் மாறுவார்கள் என்பதைத்தான் சொல்ல வருகிறேன். நாம் மாறுவோம். சமூகப் பொறுப்போடு நாமே திட்டங்களைத் தீட்டுவோம். அதைச் செயல்படுத்தவும் உறுதியாக முயற்சிப்போம். மக்களாட்சி, குடி அரசு என்பதன் உண்மையான பொருளை அரசியல் வாதிகளுக்கு உணர்த்துவோம்! குடி அழித்த அரசுகளை குடி அரசால் வழிநடத்துவோம்!

-தோழர் பெரியார்



# இயற்கை பின்பற்றத் தகுதியுடையதல்ல!

Back to Nature இயற்கை வழிக்குத் திரும்பு! Back to the Village கிராமத்திற்குப் போ!! Support village industries குடிசைத் தொழிலை ஆதரி! என்கிற பல்லவிகளைத் தேச பக்தர்களில் பலர் இதுபோது பாடி வருகிறார்கள். B.A., M.A. பட்டதாரிகளுக்கெல்லாம் கிராமத்துக்குப் போய் எளிய வாழ்க்கையை யேற்றுக் கொள்ளும்படி உபதேசம் செய்யப்படுகிறது. படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் பாமரரின் தரித்திரத்தைப் போக்குவதற்கும் எல்லோரும் கிராமத்துக்குப் போய் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வது தான் சிறந்த மார்க்கம் என்று சொல்லப்பட்டு வருகிறது. கிராமப் புனருத்தாரணஞ் செய்வதற்காக தோழர் காந்தியார் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம் என்பதாக ஒரு சங்கத்தைத் தோற்றுவித்திருக்கிறார். கவர்ன்மெண்டாரும் இந்த வேலையைச் செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிவைத்திருக்கின்றனர்.

ஆனால் நாம் இந்த சந்தர்ப்பத்தில் இயற்கை வழிக்குத் திரும்புவதும், கிராமத்திற்குப் போவதும், எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதும் நாட்டு மக்களுக்கு நலந்தரக் கூடிய காரியங்களா? நடக்கக் கூடிய காரியங்களா? கிராமத்திலா நமது கதி மோக்ஷம்? என்கிற விஷயங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்...

### இயற்கை என்பது என்ன?

இயற்கை வாழ்க்கை, இயற்கை வழி, இயற்கைச் சக்தி, இயற்கைச் சட்டம் என்று தாராளமாய்ச் சொல்லப்படும் போது, இயற்கை என்ற வார்த்தையின் தெளிவான அர்த்தம் என்ன என்பது கவனிக்கப் படுவதில்லை. ஆனால் அதன் அர்த்தத்தைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டியது இயற்கை வாழ்கையைப் பற்றிய இந்த ஆராய்ச்சிக்கு மிகவும் அவசியமாகும். "இயற்கையைப் பின்பற்றி வாழ்க்கை நடத்து" என்று சொல்லும்போது சாதாரணமாய்க் கவனிக்கப்படாத அர்த்தத்தை முதலில் கவனிப்போம்.

### இயற்கையின் விரிந்த பொருள்

ஒரு பொருளின் தோற்றம், குணம் அல்லது சக்தி, செய்கை, ஆகியவை எல்லாம் சேர்ந்த அதன் முழுத்தன்மையை அப்பொருளின் இயற்கையென்று பொதுப்படச் சொல்லலாம். தீயின் இயற்கை சுடுதல், எரிதல், புகைதல், ஒளிவிடுதல் முதலியன. நீரின் இயற்கை பள்ளம் நோக்கிப் பாய்தல், தன் சமநிலைக்குப் பரவுதல் முதலியன. இம்மாதிரியே எல்லாப் பொருள்களுக்கும் அவைகளுக்குள்ள சக்திகளின் (மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்படாதனவும்) தொகுதியை அப்பொருள்களின் இயற்கை எனலாம். ஒவ்வொரு பொருளுக்கும் வேறு வேறான இயற்கை இருப்பினும், அவ்வப்பொருளின் இயற்கையானது, கால தேச வேறுபாட்டால் மாறுபாடடையாமல், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒரே தன்மைத்தாய் இருக்கிறது. பொருள் களுக்குள்ள இயற்கைச் சக்திகள் வெளிப்பட்டு இயங்கும் முறையை அதனதன் சுபாவத்தை இயற்கை விதி அல்லது சட்டம் என்று சொல்லலாம். சூடு விரியச் செய்கிறது. குளிர் இறுகச் செய்கிறது. இதுபோன்ற இயற்கை விதிகளும் காலதேச வேறுபாட்டால் மாறுபாடடையாமல், எங்கும் எப்போதும் ஒரே மாதிரி நிகழக் கூடியவை. காற்றும் தண்ணீரும் இல்லாமல் பிராணிகள் உயிர்வாழ முடியாது என்பதும் ஓர் இயற்கை விதி. இவ்வாறே உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் எல்லாத் தன்மைகளும் எல்லாச் சக்திகளும், அவை இயங்கும் எல்லா விதிகளும் சேர்ந்தது இயற்கையென்று விரிந்த பொருள் கொண்டு பார்க்கும்போது எப்பொருளையும், எச்செய்கை யையும் செயற்கை என்று சொல்ல முடியாது. செயற்கை அனைத்தும் இயற்கையே யாகும். ஏனெனில் இயற்கைக்குப் புறம்பான சக்தி செயற்கைக்கு ஏது? இயற்கைச் சக்திகளை ஏவி, இயற்கை விதிகளின் படி இயங்கச் செய்யத்தான் மனிதனால் முடியுமே தவிர, இயற்கையில் இல்லாத புதுச் சக்தியைப் பொருள்களுக்கு ஊட்டவோ, இயற்கை விதிகளுக்கு மாறாக அச்சக்திகளை இயங்கச் செய்யவோ, மனிதனால் முடியாது.

## இயற்கையும் செயற்கையும்

இயற்கைப் பொருள்களையும் இயற்கைச் சக்திகளையும் கொண்டு ஓர் குறிப்பிட்ட நோக்கத்தையடைய மனிதன் செய்யும் முயற்சியும், அம்முயற்சியின் பயனும் செயற்கையெனப்படுகிறது. ஆனால், காவேரிக் கரையிலிருந்த மரம் வெள்ளத்தில் மிதந்து வருவதற்கும், கடல்களைக் கடக்கக் கட்டப்பட்ட கப்பல்கள் தண்ணீரில் மிதந்து செல்வதற்கும் ஆதாரமான இயற்கை விதி ஒன்றே. உலை மூடியை எழுப்பும் நீராவிச் சக்திக்கும், ரயில் என்ஜினை இயங்குவிக்கும் நீராவிச் சக்திக்கும், அளவிலும், அமைப்பிலும் அன்றித் தன்மையில் என்ன வித்தியாசம்? காட்டில், தானே உதிர்ந்து மண்ணில் புதைந்த மாங்கொட்டையும், தோட்டத்தில் குடியானவன் கொண்டுபோய் ஊன்றிய மாங்கொட்டையும் முளைத்தெழுவது ஒரே விதமான இயற்கைச் சக்தியைக்கொண்டல்லவா?

ஆகையால் செயற்கையெனப்படும் எல்லா வற்றிலும் மனிதன் செய்யும் முயற்சிகள் இயற்கைக்கு மாறுபட்டனவாகா. இன்ன பொருளை இன்ன நிலையில் வைப்பது, இன்ன வகையில் சேர்ப்பது, அல்லது இன்ன அளவில் பிரிப்பது ஆகிய காரியங்களினால், இன்ன சக்திகள், இன்ன வகையில் தோன்றி இன்ன விதிகளின்படி இயங்கும் என்கிற உண்மைகளைக் கவனித்தறிந்து தனக்குச் சாதகமான பலனை அளிக்கும்படி, அப்பொருளை, அத்தன்மையில் நிறுத்தவோ,. சேர்க்கவோ, பிரிக்கவோ செய்யும் முயற்சிகளை இயற்கைக்குப் புறம்பானவை என்று எப்படிச் சொல்லக்கூடும்? இவ்வாறு முயற்சிக்கும் மனிதனுடைய எண்ணங்களும், மனோ முயற்சியும், இதற்காக இவன் எடுத்துக் கொள்ளும் தேக முயற்சியும் கூட, இயற்கை சக்திகளுக்கும், இயற்கை விதிகளுக்கும் கட்டுப்பட்டே நிகழ்தல் கூடும் என்றால், எது இயற்கை? எது செயற்கை? எனவே, இயற்கை என்பதன் விரிந்த பொருளில் எதுவும் செயற்கையாதல் இல்லையாதலால், ரயில் எஞ்ஜினும், காந்திக்குல்லாயும் இயற்கையேயாதலால், விவசாயமும், கைத்தொழிலும் இயற்கையேயாதலால், "இயற்கையைப் பின்பற்று; இயற்கை வழியைப் பின்பற்று" என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. இயற்கைக்குப் புறம்பாகவோ இயற்கைக்கு மாறாகவோ, ஒரு நிமிஷங்கூட நடக்க முடியாத ஒருவனை, "இயற்கையைப் பின்பற்று" என்று சொல்வது, "உயிர் வாழ வேண்டின் சதா சுவாசித்துக் கொண்டிரு" என்று சொல்வது போலிருக்கிறது!

## இரண்டாவது அர்த்தம்

"இயற்கை வழிக்குத் திரும்பு" என்று சொல்லும் போது தாங்கள் கொண்ட அர்த்தம், மேலே கூறிய விரிந்த எண்ணத்தில் அல்ல, வேறு அர்த்தத்தில் என்று தேச பக்தர்கள் சொல்லக்கூடும். மனிதனுடைய தூண்டுதல், ஏவுதல், முயற்சி முதலிய எவ்வித சம்பந்தமும் இல்லாமல், பொருள்கள் தாமாக இயங்குகின்ற தன்மை தான் நாங்கள் சொல்லும் இயற்கை. இந்தக் குறுகிய அர்த்தத்தின்படிதான், இயற்கை, நம் நடத்தைக்கும் வாழ்க்கைக்கும் வழி காட்டுகிறது, அதை அனுசரித்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லுவதாகக் காந்தியார் சொல்லலாம். மனித சம்பந்தம் எதுவும் இல்லாமல், இயற்கையாக உள்ள நிலைமையும், மனித முயற்சியின்றித் தானாக நிகழும் நிகழ்ச்சிகளும், நியாயமும், காருண்யமும், தெய்வத் தன்மையும் வாய்ந்தவை யென்றும், பொருள்கள் தானாக இயங்கும் நெறி, உயர் நெறி, உண்மை நெறி, நீதி நெறி என்றும், மனிதனுடைய அறிவு கற்பிக்கும் நெறியும் ஒழுக்கமும், நீதியற்றவை, நேர்மையற்றவை யென்றும், ஆகையால் நாகரிக வாழ்க்கையும், விஞ்ஞான நெறியும், தள்ளத் தக்கவை யென்றும் சொல்லப்படும் வாதங்களை இனி ஆராய்வோம்.

## இயற்கை காட்டும் நியாயம்

மனித சம்பந்தமில்லாது தானாக நிகழும் காரியங்கள் எல்லாம், நியாயமானவை யென்றால், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நியாய விரோதமானதாகுமல்லவா? பிறந்த மேனியை மறைத்து வேட்டி கட்டிக் கொள்வது மயிரைச் சிரைத்துக் கொள்வது உணவைச் சமைத்து உண்பது முதலான ஒவ்வொரு காரியமும் இயற்கைக்கு விரோதமாகின்றது. இயற்கை காட்டும் வழியைப் பின்பற்றுபவன், உணவைப் பச்சையாகவே தின்ன வேண்டும்; குளிருக்கும், மழைக்கும் ஒதுங்குவதற்கு வீடு கட்டிக் கொள்ளக்கூடாது; சட்டை போட்டுக் கொள்ளக் கூடாது. ஆனால் மனிதன் இவற்றைச் செய்வதிலிருந்து இந்த அளவில், இயற்கையைத் தன் போக்கில் போக விடாமல் கட்டுப் படுத்துகிறான் அல்லவா? ஆகையால், தானாக இயங்கும் இயற்கையின் போக்கு நியாயமானதல்ல என்பதை இந்த அளவுக்கு ஒப்புக் கொண்டாக வேண்டும். இயற்கையின் சக்திகள் தானாக இயங்கும் நிலையில், மனிதனுக்குச் சகாயம் செய்வதில்லை.

## இயற்கையின் கொடுமை

நமக்கு இன்றியமையாது வேண்டிய மழைத் தண்ணீரை ஆறுகள் அடித்துக் கொண்டு போய் சாகுபடிக்கு உபயோகமில்லாதபடி சமுத்திரத்தில் சேர்க்கிறது. ஆற்று வெள்ளத்தை அணை கட்டித் தேக்கிக் கால்வாய் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சிக் கொள்ளும் முயற்சி இயற்கையின் போக்குக்கு விரோதமாயினும் சிறப்புக்குரியதல்லவா? பெருங் காடுகளில் தானாகத் தோன்றுங் காட்டுத் தீ பரந்த பிரதேசங்களை நாசப்படுத்துவதுடன் அப்பிரதேசத்தில் வாழும் அனேக ஜீவப் பிராணிகளையும் உடன்கட்டை ஏறச் செய்கிறது. யாருக்கும் முன் எச்சரிக்கை செய்யாமல் எல்லா ஜோஸ்யர் களையும் ஏமாற்றித் திடீரென்று தோன்றும் பூகம்பங்களால் ஏற்படும் துன்பங்கள் அளவிடக் கூடியதா? தானாக உற்பத்தியாகி மனிதனுடைய அடக்குமுறைக்கு மீறி பெருகி வரும் விஷப் பூச்சிகளும், வியாதிக்கிருமிகளும் துஷ்ட ஜந்துக்களும் மனிதனுக்குச் செய்யும் துன்பங்கள் கொஞ்சமா? மேற்கூறிய கொடுமைகளை ஒரு தனி மனிதன் செய்தால், அச்செய்கையை நியாயமான தென்றோ, காருண்ய மானதென்றோ, யாராவது சொல்லத்துணிவார்களா? ஆனால் ஆஸ்திகர்களையும், நாஸ்திகர்களையும், நல்லவர்களையும், கெட்டவர்களையும், அறிஞர்களையும், மூடர்களையும் வித்தியாசமின்றி ஒரே நிலையில் வைத்துத் தன்னுடைய யதேச்சாதிகார ஆட்சி புரியும் இயற்கை நெறியை உயர் நெறியென்றும் நீதிநெறியென்றும் நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? இந்த இயற்கைப் போக்கைத் தழுவி நாம் நடந்து கொள்ள முடியுமா? அப்படியன்றித் தன் போக்கில் இயங்கும் இயற்கை மனிதனால் அடக்கி ஆளப்படத் தகுதியுள்ளதே யன்றிப் பின்பற்றத் தகுதியுடையதல்ல என்று சொல்வதில் என்ன குற்றம்?

## உணர்ச்சியா அல்லது அறிவா? எதைப் பின்பற்றுவது?

நம்முடைய செய்கைகளுக்கெல்லாம் கர்த்தா, நமது எண்ணங்கள். நம்முடைய எண்ணங்கள், இருவகைகளில் உருக்கொள்கின்றன. இயல்பாக எழும் உணர்ச்சி பற்றியும், ஆராய்ந்து பார்க்கும் அறிவு பற்றியும் என்று இரண்டு விதங்களில் நம் எண்ணங்கள் எழுப்பப்பட்டு செய்கைக்குத் தூண்டுகின்றன. இவற்றுள் எவ்வகை எண்ணங்களை நாம் பின்பற்ற வேண்டும்? உணர்ச்சி பற்றி ஏற்படுபவைகளையா? அறிவு பற்றி ஏற்படுபவைகளையா? உணர்ச்சி பற்றி எழும் எண்ணங்கள் இயற்கையானவையாகும். அறிவு பற்றி எழும் எண்ணங்கள் இயற்கையின் போக்குக்கு மாறுபட்டவையாகும். இதை ஒரு உதாரணங்கொண்டு விளக்குவோம்.

பாதையில் ஒரு பணப்பை இருப்பதை வழிப்போக்கன் ஒருவன் பார்க்கிறான். பணப்பையின் தோற்றம் வழிப்போக்கன் மூளையில் உடனே சில உணர்ச்சிகளை உண்டாக்குகிறது. "பெரிய பை நிறையப் பணம் எல்லாம் ரூபாய்கள் தானோ பணக்காரனாகி விடலாம் கஷ்டம் ஒழிந்தது" என்று இம்மாதிரி உணர்ச்சிகள் உதித்து வழிப்போக்கன் மனத்தை உணர்ச்சி வசமாக்குகின்றன. இயற்கையாயெழுந்த இவ்வுணர்ச்சிகளைப் பின்பற்றி உடனே ஓடிப் பாதையில் உள்ள பையை எடுத்துக் கொள்வது இயற்கையைப் பின்பற்றுவதாகும். ஆனால் இயற்கையுணர்ச்சியைப் பின்பற்ற வொட்டாமல் தடுக்கிறது மூளையின் மற்றொரு சக்தியாகிய பகுத்தறிவு. "பை நம்முடையதல்ல, சொந்தக்காரன் பக்கத்தில் இருக்கிறானா? ரோட்டில் யாராவது வருகிறார்களா? ஓரத்தில் உள்ள மரத்தருகில் ஒருவன் உட்காந்திருக்கிறானே பையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான் அவன்தான் பையைப் பாதையில் வைத்துவிட்டு மலஜலங் கழிக்கிறான் பைக்குடையவன் அவனாகத்தான் இருக்கலாம் அவசரப்பட்டு என்ன பைத்தியக்காரத்தனம் செய்ய நினைத்தோம்" என்ற எண்ணங்களைப் பகுத்தறிவு கிளப்புகிறது. முதலில் எழுந்த உணர்ச்சிகள் பகுத்தறிவின் நிதான புத்தியால் அடக்கப்பட்டு அவன் நடத்தையை நிர்ணயித்தது. முதலில் எழுந்த உணர்ச்சிகளைப் பின் பற்றி நடந்திருக்கலாமா? அல்லது அறிவைக்கொண்டு நிதானித்து நடந்தது சரியா? நிதானித்து அறிவைக் கொண்டு நடப்பது இயற்கை வழிக்கு மாறானதானாலும், உலகம் ஒப்புக் கொள்ளக் கூடியதல்லவா? இயற்கையுணர்ச்சிகளைப் பின்பற்றி நடப்பது எப்போதும் நியாயமானதாக இருக்காது. பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து இயற்கையுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நடப்பதையே உலகம் எப்போதும் சிலாகிக்கிறது.

## செயற்கையின் பெருமை

இயற்கைக்கு மாறாக, இயற்கையின் போக்கைக் கட்டுப்படுத்தி, மனிதனுடைய சௌகரியத்தையும் நன்மையையும் கோரி மனிதன் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் புகழத்தக்கவைகளாக இருக்கின்றனவேயன்றி யாராலும் இழிவு படுத்தப் படுவதில்லை. பெரிய ஆறுகள் இயற்கையில் பிரித்த இரண்டு கரைகளைச் சேர்க்கும் பாலத்தைக் கட்டுவது இயற்கைக்கு விரோதமாயினும் சிறப்புக்குரியதாகும். நிலத்தின் கீழ் உள்ள நீர் ஊற்றுக்களைக் கிணறுகள் மூலம் மனிதன் பயன்படுத்திக் கொள்வதை யார் கூடாதென்று சொல்ல முடியும்? ஆழத்தில் இயற்கை மறைத்து வைத்துள்ள உலோக வகைகளையும், இரத்தினங்களையும் தோண்டி யெடுப்பது புகழ்ச்சிக்குரியதல்லவா? சிவ சமுத்திரம், பாய்கரை நீர் வீழ்ச்சிகளைத் தூரத்திலிருந்து அவற்றின் இயற்கைத் தோற்றத்தைக் கண்டு, ஆகாச கங்கை யென்றும், ஆஸ்ரம வாசத்திற்குத் தகுதியான இடமென்றும், வர்ணித்த கவியும், ரிஷியும் அந் நீர்வீழ்ச்சிகள் ஒளித்து வீணாக்கி வந்த பெருஞ்சக்தியைக் கட்டுப்படுத்தி மனிதன் இட்ட வேலையைச் செய்யும் பணிப் பெண்ணாக மாற்றிக் கொடுத்த இன்ஜினீயரை விட எப்படி மேலானவர் ஆவார்கள்? இராஜபுதனப் பாலைவனத்தில் பளிங்குப் பாறையாக இருந்த இயற்கைப் பொருள் வெட்டப்பட்டு நாடுகடத்தப் பட்டு பல்லாயிரம் கைகளால் அடுக்க ஒரு தாஜ்மஹாலாக மாறிக் காட்சியளித்த போது அவ்வியற்கைப் பொருளின் பெருமை செயற்கை நிலையில் குறைந்தா விட்டது? ஆகையால்

தானாக, மனித சம்பந்தமில்லாமல், இயங்குகின்ற நிலைமையில், இயற்கை யென்பது மனிதனால் பின்பற்றுவதற்கு தகாதது, யோக்கியதையற்றது. மனிதனால் அடக்கப்பட்டு மாற்றிக் கொள்ளப் படவே தகுதியுள்ளது என்று இது வரை கூறியவற்றால் ஏற்படுகிறது. முதலில் எடுத்துக் கொண்ட விரிந்த அர்த்தத்தில் இயற்கையைப் பின் பற்றுவது அர்த்தமற்றது என்பதை மேலே விளக்கிக் காட்டினோம். மனிதன் இயற்கைப் பொருள்களையே யன்றித் தன்னுடைய இயற்கை இச்சைகளையும் உணர்ச்சிகளையும் கூடப் பின் பற்றக்கூடாது, அவற்றைத் தன் அறிவைக் கொண்டு அடக்க வேண்டு மென்றும், அறிவு கற்பிக்கும் நெறியே, ஞான நெறியே பின் பற்றத் தகுதி வாய்ந்தது என்றும் கண்டோம்.

இனி, இயற்கை வழியிலிருந்தும் அதிகம் மாறுபடாத கிராம வாழ்க்கைக்குப் போய் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்வது நலம் தரும் என்று சொல்வதைக் கவனிப்போம்.

## மனிதன் இயற்கை

உடம்பெல்லாம் வாயாகவும், வயிறெல்லாம் பல்லாகவும் அமைந்து, உண்பதும் உறங்குவதும் தவிர்த்து வேறு தொழிலை யறியாத ஓரறிவு, ஈரறிவுப் பிராணிகள் கூடத் தனித்து வாழ்வதில்லை. தன் இனத்துடன் சேர்ந்து கும்பலாகவே வாழ்கின்றன. மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவுகளை யுடைய மிருகங்கள், பறவைகள் முதலான பிராணிகளும் தனித்து வாழ்வதில்லை; கூட்ட வாழ்க்கையையே விரும்பி நடத்து கின்றன. மனிதரிலும், தலை சிறுத்து, உடல் பெருத்துப் புலன் உணர்ச்சியன்றிப் போத உணர்வில்லாத அஞ்ஞானச் செல்வங்கள் கூடத் தனித்து வாழப் பிரியப்படுவதில்லை. அறிவுள்ள மனிதனோ, என்றும் தன் இனத்தின் கூட்டுறவையும் சங்க வாழ்க்கையையுமே விரும்புகிறான்.

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற அபிப்பிராயத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அன்பின் வழியது உயிர் நிலை யாகையால், மனிதன் எப்பொழுதும் பிறர்க்கு அன்பு காட்டவும், பிறர் அன்பைப் பெறவும் ஆசைப்படுகிறான். மரணத்தின் பயங்கரமெல்லாம், இனிமேல் பிறர் அன்புக்குப் பாத்திரமாகி பிறர் அன்பைப் பெறவும், பிறரிடம் அன்பைச் செலுத்தவும் வசதி யில்லாமற் போகிறதே என்கிற காரணத்தாலேயே, ஏற்படுவதாகச் சொல்லலாம். பிற உயிர்களின் சம்பந்தத்திலிருந்து முற்றிலும் நீங்கி, ஏகாங்கியாக இருக்க வேண்டுமென்ற பயத்தை நினைத்தே உடலை விட்டு நீங்கும் உயிர், மோக்ஷ உலகை விரும்பாது நில உலகிலேயே மீண்டும் இருக்க

ஆசைப்படுகிறது. இறந்தவர்களுடைய "ஆவி" மறுபடியும் இவ்வுலக வாழ்வை விரும்பித் தாங்கள் முன் வாழ்ந்த இடங்களைச் சுற்றிக் கொண்டும், பிற உயிர்களைப் பற்றிக் கொண்டும் "பேய் பிசாசு"களாகித் தங்களுடைய ஆசைகளைத் தீர்த்துக் கொள்கின்றன என்ற கொள்கையும், மனிதனுக்கு இயல்பாகவுள்ள சங்க வாழ்க்கை விருப்பத்தைக் காட்டுகிறது. தாங்கள் ஏற்படுத்தியுள்ள தண்டனைகளில் எல்லாம் தனியறையில் சிறை வைப்பது மிகவும் கொடியதென்று அரசாங்கங்கள் நினைப்பதிலும் உண்மையில்லாமலில்லை. இவற்றிலிருந்து மனிதன் எப்போதும் கூட்டமாக வாழவே விரும்புகிறான் என்கிற உண்மை விளங்குகிறதல்லவா?

**சமூக வாழ்வின் ஆரம்பம்**

பிராணிகள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டியவை (1) காற்று (2) தண்ணீர் (3) சாப்பாடு. இவற்றுள் காற்றில்லாமல் சில நிமிஷங்கள் கூட வாழ முடியாது. தண்ணீரில்லாமல் சில நாட்களுக்கு மேல் உயிரோடிருக்க முடியாது. இவ்விரண்டின் இன்றியமையாத் தன்மைக்குத் தக்கபடி, இவ்விரண்டு பொருள்களும் (காற்றும் நீரும்) எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய விதத்தில், யாவர்க்கும் பொது உடமையாய், எந்தப் பலவானாலும் தன்னுடைய தனி உடமையாக்கிக் கொள்ள முடியாத வகையில், உலகமெங்கும் இயற்கையாய் அமைந்துள்ளன. மூன்றாவதான, "உணவு" முதல் இரண்டைப்போலப் பொது உடமையாயில்லாமல், மண்ணாசை கொண்ட மன்னராலும், பொன்னாசை கொண்ட மக்களாலும், ஆதியிலிருந்தே தனியுடமையாக்கிக்கொள்ளப் பட்டிருக்கிறது. உணவையும் பொது உடமையாக்கி எல்லார்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டு மென்பது, அன்பின் வழிவந்த அறிவாளர் ஒவ்வொருவரும் ஆதி காலந் தொட்டுக் கொண்டுள்ள ஆசை கண்டு வந்த கனா. "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்" என்றும் "உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும் சேராதியல்வது நாடு" என்றும் வள்ளுவர் கூறிப் போந்தார். "தனி ஒருவனுக்குணவிலையெனில் ஜகத்தினை அழிப்போம்" என்றார் பாரதி. கனவை நனவாக்கி, உணவையும் பொதுவுடமையாக்கிப் பசியையொழித்து, மக்களுக்குள் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் பகையையும் ஒழித்து ருஷ்யாவை, நாடாகச் செய்தார் லெனின்.

**நாடோடி வாழ்க்கை**

ஓரிடத்திலிருந்து உழுது பயிர்செய்து தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உண்டாக்கிக் கொள்ளத் தெரியாத காலத்தில் மனிதன் எதைத்தின்று எப்படி வாழ்ந்தான்? காடுகள் இருந்த இடங்களில் காய்கனி களைத் தின்று மரப் பொந்துகளிலும், மலைக்குகைகளிலும் வாழ்ந்து வந்தான்.

காய்கனி கிடையாத போது, காட்டில் உள்ள மிருகங்களையும் பக்ஷிகளையும் வேட்டையாடிப் பிடித்துத் தின்றிருந்தான். இவைகளுக்காகக் காடு காடாக வனம் வனமாக அலைந்து திரிந்தான். நீர் நிலைகளை யடுத்துத் தங்கி வந்தான். இவை யொன்றுங் கிடைக்காத இடங்களில் நரமாமிச பட்சணியாகவும் இருந்தான்.

மிருகங்களைப் பிடித்துக் கொன்று தின்றவன், நாளடைவில் அம்மிருகங்களைப் பழக்கி வளர்த்து அவற்றைக் கொல்லாமல், அவற்றின் பொருள்களிலிருந்து உணவையும், உடையையும் பெற்றுக் கொள்ளத் தெரிந்தான். அக்காலத்தில் அவனுக்கு உணவையும், உடையையும் அளித்த மிருகங்களை வளர்க்க வேண்டி, மேய்ச்சல் காடுகளைத் தேடியலைந்து ஓரிடத்திலும் நிலைத்து வாழாமல் நாடோடி வாழ்க்கை நடத்தினான்.

**கிராமங்களின் தோற்றம்**

பிறகு, உழுது பயிர்செய்யத் தெரிந்து கொண்டான். அக்காலத்தில் தான், மனிதன் ஒரு இடத்தில் நிலையாகத் தங்கி வாழ ஆரம்பித்தான். சாகுபடிக்குத் தகுதியான நிலவளமும், குடிப்பதற்கு தண்ணீர் எப்போதும் உள்ளதுமான இடத்தையே தான் தங்கி வசிப்பதற்கு ஏற்றதெனக் கண்டு, இவ்விரண்டு வசதிகளும் பொருந்திய இடங்களில் தங்கினான். மழைத் தண்ணீர் பள்ளம் படுகைகளில் தேங்கி நின்ற நீர்நிலைகளும், மேற்பரப்பில் ஓடும் ஆறுகளுமே, அந்தக்கால மனிதனுக் கிருந்த, தெரிந்த ஜலவசதிகள், நிலத்தின் கீழ் உள்ள ஊற்றுக்களை கிணறு தோண்டி உபயோகிக்க அவனுக்குத் தெரியாது. மழை நீரையும் ஆற்று வெள்ளத்தையும் குளங்களில் தேக்கி, மழையற்ற காலங்களில் உபயோகித்துக் கொள்ளவும் தெரியாது. வருஷ முழுவதும் வற்றாது ஓடும் ஆறுகளையே அவன் நம்பியிருந்தான். ஆகையால் தான் ஆறுகளை யடுத்தே மனிதன் குடியேறிப் பெருகினான். இப்போதுள்ள ஊர்களிலும், நகரங்களிலும் மிகப் பழமையானவைகள் எல்லாம் பெரிய ஆறுகளை அடுத்துள்ளவைகளாகும். காசி, பிரயாகை, பாடலிபுரம், காவிரிப் பூம்பட்டினம், உறையூர், மதுரை, கருவூர், நெல்லை, பேரூர் முதலிய பழைய ஊர்கள் எல்லாம் நதிக்கரை நகரங்களேயாகும். ஈரோடை, வெள்ளோடை, சிற்றோடை, பவானி, கீழ்வானி, மேல்வானி, ஆற் ர், புனலூர், ஜலத்தூர், மதுக்கரை, மீன்கரை, ஓடத்துறை, நெல்லித்துறை முதலான ஊர்ப்பெயர்கள் அவ்வூர்கள் ஆதியில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த ஜலவசதிகளைக் குறிக்கின்றனவல்லவா? இது போலவே, இப்போது ஊர்களாயிருந்த இடம் முன் பெருங்காடுகளாயிருந்து, மனிதன் அக்காடுகளை வெட்டி நாடாக்கின உண்மையையும், நமது நாட்டில் உள்ள பல ஊர்ப் பெயர்கள் தெரிவிக்கின்றன.

தென்னம்பாளையம், பனங்காட்டூர், புளியம்பட்டி, மாமரத்துப்பட்டி, விளாமரத்துப் பட்டி, வேலாம் பூண்டி, ஈஞ்சம் பள்ளி, எட்டிக் குட்டை, புங்கம்பாளையம், வேப்பம்பாளையம், முருங்கைத் தொழுவு, வாகைத் தொழுவு, நெரிஞ்சிப் பேட்டை, வாழைத் தோட்டம், முதலிய ஊர்ப்பெயர்கள் காடுவெட்டி நாடாக்கிய காலத்தில் அவ்விடங்களில் சிறப்பாய் இருந்த மரஞ்செடி தாவரங்களைக் குறிப்பிடுகின்றன. அது போலவே, புலியூர், சிங்கம் பேட்டை, நரிப்பட்டி, பன்றிமடை, கரடிமடை, மானுப்பட்டி முதலிய ஊர்ப்பெயர்கள் அக்காடுகளில் யதேச்சையாயிருந்த மிருகங்களை மனிதன் அழித்து ஊர் கட்டியதைக் குறிப்பனவாகும். நதிக்கரைகளில் ஊர்கள் உண்டாக்கிப் பெருகிய மனிதன், ஜனப்பெருக்கால், நதிகளை விட்டு மேட்டுப் பாங்கான நிலங்களிலும் குடியேறவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, ஆறுகளைத் தவிர்த்து வேறு ஜலவசதியைக் காணமுயன்றான். நிலத்தைத் தோண்டிக் கீழ் உள்ள ஊற்றுக்களிலிருந்து நீர் எடுத்துக் கொள்ளத் தெரிந்தான். மேட்டுபாவி, பூலாங்கிணறு, வெள்ளக் கிணறு, கரடி பாவி, பருபாவி, கிணற்றுக்கடவு, பண்ணைக்கிணறு, அல்லிக்கேணி, கூவலூர் முதலிய ஊர்ப்பெயர்கள், மனிதன் கிணறு தோண்டத் தெரிந்து கொண்ட பின், ஆற்றங் கரைகளைவிட்டு, மேட்டுப்

பிரதேசங்களில் குடியேறிய காலத்தில் தோன்றியவை என்று தெரிவிக்கின்றன. இவ்வாறு தோன்றிய குடியிருப்புகள் அங்குள்ள நீர்வளம் நிலவளத்திற்கேற்ப வளர்ந்து வந்தன. சிறு சிறு கூட்டங்களாய்ப் பரவி நாடெங்கும் குடியிருப்புகளை (கிராமங்களை) உண்டாக்கி வாழ்ந்த மக்களை, ஆட்பலமும், அறிவும் கொண்ட ஒருவன் அடக்கித் தலைவனாகித் தன் அதிகாரத்தையும், ஆட்சியையும் நிலைக்கச் செய்ய அங்கங்கே கோட்டைகளைக் கட்டினான். இந்தக் கோட்டைகளையடுத்தும் ஊர்கள் தோன்றின. அரசனையண்டி அவனைக் காத்து, மற்றவர்களை அரசன் ஆணைக்கடங்கச் செய்யவும், மதத்தின் பெயரால் மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவும் அங்கங்கே கோயில்கள் தோன்றின. இக்கோயில்களையடுத்தும் ஊர்கள் ஏற்பட்டன.

**கிராம சமூகம் பழைய நிலை**

நாள் முழுதும் ஒரு முயலையோ, மானையோ பின் பற்றிக் காடு முழுதும் ஓடித்திரிந்து அதைக் கொன்று கொண்டு வந்து, காய்ந்த சுள்ளிகளைச் சேர்த்துச் சக்கிமுக்கி தட்டித் தீயுண்டாக்கி இறைச்சியை வாட்டித் தானும் தன் மனைவி மக்களும் தின்று மரத்தடியிலும், மலைக்குகையிலும் வாழ்ந்து வந்த மனிதன், விவசாயம் செய்யத் தெரிந்து கொண்ட பின் ஓரிடத்தில் தங்கி, விளைநிலத்திற்கருகில் வளைவு கட்டிக் கொண்டு வாழத் தொடங்கியபோது, இவனுக்கருகில் இவன் இனத்தார்களும் இவனைப்போலவே வளைவுகள் கட்டிக்கொண்டு வாழலாயினர்.

விவசாய வாழ்க்கையில் ஈடுபட்டு ஓரிடத்தில் நிலைத்து வாழ வாரம்பித்த போது, மனிதன் வாழ்க்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஒரு குடியிருப்புக்குச் சுற்றிலுமுள்ள விளை நிலங்களை அக்குடியிருப்பில் தங்கிய பல குடும்பங்களும் தங்களுக்குள் பங்கிட்டு அவரவர் நிலத்திற்கு வரையறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் வந்தது. ஆகையால் நிலம் தனி உடமையாக்கப் பட்டது. தனியுடமைக் கொள்கை ஏற்பட்ட பின் நாளடைவில் சிலர் அதிக நிலங்கள் பெறவும், சிலர் நிலம் இல்லாது போகவும் நேர்ந்ததில் ஆச்சரியம் இல்லை. பயிர்த்தொழில் செய்ய வேண்டியவன் வேறு தொழில்களைச் செய்ய போதிய சாவகாசமும் திறமையும், பயிற்சியும் பெற முடியாமற் போயிற்று. நிலம் இல்லாதவர்கள் வேலையற்றுப் போகவே, குடியானவனுக்கு வேண்டிய இதர பொருள்களையும் சௌகரியங்களையும் செய்து கொடுத்துக் குடியானவனிடமிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு கிராமத்தில் வசித்தவர்களில் பெரும்பாலானவர் பயிர்த் தொழிலைச் செய்தனர்.

இவர்களுக்கு வேண்டிய உடையைத் தயாரித்துக் கொடுக்கச் சேடன், சேணியன், கைக்கோளனும், உழவுக் கருவிகளைச் செய்து கொடுக்கத் தச்சன், கொல்லனும், பாத்திரம் செய்து கொடுக்கக் குயவன் கன்னானும், வீடு கட்டவும், கிணறு வெட்டவும் ஒட்டன், கொத்தனும், இலை தயாரித்துக் கொடுக்கவும், மாலை கட்டிக் கொடுக்கவும் ஆண்டி, பண்டாரமும், துணி வெளுத்துக் கொடுக்க வண்ணானும், க்ஷவரம் செய்து அழகு படுத்த நாவிதனும், அணிகலன் செய்து கொடுக்கத் தட்டானும், பண்ணை வேலைகளில் கடின வேலைகளைச் செய்யப் பள்ளர், சக்கிலியரும் என்று அவசியமான தொழில்களைச் செய்யச் சிலர் ஏற்படுத்தப் பட்டனர். கிராம வாழ்க்கை பின்னும் சிறிது நாகரிகப்பட்ட போது, குடியானவன் குடித்துக் களிக்கக் கள்ளும், மதுவும் தயாரித்துக் கொடுக்கச் சிலரும், கோவில்களும், பூசாரிகளும், தேவடியார்கள், சின்னமேளம், பெரிய மேளங்களும் தோன்றின. மேற்கூறிய அனைவரும் குடியானவன் தயவை எதிர்பார்த்து அவன் விளைவிப்பதில் பங்கு பெற்று வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு சமூக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவற்றையும் தாங்களே தயாரித்துக் கொள்ளக் கூடிய வகையில் ஜனங்களும், தொழில்களும் ஏற்பட்டு, ஒவ்வொரு கிராமமும் ஒரு தனிப்பட்ட சமூகமாய் பிறர் தயவை எதிர்பாராமல் அக்காலத்திய கிராம வாழ்க்கை நடத்தப்பட்டு வந்தது. இன்றைய நிலையில் மீண்டும் இவ்வித கிராம வாழ்க்கைக்குத் திரும்புவது சாத்தியமான காரியமா? இவ்வித கிராமங்கள் பலவற்றால் ஆகிய ஒரு நாட்டை ஒருவன் கைப்பற்றி ஆட்சி செய்யும்போது, அவன் இந்தக் கிராம வாழ்க்கையின் அமைப்பைச் சீர்குலைக்காமல், மேலும் பலமாக்கி வைத்துத் தன் ஆட்சியை நிலை பெறுத்துவதற்குச் சாதகம் செய்து கொண்டான். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவனை ஏற்படுத்தி அவன் மூலம் தனக்குத் தேவையான கப்பத்தை வாங்கிக் கொண்டு தன் கட்டளைப்படி நடந்து தனக்குதவிபுரிபவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் வரி நீக்கப்பட்ட விளைநிலங்களை ஊழிய இனாமென்றும், தேவதாயம், பிரம்மதாயம் என்றும் சாமிக்கும், பூசாரிக்கும், பிராமணருக்கும் கொடுத்து இவர்களைத் தன் ஆட்சிக்கு அரண்களாக்கிக் கொண்டான்.

கிராம அமைப்பு முடி ஆட்சிக்கும், கொடுங் கோன்மைக்கும் சாதகமான அமைப்பு என்பதைக் கண்டதினால், பழைய இந்து அரசர்கள் காலத்தில் இருந்த இவ்வமைப்புப் பின்னால் முகமதிய அரசர்களாலும், அதற்குப்பின் வந்த கிருஸ்தவ (இங்கிலீஸ்) அரசாங்கத்தாலும், அப்படியே காப்பாற்றப்பட்டு வருகிறது. மானியங்களும், இனாம்களும், பிரம்மதாயத்திற்கும் தேவதாயத்திற்கும் இன்றும் இருந்து வருகின்றன. சிறு சிறு கிராமங்களில் தனிப்பட்ட சமூகங்களாய் வாழ்ந்து வந்த மக்கள், இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று கவலை கொள்ளாமல் இருந்ததில் ஆச்சரியமில்லை. கிராமவாசி களுக்குத் தங்கள் கிராம எல்லைக்கு அப்பால் உள்ள எதைப்பற்றியும் அக்கரை இல்லை. விரிந்த மனப்பான்மையும், நாட்டுப் பற்றும், பொது உணர்ச்சியும் இவர்களுக்குள் ஏற்பட வசதிகள் இருக்கவில்லை. சண்டமாருதத்தால் கலக்கப்பட்டுக் கொந்தளிக்கும் கடலின் கரையோரங்களில், அலைகள் ஒதுக்கும் குப்பை கூளங்களும், பாசியும், நுரையும் படிந்து, சலனமற்றிருக்கும் உப்பங்கழிகளைப்போல, உலகில் நடக்கும் எவ்விதப் புரட்சிகளுக்கும் எட்டாது உணர்வற்று அசைவற்று இருந்து வந்தன நம் நாட்டுக் கிராமங்கள்.

**நிலைக்கச் செய்ய முடியுமா?**

மிகப் பழமையானதும், எளிதில் உடைக்க முடியாததும், தொடர்ச்சியாக அரசாங்கங்களின் பாதுகாப்புப் பெற்று வந்ததுமான இந்தக்கிராம அமைப்பும், கிராம வாழ்க்கை முறையும், நாகரீக வளர்ச்சியால் நாளடைவில் சீர்குலைந்து சின்னா பின்னப்பட்டு இன்று அழிந்து ஒழிந்து போகும் நிலையில் இருக்கிறது. பலங்குன்றி, ஜீவநாடிகள் எல்லாம் அடங்கிக் குற்றுயிராயிருக்கும் இவ்வமைப்பையும்

முறையையும், பலங் கொடுத்து உயிர்ப்பிக்கப் பல வைத்தியர்கள் முயற்சிக்கின்றனர். இந்த வைத்திய போர்டின் தலைவராக விளங்குகின்றார் தோழர் காந்தியார். தன்னுடைய உடலுக்கு தானே வைத்தியம் செய்து பல பல விதமான உணவுகளை உண்டு பட்டினி கிடந்தும் பரீக்ஷித்துப் பார்ப்பது போல், கிராமவாழ்க்கையைப் புனர் நிர்மாணம் செய்வதற்கும் பல மருந்துகள் பரீக்ஷிக்கப் படுகின்றன. "நூற்போர் சங்கம்" என்ற ஊசி வழியாகக் "கதர்" என்னும் மருந்து சென்ற பத்து வருஷங்களாக இஞ்செக்ஷன் செய்யப்பட்டு வருகிறது. கிராமக் கைத்தொழில் அபிவிர்த்தி சங்கம் என்கிற புது ஊசி ஒன்று இப்போது தயாரிக்கப்பட்டு, கருப்பட்டியும், விளக்கெண்ணெயும், இஞ்செக்ஷன் செய்யப்பட வேண்டும் என்று இப்போது தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்த வைத்தியம் நோயைத் தீர்க்குமா?

### கிராம வாழ்க்கையின் தற்கால நிலை

கிராமங்களைப் பிடித்திருக்கும் நோய் என்ன? எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம். கூலி கிடைக்காத குறை. வேலையும், கூலியும் கிடைக்காததால், கிராமங்களில் உள்ளவர் கிராமங்களை விட்டுப் பட்டணங்களுக்கும் பிற நாடுகளுக்கும் போய் வாழ வேண்டிய நிர்ப்பந்தம். இதனால் கிராமங்கள் நாளுக்கு நாள் மெலிந்து, சிறப்பிழந்து வருகின்றன. ஒவ்வொரு சென்ஸஸ் கணக்குப்படியும், கிராமாந்தரங்களில் வாழும் ஜனங்களின் தொகை குறைந்து கொண்டும், பட்டணங்களின் ஜனத்தொகை வளர்ந்து கொண்டும் வருகின்றன. கிராமங்களில் வசித்து வந்த உயர் ஜாதிக்காரர் என்பவர்களில் அநேகமாய் எல்லோரும் கிராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறி விட்டனர். எங்கு பார்த்தாலும், கிராமங்களில் உள்ள அக்கிரகாரங்கள் எல்லாம் பாழடைந்து கிடக்கின்றன. பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் "எக்ஸ்டென்ஷன்ஸ்" என்கிற அக்கிரகாரப் புதூர்கள் ஏற்பட்டு வருகின்றன. கீழ் ஜாதிகள் என்போரிலும், விவசாயிகளைத் தவிர்த்த மற்றையோரில் பெரும்பாலோர், பெரிய ஆலைகள் உள்ள பட்டணங்களுக்குப் போய்க் கொண்டு வருகின்றனர்.

### பட்டணம் போவதேன்?

விவசாயத் தொழிலில் ஈடுபட்ட குடியானவர்களைத் தவிர, மற்ற ஜாதியார்கள் எல்லோரும், கிராமங்களை விட்டு பட்டணங்களுக்குப் போவதேன்? இன்றைய நிலையில், கிராமங்களில், விவசாயி ஒருவனுக்கே, தொழிலும், ஜீவனம் செய்ய மார்க்கமும் இருக்கிறது. மற்ற தொழிலாளிகளுக்கும் சுக ஜீவனக்காரருக்கும் கிராமங்களில் பிழைக்கும் வழி இல்லை. வண்ணான், நாவிதன், புரோகிதன், பூசாரி, ஆண்டி, ஒட்டன், பள்ளன், சக்கிலியன் முதலானவர்களுக்கு ஓரளவு தொழில் இருக்கிறதாகச் சொன்னாலும், தச்சன், கொல்லன், தட்டான், கன்னான், குயவன், வாணியன், சேணியன், சேடன், கைக்கோளன் முதலான பலருக்குத் தங்கள் குலத் தொழிலைக் கிராமங்களில் நடத்தி அதன் மூலம் ஜீவனம் செய்ய இன்றைய நிலை இடம் கொடுப்பதில்லை. குடியானவனுக்கு இவர்கள் உதவி தேவை இல்லை. ஆகையால் அவன் தன் விளைவில் இவர்களுக்குப் பங்கு கொடுப்பதை நிறுத்தி விட்டான்.

### கிராமக் கைத்தொழில் அழிவின் காரணங்கள்

சமீப காலம் வரை, குடியானவனுக்கு வேண்டிய சகல பொருள்களும் கிராமங்களில் உள்ள பரம்பரைத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டு வந்தன. இன்று இப்பொருள்கள் எல்லாம் அனேகமாய் இயந்திர சாலைகளில் தயாரிக்கப்பட்டு வியாபாரிகளால் கடைகளிலும் சந்தைகளிலும் விற்கப்படுகின்றன. உழவுத் தொழிலுக்கு இன்றியமையாது வேண்டிய கலப்பை, ஏர்ச்சட்டம், பரம்புச் சட்டம், நுகம், தடி, உழுகோல் முதலிய மரச்சாமான்களைப் பெரும்பாலும் இன்றைய குடியானவன் தன் ஊரிலுள்ள தச்சனிடம் போய் வாங்கிக் கொள்வதை நிறுத்திவிட்டான். அடுத்துள்ள பட்டணத்திற்குப் போய் மரக்கடையில் வாங்கிக்கொள்கிறான். கொழு, கொத்து, அரிவாள், மண்வெட்டி முதலிய இரும்புச் சாமான்களை பட்டணக்கரையிலுள்ள இரும்புக் கடையில் வாங்குகிறானேயன்றி உள்ளூரில் உள்ள கொல்லனிடம் பெற முடிவதில்லை. இயந்திரசாலைகளில் செய்யப்படும் இரும்புச் சாமான்கள் அதிக நயமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. மரச் சாமான்களும் இயந்திரசாலைகளில் அறுவை செய்து, ரயில் மார்க்கமாக இறக்குமதி செய்யப்பட்டு, மரக்கடைகளில் மொத்தமாகத் தயார் செய்யப்படுவதால் விலை குறைவாகவும், பொருள் நயமாகவும் கிடைக்கின்றன. உழவுத் தொழில் கருவிகளின் நிலைமையே இப்படியானால், மற்ற பொருள்களைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை.

மில்துணிகள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைப்பதால், சேடன், சேணியன், கைக்கோளன் முதலியவர்களின் தொழில்கள் முடங்கிவிட்டன. ஷராப் கடைகளில், தேவையான பொன், வெள்ளி நகைகள் நாகரிகமாகத் தயாரிக்கப்பட்டு, எப்போதும் தயாரிலிருப்பதால், தட்டான் கிராமத்தை விட்டுப் பட்டணங்களில் உள்ள ஷராப்புக் கடைக்காரனிடம் கூலிக்கு வரவேண்டியதாயிற்று. பீங்கானும் அலுமினியப் பாத்திரமும், இயந்திரங்கள் மூலம் ஏராளமாய் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலைக்குக் கிடைப்பதால், குயவன், கன்னான் முதலியவர்களின் தனிப்பட்ட தொழிலுக்குத் தேவையில்லாது போயிற்று. கூரைகளுக்குப் போடும் ஓடுகள் கூட, மலையாளத்தில் இயந்திரங்கள் மூலம் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு நாடெங்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறே எந்தப் பொருளை எடுத்துக் கொண்ட போதிலும், தனிப்பட்ட ஒரு கைத்தொழில்காரன், முன்போல் அதைச் செய்து இயந்திர உற்பத்திப் பொருளுடன் போட்டியாக விற்க முடியாத நிலையில், தன் தொழிலை விட வேண்டியவனாகி விட்டான். கிராமக் கைத் தொழில்கள் அழிந்ததற்கு முக்கியமான காரணம், இயந்திரப் பெருக்கமும் இயந்திர உற்பத்தியும் என்று சொல்லலாம். இயந்தரங்கள் மூலம், பொருள்கள் பெரு வாரியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. பெருந்தொகையாகத் தயாரிப்பதில் விலை குறைகிறது. விலை குறைவாயுள்ள இயந்தர உற்பத்திப் பொருளை, வாங்குபவன், ஆதரிக்கிறான். இயந்தரமும் கிராமக் கைத்தொழிலாளியும் போட்டிபோட்டதில், ரயிலுடன் போட்டி போட்டு ஓடிச்செத்த குதிரையைப் போல, கைத்தொழில்காரன் தோற்றுத் தன் தொழிலை இழந்தான்.

### இரண்டாவது காரணம்

போக்குவரவுக்குரிய வசதிகள் முன்காலத்திற்கு இப்போது மிகமிக அதிகரித்து விட்டதும் கிராமக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும். முன் காலத்தில் ஒரு கிராமத்துப் பொருள் அடுத்த கிராமத்திற்குப் போவது கூட மிகுந்த கஷ்டமானதாயிருந்தது. மிகவும் விலை பெற்ற, அல்லது, இன்றியமையாத பொருள்களை ஒரு நாட்டிலிருந்து வேறுநாட்டிற்குக் கொண்டு போகப்பட்டன.

இன்றைய தினம் சர்வ சாதாரணமாய்க் கிடைக்கும் உப்பு ஒருகாலத்தில், உள் நாட்டு ஜனங்களுக்கு (சமுத்திரக் கரையிலிருந்து அதி தூரத்தில் உள்ளவர்களுக்கு) கிடைத்தற்கரிய பொருளாயிருந்தது. போக்கு வரவு சாதனங்களின் குறைவும் கஷ்டமும், கிராமக் கைத்தொழிலாளியின் கரடு முரடான சாமான்களை அதிக விலைக்கு விற்கத் துணை செய்தன. தற்காலத்தில் போக்குவரத்துக்குள்ள மிகுந்த வசதிகள், இயந்திர உற்பத்திப் பொருள்களை மூலை முடக்குகளில் எல்லாம் பரப்பிக் கிராமக் கைத்தொழில்காரன் வாழ்க்கையைக் கெடுத்து விட்டது. அழுகிற குழந்தைக்கு விளையாட்டுச் சாமான் கொடுத்து சமாதானப்படுத்தும் அன்பு, தாய்க்கு அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. ஆனால் அதற்காக அன்று போல, தச்சனைத் தேடி, மரம் தேடிக்கொடுத்து, அவன் கேட்கிற கூலியும் கொடுத்து, ஒருவாரம் பத்துநாள் அவனிடம் நடந்து ஒரு மரப் பொம்மை வாங்கிக் கொடுக்கிற தாயார் இன்றில்லை. சந்தைக்குப் போகிறபோது, முக்கால் துட்டுக்கு ஒரு ஜப்பான் பொம்மை வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறாள். குழந்தையும் தச்சன் செய்த மரக்கட்டை பொம்மையை விடப் பகட்டான ஜப்பான் பொம்மையை அதிகப் பிரியமாக ஏற்றுக்கொள்கிறது.

### மூன்றாவது காரணம்

பண்டு தொட்டே, கிராமங்களில், கைத்தொழில் களுக்கும், தொழிலாளர்களுக்கும் இருந்து வந்த இழிவும், கிராமக் கைத்தொழில் அழிவிற்கு ஒரு காரணமாகும். உழுதுண்டு வாழ்பவனே வாழ்பவன், மற்ற எல்லோரும் தொழுது உண்டு பின்னால் திரிபவர் என்கிற நிலைமைதான் கிராமங்களில் இன்றும் இருக்கிறது. பட்டணங்களில் எவன் எந்தத் தொழிலைச் செய்தாலும் கேட்பவன் இல்லை. சக்கிலியொருவன் காப்பிக்கடை வைப்பதைத் தடுக்க முடியாது. தற்போதுள்ள சமூக நிலையில், அவனுக்கு அது லாபகரமாக இருக்காது என்கின்ற பயத்தினால் அவன் வைப்பதில்லையே தவிர, நேர்முகமான தடையில்லை. ஆனால் கிராமத்தில், ஜாதியாசாரமும், குல ஆசாரமும் ஒருவன் தனக்கிஷ்டமான தொழிலைச் செய்வதற்குத் தடையாயிருக்கின்றன. கைத் தொழில்காரருக்கெல்லாம் பொதுவாகச் சில அவமரியாதை களும், இழிவுகளும் இருந்து வருகின்றன.

சில ஜாதிகள் செருப்புப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது, குதிரையேறக் கூடாது, வண்டியேறக் கூடாது, வேஷ்டியை முழங்காலுக்குக் கீழே தொங்க விட்டுக் கட்டிக் கொள்ளக் கூடாது என்ற பல கொடுமைகள் இன்னும் அனேக கிராமங்களில் இருந்து வருகின்றன. இவ்வித நிர்ப்பந்தங்களுக்கடங்கித் தன் சுயமரியாதையை யிழந்து தொழில் செய்து கிராமங்களில் வாழ்வதை விடப் பட்டணங்களுக்குப் போவது மேல் என்று நினைத்து கிராமங்களை விட்டவர் பலர். பட்டணங்களில் தொழில் செய்வது லாபகரமும் ஆகும் என்று தெரிந்த பின் கிராமங்களில் இருக்க எந்தத் தொழிலாளியும் விரும்ப மாட்டான். ஈன ஜாதிகள் என்கிற இழிவைச் சுமந்து கொண்டு, ஈனத் தொழில் என்று ஏசப்படும் தொழிலைச் செய்து அரை வயிற்றுக்கும் போதாக் கஞ்சி குடித்துக் கிராமத்தில் வாழ்வதை விட, பட்டணம் வந்து, ஒரு சலவைச் சாலையையோ, "பார்பர் ஷாப்" அல்லது, "ஷேவிங் சலூன்" என்ற காரியாலயத்தையோ ஏற்படுத்திக் கொண்டு, சுயமரியாதையுடன் தொழில் செய்வது மேல் என்று கிராமத்து வண்ணானும், நாவிதனும் பட்டிணத்திற்கு வருவதை யார் ஆக்ஷேபிக்க முடியும்? எனவே, கிராமங்களில் இன்னும், பலம் பெற்றிருக்கிற ஜாதிக்கட்டுப்பாட்டின் கொடுமைகளும், இழிவுகளும், அனேக தொழிலாளிகளைக் கிராமங்களிலிருந்து துரத்தி விட்டன என்று சொல்வது சிறிதும் மிகையாகாது.

### அடிப்படையான காரணம்

கிராம அமைப்பின் அஸ்திபாரம் அசைந்து, கிராம வாழ்க்கை என்ற பழய கோபுரம் இடிந்து விழுவதற்கு நான்காவதாக ஒரு முக்கிய காரணம் உண்டு. அது என்னவென்றால், மேற்கத்திய (ஆங்கில) கல்வியும், அக்கல்வி போதிக்கப்படும் முறையும். சாத்தான் அரசாங்கத்தின் கொடுமைகளில் எல்லாம் மிகக் கொடுமையானது மேற்கத்திய கல்வி இங்கிலீஷ் படிப்பு, என்று காந்தியார் சொல்கிறார். ஆனால் இந்த நாட்டு மக்கள், சமதர்ம ஆட்சிக்கு லாயக்காவதற்கும், நாகரீகமடைந்த மற்ற நாடுகளைப் போல் உயரிய வாழ்க்கை நடத்துவதற்கும் வேண்டிய ஆசையைக் கிளப்பி, ஜனங்களின் கண்களைத் திறந்து, தங்கள் தரித்திர வாழ்க்கையில் அதிருப்தியை உண்டாக்கி, இன்ப வாழ்க்கையில் மோஹத்தைக் கொடுத்து அவ்வாழ்க்கையை விரைவில் அடையத்தக்க பயிற்சியையும் கொடுத்து வருவது, இங்லீஷ் படிப்பும், ஆண் பெண், ஜாதி, மத, வித்தியாசமின்றி அது போதிக்கப்படும் முறையுமே என்பது மறுக்க முடியாத உண்மை...

ஒரு பட்டிக் காட்டில் தாழ்ந்த குலமென்பதிற் பிறந்த ஒரு சாமிக்கண்ணு, உலகம் மதிக்கத்தக்க ஒரு பேரறிஞராய் விளங்குவதற்கு இடமளித்தது, சாத்தான் அரசாங்கத்தின் மேற்கத்திய கல்வி முறையல்லவா? பழய தர்மப்படி, படிப்பதற்கு உரிமையில்லாத "சூத்திர" குலங்களிற்பிறந்த ஒரு சுப்பராயனும் ஒரு செங்கோடனும் ஷண்முகமும், முதல் மந்திரியாகவும், ஜில்லா கலெக்டராகவும், திவானாகவும் வர முடிந்தது தற்போதைய கல்வி முறையால் அல்லவா? நமது அம்பத்காரும், சிவராஜும், சீனிவாசனும், இழி குலங்கள் என்று சொல்லப்படும் ஜாதிகளில் பிறந்தும், புகழ் பெற்றுக் கண்ணியமான கனவான்களாகவதற்குத் துணை நிற்பதெது? இவர்களைப் போன்ற அறிவாளிகள், பண்டைக்காலத்தில், ஒரு சம்பூகனாகவோ, சாத்தானாகவோ இருந்து அரச தண்டனைக்கும், சமூக நிந்தனைக்கும், ஆளாகி ஒழியவும், அல்லது ஒரு பிண்ணாக்கு சித்தனாகவோ, ஒரு பாம்பாட்டிச் சித்தனாகவோ, கல்லுளி சித்தனாகவோ மாறிச் சந்நியாசி வாழ்க்கையை மேற் கொள்ளவும் தானே முடிந்தது? ஆகையால், இந்நாட்டில் சமத்துவ உணர்ச்சி பரவுவதற்கும், ஜாதி பற்றிய தொழில் முறைகள் கைவிடப்பட்டு, அறிவு பற்றியத் தொழிலை மாற்றிக் கொண்டு உயர்வடைவதற்கும் சௌகரியம் உண்டானதன் அடிப்படைக் காரணம், மேற்கத்திய (இங்கிலீஷ்) படிப்பும் அப்படிப்பு வித்தியாசமின்றி எல்லார்க்கும் போதிக்கப்படுவதுமேயாகும்.

மேற்கூறிய காரணங்களால் கிராமக் கைத்தொழில்கள் சீர்குலைந்தன. கொஞ்ச நஞ்சம் உள்ள தொழிலாளிகளும் கிராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறி வருகின்றனர். கிராமங்களில் தொழிலாளர் நிலை இப்படியாக, உழவுத் தொழிலிலேயே ஈடுபட்டுள்ள குடியானவர்களைப் பற்றியும் விவசாயக் கூலிகளைப் பற்றியும் இனிக் கவனிப்போம்.

### கிராமக் குடியானவன் நிலைமை

கிராமங்களில் உள்ள உழு நிலங்களில் பெரும்பாகம் அவற்றைச் சாகுபடி செய்யும் குடியானவன் கையிலிருந்து பட்டணங்களில் உள்ள வக்கீல்களுக்கும், பெருஞ் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களுக்கும், சௌகார்களுக்கும், முதலாளிகளுக்கும் மாறிவிட்டன. மாறிக்கொண்டு வருகின்றன. சொந்த நிலம் உடைய குடியானவன் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சொற்ப நிலம் உடையவனுக்கு உழவுத்தொழிலில் தன் குடும்பத்திற்குப் போதிய வருவாய் கிடைக்காததால், கடன் வாங்கி விரைவில் தனக்குள்ள சிறிது நிலத்தையும் இழந்து வருகிறான். குத்தகை அல்லது குடிவாரத்திற்குச் சாகுபடி செய்பவர் அதிகரித்து வருகின்றனர்.

இவர்கள் தங்கள் உழைப்பின் முழுப் பிரயோஜனத்தையும் அடைவதில்லை. பெரும் பகுதியை பட்டணங்களில், உண்டுகளித்திருப்போர்க்கு உரிமையாக்க வேண்டியவனாயிருக்கிறான். பெரிய மிராஸ்தார்கள் என்கிற குடியானவர்கள், கிராம வாழ்க்கையின் குறுகிய உணர்ச்சிகளால், தங்களுக்குள் குரோதங் கொண்டு கட்சி கட்டிக்கொண்டு, அற்ப விஷயங்களுக்கெல்லாம் வியாச்சியங்கள் தொடர்ந்து தங்கள் ஆஸ்திகளை வக்கீல்களுக்கும் நியாயஸ்தலத் தேவதைகளுக்கும் கொட்டி ஆண்டிகளாகின்றனர். கட்சியில்லாத கிராமம் சாதாரணமாய் நமது நாட்டில் இல்லை யென்றே சொல்லலாம். தாராள நோக்கமும், விரிந்த மனப்பான்மையும், நமது பட்டணங்களில் உள்ள அளவில் ஒரு சிறிது கூடக் கிராமங்களில் இல்லை. குறுகிய நோக்கமும், அவசரப் புத்தியும், மூர்க்கத் தன்மையும், கிராம வாழ்க்கையின் இன்றியமையாச் சிறப்புக்களாயிருக்கின்றன. கிராமங்களில் இத்தன்மைகளோடு விளங்கும் குடியானவர்கள் இல்லாவிட்டால், பட்டணங்களில் உள்ள வக்கீல்களுக்கும், நியாயஸ்தலங்களில் உள்ள தேவதைகளுக்கும் அவசியம் இருக்காது என்று சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. நிலங்களையுடைய குடியானவர்கள் தங்கள் அவிவேகத்தினாலும், பிடிவாதத்தினாலும், காலத்திற்கொப்ப மாற்றிக் கொள்ளுந் தன்மையில்லாத தாலும், நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகின்றனர்.

பண்ணையாட்கள், விவசாயக் கூலிகள் இவர்கள் நிலைமை இன்னும் பரிதாபகரமானது. காலை 5 மணிக்கெழுந்து பகல் முழுதும் உழைத்தாலும், இவர்கள் தரித்திரம் விடிவதில்லை. மூன்று பைசாவுக்கு சீமை யெண்ணெய் வாங்கி விளக்கேற்றிக் கொள்ளவும் வகையின்றி, அந்திப் பொழுதின் மங்கிய வெளிச்சத்தில் கஞ்சி குடித்து விட்டுப் பெண்டு பிள்ளைகளை விட்டு பண்ணாடியின் தோட்டத்துக் களத்திலும் பட்டிப் புழுதியிலும், பட்டி நாயுடன் படுத்துக் காவல் காக்க வேண்டியது பண்ணையாளின் வாழ்க்கை. பண்ணைகளில் சேராது, கண்ட கூலிக்குப் போகும் கூலியின் நிலை கொஞ்சம் மேலானது என்றாலும், இவனுக்கு வருஷ முழுவதும் கூலி கிடைப்பதில்லை. கூலி தேடிப் பத்துமைல் பதினைந்து மைல்களுக்கப்பாலுள்ள பட்டணங்களுக்கு வர வேண்டியிருக்கிறது. இவன் மனைவி, ஒரு சுமை புல்லோ, விறகோ சுமந்து வந்து பட்டணத்தில் ஓரணா, இரண்டணாவுக்கு விற்று, உப்புப்புளி வாங்கிக் கொண்டு போக வேண்டியவளாக இருக்கிறாள். கிராமங்களிலிருந்து காய்கறி, தயிர், பால் முதலியவற்றைக் கொண்டு வந்து பட்டணங்களில் விற்று ஜீவனம் செய்பவர்கள், பட்டணங்களை யடுத்துள்ள சுற்றுக்கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானவராயிருக்கின்றனர். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடியானவர்கள், பண்ணையாட்கள், கூலிகள் முதலியவர்களின் வாழ்க்கை நிலை இவ்வாறிருக்கும் போது, இவ்விதக் கிராம வாழ்க்கைக்குப் போவதன் மூலம் நமக்குக் கதி மோட்சம் ஏற்படும் என்று சொல்வது எவ்வளவு வஞ்சகம்!! எவ்வளவு புரட்டு!!!

### பட்டண வாழ்க்கையின் சிறப்பு

கிராமங்களில் என்னென்ன குறைகளும் கொடுமைகளும் இருக்கின்றனவோ, அவைகளில் ஒன்றும் பட்டணங்களில் இல்லை.

1. ஜாதிக் கட்டுப்பாட்டின் கொடுமைகள் இல்லை. தனி மனிதன் சுதந்திரத்திற்கும், உரிமைக்கும் கிராமங்களில் உள்ள தடைகள் பட்டணங்களில் இல்லை.
2. படிப்புக்கும், வைத்திய உதவிக்கும் வசதிகள் இருக்கின்றன.
3. தொழில் முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் விரிந்த வசதியும், ஆதரவும் பட்டணங்களில் போல் கிராமங்களில் இல்லை.
4. அறிவு வளர்ச்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் ஏற்ற வசதிகளும் சாதனங்களும் இருக்கின்றன.
5. உழைப்புக்குத் தக்க கூலி கிடைக்கிறது.
6. அறிவின் திறமைக்குத் தக்கபடி உயர்வடைய வசதிகள் அதிகம்.
7. எக்காரியத்துக்கும் எவனும் போட்டி போடலாம்.

மேற்கூறியபடி, சில கஷ்டங்கள் இன்மையும், பல சௌகரியங்கள் உண்மையும், பட்டணவாசத்தை மேன்மையுள்ளதாகவும், யாவரும் விரும்பத் தக்கதாகவும் செய்கின்றன. வாழ்க்கையில் முன்னேற்றமடைய விரும்பும் ஒவ்வொருவனும், பெரிய பட்டணங்களில் தங்கி வாழவே விரும்புகிறான். நூறு காந்திகள் கூடிப் பிரசாரம் செய்த போதிலும், இவ்வுலக சுக போகங்களை விரும்புகிறவனையும், இன்ப வாழ்க்கையின் ருசியறிந்தவனையும், அறிவை வளர்க்க விரும்புபவனையும், கிராமத்திற்குப் போகச் செய்ய முடியாது. "கிராமத்திற்குப் போ" என்று உபதேசம் செய்கிறவன் எவனும் தன்னைப் பொறுத்த மட்டில் கிராமத்திற்குப் போய், பட்டிக்காட்டானாக, மங்கி, மழுங்கிப் போகச் சம்மதிக்கிறதில்லை. பிறர்க்கு மட்டும் உபதேசம் செய்ய முன் வருகிறான். காரணம் சுயநலம், பயம். பட்டிக்காட்டான் பட்டணத்திற்கு வந்து நாகரிக வாழ்க்கையின் ருசியறிந்து விட்டால், பிறகு அவன் திரும்பவும் பட்டிக் காட்டிற்குப் போய் வாழ விரும்ப மாட்டான். நாட்டுப்புற வாசிகளை இது வரை ஏமாற்றி வாழ்ந்து வந்த படித்த பட்டணவாசிகளின் சுகஜீவன வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடும். ஏமாற்றப்படக் கூடியவர்களின் எண்ணிக்கை குறைந்தால், ஏமாற்றுகிறவர் வருத்தப்படுவது இயற்கை. எல்லோரும் நாகரிக வாழ்க்கைக்குப் போட்டி போட்டால் அவசியமான உணவுப் பொருள்களையும், உடைத்தாதுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய ஆட்கள் இல்லாமற் போய்விடும் என்ற பயமும் சிலருக்கிருக்கலாம்.

ஆனால், இந்த பயம் ஆதாரமற்றது. உழவன் வயற்புறத்தில், சேற்றிலும், வதியிலும் வசிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. நகரங்களிலிருந்து கொண்டு நாகரிக வாழ்க்கை நடத்திக்கொண்டு, இப்போது செய்வதை விடச் சிறப்பாக விவசாயம் செய்ய முடியும்....

**ருஷியாவைப் பார்**

புரட்சிக்குப் பின் ருஷியாவில் ஏற்பட்ட மகத்தான மாறுதல்களில் மிக முக்கியமானது, பட்டிக்காட்டு வாழ்க்கையை ஒழித்து நாடெங்கும் நகர வாழ்க்கையை ஏற்படுத்தியதாகும். இலட்சம் இரண்டு லட்சம் ஜனங்கள் வசிக்கக் கூடிய பெரிய பட்டணங்களை நாட்டின் பலபாகங்களில் நிர்மாணித்து, அவ்வப் பிரதேசத்தின் வசதிகளுக்கேற்ற இயந்திர சாலை களையும் ஏற்படுத்தி, சுற்றுப் பக்கத்தில் குக்கிராமத்தில் வசித்து வந்த மக்களை யெல்லாம் நகரங்களில் குடியேற்றி, இயந்திர சாதனங்களைக் கொண்டு தொழில் செய்யவும், நாகரிக வாழ்வின் நன்மைகளைப் பெறவும் செய்திருக்கின்றனர். இதன் பலனாக 100க்குப் பத்து பேர் கூட படிக்காதிருந்த நாட்டில் 10 வருஷங்களில் 100க்கு 99 பெயர் படித்தவர்களாகவும், அதற்கேற்ப வாழ்க்கை நிலைமை எல்லாத் துறைகளிலும் உயரவும் முடிந்தது கூட்டுப் பண்ணைகளில், இயந்திரக் கருவிகளைக் கொண்டு விவசாயம் செய்யப் படுவதன் மூலம் முன் இருந்ததை விடப் பத்து மடங்கு அதிகமான உணவுப் பொருள்களும், மற்ற பொருள்களும் விளைவிக்கப் பட்டு மக்களுக்குப் பஞ்சம், பசி யின்னதென்பது மறந்து போய் விட்டது. இயந்திர வாகனங்கள் ஏராளமாக இருப்பதால், 10, 15 மைல்களுக்கப்பால் உள்ள பண்ணைகளுக்குச் சிறிதும் கஷ்டமில்லாமற் போய் வேலை செய்து விட்டு மாலையில் நகரங்களுக்குத் திரும்பி வந்து நாகரிக வாழ்க்கையின் சகல சௌகரியங்களையும் அனுபவிக்கின்றனர். உழவன் மண்ணைக் கவ்விக் கொண்டு காத்துக்கிடக்கும் அநாகரிக நிலை மாறி விட்டது.

...செல்வ நிலையென்பது, வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் நேரமும் குறைந்து ஓய்வுக்கும் கலைப் பயிற்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் வசதியும் நேரமும் மிகுந்துள்ள நிலைமையாகும். நாள் முழுதும் வேலை செய்ய வேண்டிய நிலை அடிமை நிலை. ஏழ்மை நிலை. அநாகரீக நிலை. குறிப்பிட்ட சிறிது நேரம் மட்டும் உழைத்து அதன் பயனாகத் தனக்கு வேண்டிய அனைத்தையும் அடையும் நிலைமை, நாகரிக நிலை எஜமான் நிலை. விஞ்ஞானமும், இயந்திரமும், மனிதனை இவ்வுலகின் எஜமானனாக்குகின்றன. ஆகையால் பழமையான நம் நாட்டில் விஞ்ஞானம் வளரவும் இயந்திரங்கள் பெருகவும் முயற்சிப்பது அறிவுடைமையாகும்.

பட்டிக்காட்டு முட்டாளும், நாட்டுப் புறத்துக் காட்டுமிராண்டியும் முன்னேற்றமடைய ஒரே மார்க்கந்தான் உண்டு. இவர்கள் எல்லோரும் பட்டண வாசம் செய்ய வேண்டும். கிராம வாழ்க்கையை விட்டு நாகரிக நகர வாழ்க்கை நடத்த வேண்டும்.

பகுத்தறிவு (மா.இ.) கட்டுரை மே 1936

நன்கொடை

**காட்டாறு வளர்ச்சி நன்கொடை**

**திருப்பூர் மதுமிதா அவர்கள் பிறந்தநாள் (17.11.2015) நன்கொடையாக 1000.00 வழங்கியுள்ளார்.**
**துபாயில் பணியாற்றும் தோழர் செங்கை நிலவன் அவர்கள் காட்டாறு வளர்ச்சி நிதியாக 3000.00 வழங்கியுள்ளார்.**
**தோழர்களுக்கு காட்டாறு குழுவினரின் நன்றி.**



# கிழவன் மறைவுற்ற நாளின் உறுதிமொழி

கலகம் செய்தான் கலகம் செய்தான் !
கொள்கை ஊன்றிக் கலகம் செய்தான்
வேதியம் ஒழிந்திடக் கலகம் செய்தான்
பார்ப்பன பனியா சூழ்ச்சியழிந்திடவே
கலகம் செய்தான் கலகம் செய்தான் !

ஊரையும் சேரியையும் பிரித்துவைத்த
நாறும் சாதியொழியக் கலகம் செய்தான் !
வேரான சாதிக்கு வித்திட்ட
வீண்மதம் ஒழியக் கலகம் செய்தான் !

வன்கொள்கைப் பெண்கள் தமைவாட்டி
பண்பாடு பேசியே பதுமைகளாக்கிட்ட
ஆணாதிக்க மனுவைக் கொளுத்திடவே
கலகம் செய்தான் கலகம் செய்தான் !

தீண்டாமை ஒழிந்திடத் தெருவெல்லாம்
வேண்டாதார் செருப்படிவாங்கிக் கொண்டே..
மாண்டாலும் மண்ணில் நிலைத்திடுமாறு..
கலகம் செய்தான் கலகம் செய்தான் .!

கிழவன் செய்தவை கலகமென்றால்
மறவாமல் நாமும் அதைச் செய்வோம்..!
குன்றாக் கொள்கை வாழ்வதனை
என்றும் வாழ்வினில் கடைப்பிடிக்க
குடியரசுப் பள்ளியில் பயின்றே நாம்
வடிப்போம் பண்பாட்டுப் புரட்சிதனை .!

சட்டையில் மட்டும் கருப்புகொள்ளாது
பட்டைதீட்டிடும் கொள்கை கொண்டு
ஆரியம் அழிந்திடச் சாட்டை கொள்வோம்
அதுவே கிழவன்வழி நடக்க அவன்
மறைவுற்ற நாளின் உறுதிமொழி .!

**- மலரினியன்**

- குண்டூசி

# தலை(நகரு)க்கு மேல் வெள்ளம்

காலையில் எழுந்து அரை மணி நேரம் நடைப் பயிற்சி போனா உடம்புக்கு நல்லது என மருத்துவர் சொன்னால் நீச்சல் பயிற்சி தான் எடுக்க முடியுமெனெ சென்னைவாசிகள் சொல்லிவிடலாம், மரம் வெச்சா மழை பெய்யும் எதைச்செஞ்சா மழை நிற்கும் என்பது போலாகிவிட்டது சென்னையின் நிலை.

வெள்ளம் நகரை ஆக்கிரமிப்பு செய்ததைவிட நீர் நிலை அக்கிரமிப்பு செய்திகள் ஊடகங்களை ஆக்கிரமித்தாகி விட்டது, இந்தப் பரபரப்புகளிடையே எல்லோரும் கவனிக்கத் தவறிய அல்லது கவனிக்க மறந்த செய்தி சென்னை மாநகரின் மக்கள் அடர்த்தி, 2011 கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் அடர்த்தி 555 பேர்- ஒரு சதுர கிலோ மிட்டருக்கு, ஆனால் சென்னையில் மட்டும் 26,903 பேர்- ஒரு ச.கீமிக்கு, தமிழகத்தின் மற்ற அனைத்து பகுதிகளின் சராசரியை விட 48 மடங்கு அதிகம். இதுவே சென்னையின் அவலத்திற்குக் காரணம்.

உடம்புக்குத் தலை முக்கியம் தான் அதுபோலத்தான் நாட்டுக்கும், ஆனால் இங்கே தலை மட்டுமே பிரதானம் என்பது போல இருப்பதுதான் சிக்கல், உடல் முழுதும் சீராக வளர்வதுதான் வளர்ச்சி, குறிப்பிட்ட பாகம் மட்டும் வளர்வது புற்று நோய், அது போலத்தான் சென்னையின் வளர்ச்சியும் குவிந்து கிடக்கும் தொழில் வாய்ப்புகள் தமிழக மக்களை சென்னையை நோக்கிப் படையெடுத்து வரவழைக்கிறது, பொழைக்க வழி தேடிப் பட்டணம் போவதென்பது நம் தாத்தா காலப் பழக்கம், அதை நாம் தவறென்று கூறவில்லை. தவறு அரசுகள் மேல்தான்.

தொழில்நுட்பம் வளராத காலத்தில் சொன்ன ஒரு வார்த்தையை இன்னும் பிடித்து தொங்கிக் கொண்டிருக்கிறது, அதுதான் நிர்வாக வசதி, அந்த நிர்வாக வசதியைக் காரணம் காட்டி சென்னை தன் வசதியை பெருக்கிக் கொண்டது, குவிந்து கிடக்கிற அரசு அதிகார மையங்கள், அனைத்துத் துறை சார்ந்த தலைமை அலுவலகங்கள், திரைப்பட, ஊடகத்துறைகள், தகவல் தொழில் நுட்பம் எனவும் அதனை ஒட்டிய அபரிமிதமான வளர்ச்சியின் விளைவே 26,903/ ச.கிமீ மக்கள் தொகை..

கணினி உலகத்தில் உலகமே கிராமமாய்ச் சுருங்கிவிட்ட இந்நாளில் குவிந்து கிடக்கிற அரசின் அதிகார மையங்களைத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுப்பதே சரியான நடவடிக்கையாக இருக்கும் இதுவே சென்னையை நோக்கி வரும் சாமானியனின் வருகையைக் குறைக்கும் வழி. அதை விடுத்து எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வீண்.

திருச்சியோ, மதுரையோ, கோவையோ தமிழகத்திற்குக் கட்டாயம் தேவை இன்னுமொரு துணைத் தலைநகரம். அதன் மூலம் குவியல் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே சரியான கோரிக்கையாகும்.

எது,எப்படியோ வந்த மழை வெள்ளக் களத்தில் பல இடங்களில் ஜாதி, மதம் காணாமல் போயிருப்பதை பார்க்க முடிகிறது, மனித மனங்களிலிருந்து மதம் துடைத்தெறியப் பட்டால் மகிழ்ச்சியே .



## வெள்ள நீரில் கலந்த சாதியம்:

# கடலூரில் நிவாரணம் மறுக்கப்படும் தலித் மக்கள்

- மு.வி.நந்தினி
இதழியலாளர்

தமிழகத்தில் பெய்த பெருமழையில் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் கடலூர். இந்த பாதிப்புகளில் 90 சதவிகிதம் பாதிக்கப்பட்டிருப்பது தலித் மக்களே என்கிறது இந்த அறிக்கை. National Campaign for Dalit Human Rights (NCDHR), Social awareness Society of Youth (SASY) இணைந்து கடலூரில் 20 கிராமங்களில் ஆய்வு நடத்தியது.

* இந்த கிராமங்களில் 90 சதவிகித தலித் மக்களின் குடிசைகள், வீடுகள் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டன.

* பயிர்களும் வெள்ளத்தால் வீணாகியிருக்கின்றன. கால்நடைகளை இழந்திருக்கிறார்கள்

* ஆறுகளின் கரையோரங்களில் நீர்நிலைப்பகுதிகளில் தலித்துகளின் குடியிருப்புகள் ( அதாவது ஊருக்கு ஒதுக்குப்புறமாக) அமைந்திருந்ததும் அதிகப்படியான சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

* கடலூர் மாவட்டத்தில் தலித்துகளின் வசிப்பிடங்களில் பள்ளிகள், சமூகக் கூடங்கள் இல்லை. கடும் மழையிலும் வெள்ளத்திலும் திறந்த வெளிகளில் கழித்திருக்கிறார்கள். குறிப்பாக கொங்குராயன்பாளையம், அகரம், அம்பேத்கர் நகர் போன்ற கிராமங்கள்.

* அரசு மீட்புப் பணிகளுக்கு கடலூரில் உள்கிராமங் களுக்குச் செல்லவில்லை. சில்லான்குப்பம், காடுவெட்டி, வரகூர்பேட்டை, அன்னவல்லி போன்ற தலித்துகள் அதிகம் வசிக்கும் குக்கிராமங்களுக்கு மீட்புப் படையினர் செல்லவில்லை.

* வடக்குத்துறை, கொங்குராயன்பாளையம் போன்ற பகுதிகளில் தலித் மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப் பட்டிருக்கிறார்கள். கொங்குராயன்பாளையத்தில் 'மேல் சாதியினர்' எனச் சொல்லிக் கொள்ளும் மக்கள், தலித் மக்களுக்கு பொதுக் குடிநீர் உபயோகிக்க அனுமதிக்கவில்லை.

* அலமேலுமங்காபுரத்தில் அரசு ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமுக்கு 'மேல்சாதியினர்' பிரச்சினை செய்வார்கள் என்று தலித்துகள் தங்களுடைய உடல்நலை பரிசோதித்துக் கொள்ள வரவில்லை.

* அலமேலுமங்காபுரம், நாலாந்தீவு, வடக்குத்துறை போன்ற ஊர்களில் வெள்ளநீரோடு, கழிவு நீரும் கலந்து தேங்கியிருப்பதால் நோய்கள் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# மதச்சார்பின்மைக் கூப்பாடு

கவிஞர் தமிழேந்தி

மக்களவை, மாநிலங்களவை
இரண்டிலும்
மதச்சார்பின்மைக் கூப்பாடு!

அம்பேத்கரே
அரசியல் சட்டத்தில்
இச்சொற்கோவையைச்
சேர்க்க வில்லையாம்
அலறுகிறார் இராசநாத்சிங்

'அரிசனங்கள்' என்ற
சொல்லைக்கூடத்தான்
அம்பேத்கர் சேர்க்கவில்லை


ஏனெனில் அந்தச்சொல்
காந்தியம் கழிந்த
கழுதைவிட்டை
காவிகள் பொறித்த
காக்கா முட்டை

நால்வருணம் போற்றிய
பூணூல் கூட்டம்
நமைஏய்க்கப் போட்ட
நாமப்பட்டை

'மதச்சார்பின்மை' எனில்
எந்த மதத்தையும்
அரசுடன் சாராமல்
தள்ளிவைத்தல்

எல்லா மடமைக்கும்
கொள்ளி வைத்தல்

முடைநாற்றப் பழமைக்கு
மொத்தமானதோர், முற்றுப்
புள்ளி வைத்தல்



பெரியார்தான் ஒருமுறை
கிண்டலடித்தார்:

பெண்கள்
மாநாடு கூட்டிப்
பேசினார்களாம்
'பதிவிரதை' என்பதன் பொருள்
எல்லா ஆண்களையும்
கணவன்போலக் கருதி
ஏற்றல் என்று!

அபத்தம் இதனினும்
வேறொன்று ஆகமோ?

அரோகரா...
அல்லாஹு அக்பர்...
ஆலேலூயா...ஆலேலூயா...

கண்டவனும்
தொண்டையைக் கத்தவிட்டு
மண்டை உடைத்துச் சாவதா
மதச்சார்பின்மை?

திப்புவின்
தேசபக்தியைவிடத்
துப்புக்கெட்ட ஆர்.எஸ் .எஸ்.
தூய்மையானதோ?

வேள்வித்தீயில்
முழுப்பசு மாட்டையும்
சுட்டுத் தின்றவன்
இன்று
கேள்வி முறையின்றிக்
கிளம்பிவிட்டான்

'அணில் கட்டிய'
சேதுப்பாலத்தைக் காக்க
வெட்கங் கெட்ட நீதிமன்றம்
விளக்குப் பிடிக்க அரசியல் சட்டம்

மக்கள் புரட்சியின்றி
மாற்றமில்லை
மானுட விடுதலையே
நமது எல்லை!



# தோழர் அம்பேத்கரின் 59 ஆவது நினைவுநாள்

"இந்து மதத்தின் மனசாட்சி, அறிவார்ந்த கேள்வி, சிந்தனை போன்றவைகளுக்கு முக்கியத்துவம் இல்லை. முன்னேற்றத்திற்கு வழிவகையும் இல்லை. எனவே இந்து மதத்தின் ஒரு அங்கமாக நீடிக்கின்ற வரையில் கருத்துச் சுதந்திரத்தை எதிர்பார்க்கவே முடியாது".

## டிசம்பர் 6

சாதி அமைப்புமுறை தொடரும் வரை தான் பிராமண வகுப்பு உயர் வகுப்பாக இருக்கும். எவ்வொருவரும் தம் கைகளில் உள்ள அதிகாரத்தைத் தாமே விரும்பி ஒருபோதும் கைவிட மாட்டார்கள். பிராமணர்கள் பலநூற்றாண்டுகளாக மற்ற சாதிகளின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்துள்ளார்கள். அவர்கள் தாமே விரும்பி அதே அதிகாரத்தை கைவிட்டு பிறரைத் தமக்குச் சமமாக நடத்துவார்கள் என்று ஒருபோதும் எதிர்பார்க்க

முடியாது. ஜப்பானிய சமுராய்களுக்கு இருந்த தேசப்பற்று பிராமணர்களுக்கு கிடையாது. புதிய சமத்துவத்தின் மீதான தேச ஒற்றுமைக்காக சமுராய்கள் தங்கள் தனிச்சலுகைகளை தியாகம் செய்ததுபோல பிராமணர்கள் தியாகம் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது பயனற்ற செயலாகும். பிற சாதி இந்துக்கள் இதுபோன்ற காரியத்தைச் செய்வார்கள் என்றும் நாம் ஒருபோதும் எதிர்பார்க்க இயலாது. மராத்தியர்கள் போன்ற மற்ற சாதியினர்களாகிய சாதி இந்துக்கள் சலுகை பெற்ற வகுப்பினருக்கும் உரிமை மறுக்கப்பட்ட வகுப்பினருக்கும் இடைநிலையில் உள்ளவர்கள் ஆவார்கள்.

சலுகை பெற்ற வகுப்பினர்கள், மிகச் சிறிய தியாகத்தோடேயே தங்கள் தாராளத்தைக் காட்டிக் கொள்ள முடியும். உரிமையற்ற வகுப்போ இலட்சியமும் ஆர்வமும் மிக்கதாயிருக்கும்; ஏனெனில் சுயஆர்வத்தின் அடிப்படையிலாவது சமூக சீர்திருத்தத்தைக் கொண்டுவர விரும்புபவர் களாயிருப்பர்.

அதன் விளைவாக சுயவிருப்பத்தைவிட கொள்கைகளுக்கு முக்கியத்துவம் தரும் வகுப்பாக அது இருக்கிறது. பிராமணர்கள் தவிர்த்த மற்ற சாதி இந்துக்கள் இதற்கு இடைநிலையில் இருப்பவர்களாவர்; அவர்கள் தங்களின் மேல்வகுப்பாரின் பெருந்தன்மையான தாரள நடத்தையையோ, தங்களின் கீழ்வகுப்பார் வளர்த்துக் கொண்டுள்ள கொள்கைப் பிடிப்பையோ நடைமுறைப்படுத்த முடியாதவர் களாயிருக்கிறார்கள். இதனால்தான் தீண்டப்படாதவர்களை விடத் தங்கள் அந்தஸ்து மேலானதாயிருக்க வேண்டுமென இந்த வகுப்பினர் நினைக்குமளவிற்கு - பிராமணர்களுக்குச் சமமான அந்தஸ்த்தைப் பெறுவதில் அக்கறையற்றவர் களாக இருக்கிறார்கள்.

- தோழர் அம்பேத்கர்

www.ambetkar.in